# சிதம்பரச் செய்யுள் கோவை





தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்
சரசுவதி மகால் நூலகம்
தஞ்சாவூர்.

தஞ்சாவூர் சரசுவதி மகால் நூலக வெளியீட்டு எண். 400

# சிதம்பரச் செய்யுட் கோவை

பதிப்பாசிரியர்:

**ய. மணிகண்டன்,** எம். ஏ., எம். ஃபில்.,
முன்னாள் தமிழ்ப் பண்டிதர்,
சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர்.

**தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்**

**சரசுவதி மகால் நூலகம்,**

தஞ்சாவூர்.

2006

[ விலை : ரூ. 60-00

## நூற்பதிப்பு விளக்கக் குறிப்பு


| | | |
|---|---|---|
| நூற்பெயர் | : | சிதம்பரச் செய்யுட் கோவை |
| பதிப்பாசிரியர் | : | ய. மணிகண்டன், எம். ஏ., எம். ஃபில்., |
| வெளியிடுபவர் | : | இயக்குநர்,<br>சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர். |
| வெளியீட்டு எண். | : | 400 |
| மொழி | : | தமிழ் |
| பதிப்பு | : | இரண்டாம் பதிப்பு |
| வெளியீட்டு நாள் | : | செப்டம்பர், 2006 |
| தாள் | : | TNPL 11 கி. கி |
| நூல் அளவு | : | 25 x 19 செ. மீ. |
| பக்கங்கள் | : | 116 |
| படிகள் | : | 250 |
| எழுத்து | : | 12 புள்ளி |
| அச்சிட்டோர் | : | சரசுவதி மகால் நூலகம். |
| புத்தகக்கட்டு | : | மெலிந்த அட்டை |
| பொருள் | : | யாப்புச் சான்றிலக்கிய நூல் |
| விலை | : | ரூ. 60-00 |

# வெளியீட்டாளர் முகவுரை

தமிழ் யாப்பியல் வரலாறு தொல்காப்பியத்தினும் பழைமை வாய்ந்த வேர்களைக் கொண்டது. தொல்காப்பியர் தமக்கு முந்தைய யாப்பிலக்கணிகளைத் தொல்காப்பிய நூற்பாக்களில் 'நல்லிசைப் புலவர்', 'யாப்பறி புலவர்', 'நூல்நவில் புலவர்', என்மனார் புலவர் எனக் குறிப்பிடலும், முந்தையோர் கூறிய யாப்பிலக்கணக் கூறுகளை எடுத்துரைத்தலும் யாப்பியல் வரலாற்றின் தொன்மையைக் காட்டுகின்றன.

யாப்பருங்கலக்காரிகைக் காலத்திற்குப் பின் யாப்பிலக்கண வரலாற்றில் ஒரு புதுவகை - தனிவகை நூல்கள் இடம்பெறுகின்றன. இவை "யாப்புச் சான்றிலக்கிய நூல்கள்" எனக் குறிக்கத்தக்கனவாய் உள்ளன. ஒரே நூல் இலக்கணமாகவும் இலக்கியமாகவும் விளங்குதல் இவ்வகை நூல்களில் தனிச் சிறப்பாகும். யாப்பிலக்கண நூல்கள் (குறிப்பாக யாப்பருங்கலககாரிகை) கூறுகின்ற பா, பாவின, தொடை வகைகளுக்கான சான்றுப்பாக்களைக் கொண்ட இலக்கியமாகவும், பாடல்தோறும் அவ்வவ்விலக்கணத்தை உரைநடையில் தருவனவாகவும் இவ்வகை நூல்கள் அமைந்துள்ளன.

இந்நூலகத் தமிழ்த்துறையின் 1602 (பி) எனும் ஓலைச்சுவடியை அடிப்படையாகக் கொண்டு, யாப்புச் சான்றிலக்கிய நூல்களுள் ஒன்றாகவும் உயர் இலக்கியமாகவும் திகழ்வது 'சிதம்பரச் செய்யுட்கோவை' யாகும். இது இந்நூலகத்தில் அப்போதைய தமிழ்த்துறைப் பண்டிதரான திரு. ய. மணிகண்டன் அவர்களால் பதிப்பிக்கப்பட்டது. பதிப்பாசிரியர் யாப்பிலக்கணக் கடலில் மூழ்கி முத்தெடுக்கும் முயல்வும் செயல்திறனும் உடையவர். தற்பொழுது சென்னைப் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராகப் பணியாற்றி வருகிறார். இது பருவ இதழ்ப் படைப்பு மற்றும் தனி நூல் திட்டத்தின்கீழ் 1999ல் வெளியிடப்பட்டது. தற்போது இரண்டாம் பதிப்பாக மலர்கிறது.

யாப்புச் சான்றிலக்கிய நூல்களுள் ஒன்றாகவும் உயர் இலக்கியமாகவும் திகழுவது 'சிதம்பரச் செய்யுட்கோவை' யாகும்.

சிதம்பரம் நடராசப் பெருமானைப் பரவும் இலக்கிய நூலாகவும், காரிகை நூற்பாவும் உரையும் கூறும் இலக்கணங்களுக்கான சான்றுப் பாடல்களைக் கொண்டநூலாகவும், காரிகையின் இலக்கணங்களை உரைநடையில் எடுத்து மொழியும் இலக்கணவியல்பமைந்த நூலாகவும் இச்"சிதம்பரச் செய்யுட்கோவை" அமைந்துள்ளது.

இந்நூலில் மொத்தம் 84 பாக்கள் உள்ளன. வெண்பா விகற்பம், வெண்பாவினம், ஆசிரியப்பா விகற்பம், ஆசிரியப்பாவினம், கலிப்பா விகற்பம், கலியினம், வஞ்சிப்பா, வஞ்சியினம், மருட்பா எனும் ஒன்பது பகுப்புகளை இந்நூல் கொண்டுள்ளது. ஒவ்வொரு செய்யுளின் கீழும் யாப்பிலக்கனக் குறிப்புகள் உரைநடையில் இடம்பெற்றுள்ளன. இக்குறிப்புகளில் சில, காரிகையின் உரைப்பகுதிகளை ஓரிருசொல் மாறுதலுடன் அமைந்தனவாகக் காட்சியளிக்கின்றன. காரிகையில் உறுப்பியல் முதல் ஒழிபியல் வரையிலான நூற்பாவும் உரையும் கூறும் பா, பாவின, தொடை முதலான இலக்கணங்களுக்கான சான்றுப் பாக்களை இந்நூல் கொண்டுள்ளது.

இந்நூல் வெளியீட்டுக்குத் தேவையான நிதியுதவியை நல்கியுள்ள நடுவண் அரசுக்கு என் நன்றியை உரித்தாக்குகின்றேன். இந்நூல் நன்முறையில் வெளிவர ஆவனசெய்துள்ள சரசுவதி மகால் நூலக நிருவாக அலுவலர் மற்றும் வெளியீட்டு மேலாளர் (பொறுப்பு) வகிக்கும் திரு. சாமி. சிவஞானம் அவர்களுக்கும், இந்நூலை நன்முறையில் அச்சிட்ட நூலகப் பதிப்புத்துறை பணியாளர்களுக்கும் நூல் வெளிவரத் துணைநின்ற ஏனையோருக்கும் என் இனிய பாராட்டுக்கள்.

**சா. விஜயராஜ் குமார்,** இ. ஆ. ப.,
மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும்
இயக்குநர்,
சரசுவதி மகால் நூலகம்.

*தஞ்சாவூர்*
*22-9-2006*

# உள்ளுறை

பக்க எண்


* ஆய்வு முகவுரை 1—14

நூல்

**வெண்பா விகற்பம்** **1—19**

குறள் வெண்பா 1—3
நேரிசை வெண்பா 3—6
இன்னிசை வெண்பா 6—11
பஃறொடை வெண்பா 12—16
சிந்தியல் வெண்பா 17—19

**வெண்பாவினம்** **19—24**

குறள்வெண்செந்துறை 19
குறள்வெண்டாழிசை 20
வெள்ளொத்தாழிசை 21
வெண்டுறை 22, 23
வெளிவிருத்தம் 23, 24

**ஆசிரியப்பா (விகற்பம்)** **24—27**

நேரிசை ஆசிரியப்பா 24, 25
இணைக்குறளாசிரியம் 25
நிலைமண்டில ஆசிரியம் 26
அடிமறி மண்டில ஆசிரியம் 27

**ஆசிரியவினம்** **27—31**

ஆசிரியத்தாழிசை 27, 28
ஆசிரியத்துறை 28, 29, 30
ஆசிரிய விருத்தம் 30, 31

**கலிப்பா விகற்பம்** **32—46**

**ஒத்தாழிசைக் கலிப்பா**
நேரிசையொத்தாழிசைக் கலிப்பா 32
அம்போதரங்க ஒத்தாழிசைக் கலிப்பா 33—35
வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பா 36—38

| | |
|---|---|
| **வெண்கலிப்பா** | 39 |
| **கலிவெண்பா** | 40 |
| **கொச்சகக் கலிப்பா** | |
| தரவு கொச்சகம் | 41 |
| தனிச்சொற் சுரிதகம் பெற்றுவந்த தரவு கொச்சகம் | 41, 42 |
| தரவிணைக் கொச்சகம் | 42 |
| சிஃறாழிசைக் கொச்சகம் | 43, 44 |
| பஃறாழிசைக் கொச்சகக் கலிப்பா | 44 |
| மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா | 45, 46 |
| **கலியினம்** | **47—50** |
| கலித்தாழிசை | 47 |
| கலித்துறை | 48 |
| கட்டளைக்கலித்துறை | 48, 49 |
| கலிவிருத்தம் | 49, 50 |
| **வஞ்சிப்பா** | **50—52** |
| குறளடி வஞ்சிப்பா | 50, 51 |
| சிந்தடி வஞ்சிப்பா | 52 |
| **வஞ்சியினம்** | **53, 54** |
| வஞ்சித் தாழிசை | 53 |
| வஞ்சித்துறை | 53 |
| வஞ்சி விருத்தம் | 54 |
| **மருட்பா** | **54—56** |
| புறநிலை வாழ்த்து மருட்பா | 54 |
| கைக்கிளை மருட்பா | 55 |
| வாயுறை வாழ்த்து மருட்பா | 55 |
| செவியறிவுறூஉ மருட்பா | 56 |
| அருஞ்சொற் குறிப்புரை | 57—71 |
| பாடவேறுபாடுகள் | 72—81 |
| இந்நூலின் உரையில் இடம்பெற்றுள்ள யாப்பிலக்கணக் கலைச்சொல் அகரநிரல் | 82—90 |
| செய்யுள் முதற்குறிப்பு அகரநிரல் | 91—94 |


——

# ஆய்வு முகவுரை

## தமிழில் யாப்பிலக்கண நூல்கள்

தமிழ் யாப்பியல் வரலாறு தொல்காப்பியத்தினும் பழைமை வாய்ந்த வேர்களைக்கொண்டது. தொல்காப்பியர் தமக்கு முந்தைய யாப்பிலக்கணி களைத் தொல்காப்பிய நூற்பாக்களில் 'நல்லிசைப் புலவர்', 'யாப்பறி புலவர்', 'நூல்நவில் புலவர்', 'என்மனார் புலவர்' எனக் குறிப்பிடலும், முந்தையோர் கூறிய யாப்பிலக்கணக்கூறுகளை எடுத்துரைத்தலும் யாப்பியல் வரலாற்றின் தொன்மையைக்காட்டுகின்றன.

தொல்காப்பியச் செய்யுளியல், பல்காயம், காக்கைபாடினியம், அவிநயம், சிறுகாக்கைபாடினியம், மயேச்சுரம், யாப்பருங்கலம், யாப்பருங்கலக்காரிகை, வீரசோழியம், சிதம்பரப் பாட்டியல், இலக்கணவிளக்கம், இலக்கணச் சூடாமணி, தொன்னூல் விளக்கம், முத்துவீரியம், சுவாமிநாதம், விருத்தப்பாவியல், வண்ணத்தியல்பு, அறுவகையிலக்கணம், ஏழாம் இலக்கணம், யாப்பதிகாரம், தொடையதிகாரம், யாப்பொளி, யாப்புநூல், கலையணி பூபதீயம், குமாரபூப தீயம், செய்யுள் இலக்கணம், தென்னூல், சிந்துப்பாவியல், எளிதாகப் பாட லாம், கவிஞராக, கவிபாடலாம், பாவலர் பண்ணை முதலிய நூல்கள் யாப்பிலக் கணத்தை ஒருபகுதியாகவும் முழுமையாகவும் கூறும் இலக்கண நூல்களாகும். இவை தமிழிலக்கியங்களில் காணப்படும் யாப்பு வடிவங்களை ஆராய்ந்து பதிவு செய்தனவாகவும், யாப்பியல் வளர்ச்சியைக் காட்டுவனவாகவும் அமைந்துள்ளன.

## யாப்புச் சான்றிலக்கிய நூல்கள்

யாப்பருங்கலக்காரிகைக் காலத்திற்குப் பின் யாப்பிலக்கண வரலாற்றில் ஒரு புதுவகை—தனிவகை நூல்கள் இடம்பெறுகின்றன. இவை "யாப்புச் சான்றிலக்கிய நூல்கள்" எனக் குறிக்கத்தக்கனவாய் உள்ளன. ஒரே நூல் இலக்கணமாகவும் இலக்கியமாகவும் விளங்குதல் இவ்வகை நூல்களின் தனிச் சிறப்பாகும். யாப்பிலக்கண நூல்கள் (குறிப்பாக யாப்பருங்கலக்காரிகை) கூறு கின்ற பா, பாவின, தொடை வகைகளுக்கான சான்றுப்பாக்களைக் கொண்ட இலக்கியமாகவும், பாடல்தோறும் அவ்வவ்விலக்கணத்தை உரைநடையில் தரு வனவாகவும் இவ்வகை நூல்கள் அமைந்துள்ளன.

இவ்வகை நூல்களில் முதல் நூலாகத் திருக்குருகைப்பெருமாள் கவிராயர் இயற்றிய 'பாப்பாவினம்' அமைந்துள்ளது. இந்நூல் மாலிய சமயப் பொருண்மையில் பதினாறாம் நூற்றாண்டில் தோன்றியுள்ளது.

இந்நூலையடுத்துப் பதினேழாம் நூற்றாண்டில் சிவனிய சமயப் பொருண்மையில் 'சிதம்பரச் செய்யுட் கோவை' முகிழ்த்தது. குமரகுருபரரால் இயற்றபட்ட சிறப்பான படைப்பாக்கமாக இது திகழ்கின்றது.

இவற்றையடுத்து இந்நூற்றாண்டில் திருவலங்கல் திரட்டு—பல்சந்தப் பரிமளம், திருவேங்கடவன் திருமண வரலாற்றுச் செய்யுள் நூல், எழில்விருத்தம், அரங்கன் கவிதை அமுதம் (திருவரங்கச் செய்யுட்கோவை), செந்தமிழ்ச் செய்யுட் கோவை எனும் ஐந்து நூல்கள் இவ்வகையினவாகத் தோன்றியுள்ளன.

## இவ்வகை நூல்களின் பொதுப்பெயர்—வகையின் பெயர்

தனியொரு வகையாக மதிக்கும் அளவிற்கு இந்நூல்கள் வளர்ச்சி பெற்றிருப்பினும் இந்த நூல்களின் வகைக்கு வரையறுக்கப்பட்ட பொதுப்பெயர் சுட்டப்பெற்று நிலைபேறடையவில்லை.

'யாப்பிலக்கண இலக்கிய நூல்'[1], 'யாப்பிலக்கியம்'[2] 'இலக்கியச் சான்று நூல்கள்'[3], 'சான்றிலக்கியம'[4], 'சான்றியல் நூல்கள்'[5], 'யாப்புச் சான்றிலக்கிய நூல்கள்'[6], 'செய்யுட்கோவை நூல்கள்'[7] எனப் பல பெயர்களால் இவ்வகை நூல்கள் அறிஞர்களால் குறிப்பிடப்பெறுகின்றன.

இவ்வகை நூல்களில் மூன்றின் பெயர்கள் 'செய்யுட்கோவை' எனும் பின்னொட்டுப் பெற்று முடிவது ஒரு பொது அமைதியாகக் காட்சியளிக்கின்றது.

## யாப்புச் சான்றிலக்கிய நூல்கள் பின்பற்றும் யாப்பிலக்கண நூல்கள்

யாப்புச் சான்றிலக்கிய நூல்களுள் பாப்பாவினம், சிதம்பரச் செய்யுட் கோவை, திருவலங்கல்திரட்டு — பல்சந்தப்பரிமளம், திருவரங்கச் செய்யுட் கோவை ஆகிய நான்கு நூல்கள் யாப்பருங்கலக்காரிகையைப் பின்பற்றுகின்ற சான்றிலக்கியங்களாகத் திகழ்கின்றன. இவற்றுள் பாப்பாவினம், தொல்காப்பியச் செய்யுளியலையும் அடியொற்றுதல் குறிப்பிடத்தக்கது. தொல்காப்பியத்தை அடியொற்றிக் கலிப்பா, பரிபாடலுக்குப் பாப்பாவினம் சான்றுப்பாடல்களைப் படைத்துள்ளது.

'யாப்பொளி' எனும் இலக்கண நூலைப் பின்பற்றித் 'திருவேங்கடவன் திருமண வரலாற்றுச் செய்யுள்' நூலும், 'விருத்தப்பாவியல்' எனும் இலக்கண நூலைப் பின்பற்றி 'எழில்விருத்தம்' நூலும், 'யாப்புநூல்' எனும் இலக்கண நூலைப் பின்பற்றிச் 'செந்தமிழ்ச் செய்யுட்கோவை' நூலும் சான்றிலக்கியங்களாகத் தோன்றியுள்ளன.

## சிதம்பரச் செய்யுட் கோவை

யாப்புச் சான்றிலக்கிய நூல்களுள் ஒன்றாகவும் உயர் இலக்கியமாகவும் திகழும் நூல் இங்குப் பதிப்பிக்கப் பெற்றுள்ள 'சிதம்பரச் செய்யுட்கோவை' யாகும்.

சிதம்பரம் நடராசப் பெருமானைப் பராவும் இலக்கிய நூலாகவும், காரிகை நூற்பாவும் உரையும் கூறும் இலக்கணங்களுக்கான சான்றுப் பாடல்களைக் கொண்ட நூலாகவும், காரிகையின் இலக்கணங்களை உரைநடையில் எடுத்து மொழியும் இலக்கணவியல்பமைந்த நூலாகவும் இச் 'சிதம்பரச் செய்யுட் கோவை' அமைந்துள்ளது.

யாப்புச் சான்றிலக்கிய நூல்களுள். சிதம்பரச் செய்யுட் கோவை மட்டுமே, யாப்பருங்கலக்காரிகையின் நூற்பாவும் உரையும் உறுப்பியல் முதல் ஒழிபியல் வரை கூறும் இலக்கணம் அனைத்தையும் பின்பற்றிச் சான்றமைக்கும் ஒரே இலக்கியமாகத் திகழ்கின்றது.

இவ்விலக்கியம், பதினேழாம் நூற்றாண்டில், மிகச் சிறந்த கவிஞரான **குமரகுருபரரால்** இயற்றப்பெற்றதாகும். குமரகுருபரரின் இப்படைப்புத் திறன் குறித்துத் தமிழறிஞர் வையாபுரிப்பிள்ளை அவர்கள்,

"செய்யுளிலக்கணத்தில் இவர் எத்துணை வல்லவர் என்பது இவரது சிதம்பரச் செய்யுட் கோவையால் விளங்கும்"[8] என்றும்,

அறிஞர் ச. வே. சுப்பிரமணியம் அவர்கள்,

> "குமரகுருபரர் பல பிரபந்தங்கள் படைத்த நிலையிலும், யாப்புக்குச் சான்றிலக்கியமாக மாறன் பாப்பாவினத்தையொத்துச் சிதம்பரச் செய்யுட் கோவை இயற்றியளித்த தன்மையிலும், யாப்பியல் வரலாற்றில் தனித்தொண்டு புரிந்துள்ளார்."[9]

என்றும் குறிப்பிட்டுள்ளமை நோக்கத்தக்கன.

## இந்நூல் தோன்றக் காரணம்

குமரகுருபரர் இந்நூலை இயற்றியமைக்கு இருவேறு காரணங்கள் இலக்கிய வரலாற்றாசிரியர்களால் சுட்டப்படுகின்றன. குமரகுருபரர் வாழ்வில் நிகழ்ந்ததாகக் கூறப்படும் நிகழ்ச்சிகளிலிருந்து இக்காரணங்களை இலக்கிய வரலாற்றாசிரியர்கள் எடுத்துரைக்கின்றனர்[10]

குமரகுருபரர் சிதம்பரத்தில் தங்கியிருந்த காலத்தில், சைவ அன்பர்கள் அவரை அணுகிக் காரிகையிலுள்ள இலக்கணங்களுக்குச் சைவ மரபாகச் சான்றுப் பாடல்களைக் கொண்ட இலக்கியத்தை, வைணவத்திற்குப் பாப்பாவினம்போலப் படைத்துத் தருமாறு வேண்டக் குமரகுருபரர் சிதம்பரச் செய்யுட் கோவையைப் பாடினார் என்பது ஒரு கருத்து.

இக்கருத்தையொட்டியதாகத் திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்களின் பின்வரும் பாடல்கள் அமைந்துள்ளன.[11]

"தில்லை மாநட ராசர்த நடனமுஞ் சேவித்
தெல்லை யில்லதோர் களிப்பினா லாவயி னிருப்பார்
வல்லை மாமடம் வளம்பல மலிதரச் சமைத்துத்
தொல்லை மாவினை தீர்ந்தவர் சூழ்சிறப் போடும். (203)

ஈண்ட வாவயி னிங்ஙன மமர்தரு மேல்லவ
கூண்ட செம்பொருள் செறியொரு மும்மணிக் கோவை
யாண்ட குஞ்சிதச் செய்யதா மரையடிக் கணிந்து
நீண்ட பேரின்ப முழுகினர் நிகழுமப் போது. (204)

பூதி சாதனக் கிழமையர் சிலர்வந்து போற்றி
நீதி நூன்முதற் பலவுரைத் தீர்நிகழ் யாப்பிற்
காதி நாளுதா ரணமெலாம் பரமத மவாவு
மோதி யாமுயு மாறருள் செய்விரென் றுரைப்ப. (205)

காவை நேர்தர மகிழ்ந்துளங் கனிந்துபல் செய்யுட்
கோவை யாப்பிற் காட்டினி துரைத்தனர் கொடுத்தார்
மாவை வெண்டிரை வாரியை விலங்கலை மாய்த்த
தூவை வேலுடைத் தோன்றலார் சேவடித் தொழும்பர்." (206)

(குமரகுருபர ஸ்வாமிகள் சரித்திரம்)

சிதம்பரச் செய்யுட் கோவையின் தோற்றம் குறித்து வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் தம் "புலவர் புராணத்"தில் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.[12]

"முன்னும் பின்னும்மெத் தனைதல மோவிதி
முறைப்படித் தொழுதிட்டான்;
தன்னு டைக்கவி விழைபவர்க் கேதுதி
சாற்றுதன் மையன்போலும் !
மன்னு தில்லையில் போய்ச்செய்யுட் கோவையென்
வண் தமிழ்த் தொடைசாத்திப்
பன்னு காசிகண், டரன்பதத் தொருகலம்
பகத்தொடை புனைந்தானே."

(குமர குருபர சாமி சருக்கம்—28)

குமரகுருபரர் சிதம்பரத்தில் தங்கியிருந்த காலத்தில், புராணப் பிரசங்கம் செய்துகொண்டிருந்த சைவாசாரியார் ஒருவர் குமரகுருபரரை 'வரகவி தானே ! இலக்கணக்கவியா?' என இகழ்ந்துரைத்ததாகவும், அதனைக் கேள்வியுற்ற குமர குருபரர், 'தாம் வரகவியோடு இலக்கணக் கவியும்தான்' என்பதை நிறுவும் பொருட்டுக் காரிகையில் சொல்லப்பட்ட எல்லா இலக்கணத்திற்கும் ஏற்பச் சிதம்பரச் செய்யுட்கோவையை இயற்றினார் என்பது இன்னொரு கருத்தாகும்[13].

இவ்விரு கருத்தையும் கதையையும் விரிவாக எடுத்துக் காட்டும் அறிஞர் மு அருணாசலம் அவர்கள், புராணப் பிரசங்கம் செய்த சைவாசாரியார் கூறியதன் விளைவாகக் குமரகுருபரர் இந்நூலைப் படைத்தார் என்பது பொருத்தமான தன்று எனத் தெளிவுபடுத்துகின்றார். சைவ அன்பர்கள் வேண்டியதற்கிணங்கச் சிதம்பரச் செய்யுட் கோவையைப் பாடிக்கொடுத்தார் என்பதே பொருத்தமானது என எடுத்துரைக்கின்றார்.[14]

## நூலமைப்பு

இந்நூலில் மொத்தம் 84 பாக்கள் உள்ளன. வெண்பா விகற்பம், வெண் பாவினம், ஆசிரியப்பா விகற்பம், ஆசிரியப்பாவினம், கலிப்பா விகற்பம், கலிபினம், வஞ்சிப்பா, வஞ்சியினம், மருட்பா எனும் ஒன்பது பகுப்புகளை இந்நூல் கொண்டுள்ளது. ஒவ்வொரு செய்யுளின்கீழும் யாப்பிலக்கணக் குறிப்புகள் உரைநடையில் இடம்பெற்றுள்ளன இக்குறிப்புகளில் சில, காரிகையின் உரைப்பகுதிகளை ஓரிருசொல் மாறுதலுடன் அமைந்தனவாகக் காட்சியளிக் கின்றன. காரிகையில் உறுப்பியல் முதல் ஒழிபியல் வரையிலான நூற்பாவும் உரையும் கூறும் பா, பாவின, தொடை முதலான இலக்கணங்களுக்கான சான்றுப்பாக்களை இந்நூல் கொண்டுள்ளது.

குமரகுருபரர் தாம் இயற்றிய 'நீதிநெறிவிளக்கம்' நூலில் இடம்பெற் றுள்ள 'நீரிற் குமிழி இளமை' எனத் தொடங்கும் நேரிசை வெண்பாவை இந் நூலிலும் (பாடல் எண் 9) இடம்பெறச் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இந்நூலின் யாப்பிலக்கண உரைப்பகுதிகள்

இந்நூலின் செய்யுள்களையடுத்து இடம்பெற்றுள்ள யாப்பிலக்கண உரைக்குறிப்புகள் குமரகுருபரராலேயே இயற்றப்பெற்றவை என உ. வே. சா. போன்ற அறிஞர் பலராலும் கொள்ளப்பட்டுவருகின்றன.

ஆயினும் மு. அருணாசலம் அவர்கள், இப்பொதுக்கருத்தினின்று வேறுபட்டுப் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.[15]

> "இந்த நூற்பாடல்கள் யாப்பின் இலக்கணத்துக்கு எடுத்துக் காட்டாகச் செய்யப்பட்ட பாடல்கள் ஆனமையால், பாடல் தோறும், இறுதியில் பாடலின் யாப்பிலக்கணம் ஒரு தனிக் குறிப்பாகத் தெளிவாகச் சொல்லப்பட்டுள்ளது. சில பாடல் களுக்குச் சொல்லப்பட்ட இலக்கணம் மிக்க விரிவாயும் உள்ளது. பாடல்கள் 1, 11, 12, 13, 21, 22, 23 முதலிய பாடல்கள் பார்க்க. குமரகுருபரர் பாடல்களை மட்டும் செய்து அளித்திருப்பின் பிற்காலத்தார் யாப்பிலக்கணக் குறிப்புக்களை எழுதிச் சேர்த்திருக்கிறார்களென்று தோன்றுகிறது."

## நூலில் சான்றமைக்கப்பட்டுள்ள பா, பாவின வகைகள்

இந்நூலின் செய்யுட்கள் மொத்தம் 84. பா, பாவினச் செய்யுள்களின் எண்ணிக்கை பின்வருமாறு இந்நூலில் இடம்பெற்றுள்ளன.

| | |
|---|---|
| வெண்பா விகற்பம் | 28 |
| வெண்பாவினம் | 12 |
| ஆசிரியப்பா விகற்பம் | 5 |
| ஆசிரியப்பாவினம் | 11 |
| கலிப்பா விகற்பம் | 12 |
| கலியினம் | 7 |
| வஞ்சிப்பா | 2 |
| வஞ்சியினம் | 3 |
| மருட்பா | 4 |
| கூடுதல் | 84 |

இந்நூலில் இடம்பெற்றுள்ள பா, பாவின வகைகளின் பெயர்களையும் அவற்றின் எண்ணிக்கையையும் பின்வரும் பட்டியலில் காணலாம்.

| பா | எண்ணிக்கை | பாவினம் | எண்ணிக்கை |
|---|---|---|---|
| **வெண்பா** | | | |
| குறள்வெண்பா | 3 | குறள்வெண்செந்துறை | 1 |
| நேரிசைவெண்பா | 6 | ஈற்றடி குறைந்து வந்த குறள்வெண்டாழிசை | 1 |
| இன்னிசைவெண்பா | 8 | குறள்வெண்செந்துறையோடு மாறுபட்டுவந்த குறள்வெண்டாழிசை | 1 |
| பஃறொடைவெண்பா | 6 | குறள்வெண்பா செப்பலோசையிற் சிதைந்துவந்த குறள்வெண்டாழிசை | 1 |
| சிந்தியல்வெண்பா | 5 | மூன்றடியாய் வெண்பாவேபோல் முடிந்த வெள்ளொத்தாழிசை | 1 |
| | | சிந்தியல்வெண்பா ஒருபொருள்மேல் மூன்றடுக்கிவந்த வெள்ளொத்தாழிசை | 1 |
| | | மூன்றடி வெண்டுறை | 1 |
| | | நான்கடி வெண்டுறை | 1 |
| | | வேற்றொலி வெண்டுறை | 1 |
| | | ஓரொலி வெண்டுறை | 1 |
| | | வெளிவிருத்தம் (மூன்றடி 1, நான்கடி 1) | 2 |
| **ஆசிரியப்பா** | | | |
| நேரிசை ஆசிரியம் | 2 | ஆசிரியத்தாழிசை | 2 |
| | | ஆசிரியத்துறை | 4 |
| இணைக்குறளாசிரியம் | 1 | அறுசீர் ஆசிரிய விருத்தம் | 1 |
| | | எழுசீர் ஆசிரிய விருத்தம் | 1 |
| நிலைமண்டில ஆசிரியம் | 1 | எண்சீர் ஆசிரிய விருத்தம் | 1 |
| | | ஒன்பதின்சீர் ஆசிரிய விருத்தம் | 1 |
| அடிமறி மண்டில ஆசிரியம் | 1 | பதின்சீர் ஆசிரிய விருத்தம் | 1 |
| **கலிப்பா** | | | |
| நேரிசை ஒத்தாழிசைக் கலிப்பா | 1 | | |
| அம்போதரங்க ஒத்தாழிசைக் கலிப்பா | 1 | | |
| வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பா | 1 | | |
| வெண்கலிப்பா | 2 | | |
| கலிவெண்பா | 1 | | |

| பா | எண்ணிக்கை | பாவினம் | எண்ணிக்கை |
|---|---|---|---|
| தனிச்சொல் சுரிதகம் பெறாத தரவு கொச்சகம் | 1 | கலித்தாழிசை | 3 |
| தனிச்சொல், சுரிதகம் பெற்ற தரவு கொச்சகம் | 1 | கலித்துறை | 1 |
| சிஃறாழிசைக் கொச்சகம் | 1 | கட்டளைக் கலித்துறை | 2 |
| பஃறாழிசைக் கொச்சகம் | 1 | | |
| மயங்கிசைக் கொச்சகம் | 1 | கலிவிருத்தம் | 1 |
| **வஞ்சிப்பா** | | | |
| குறளடி வஞ்சிப்பா | 1 | வஞ்சித்தாழிசை | 1 |
| | | வஞ்சித்துறை | 1 |
| சிந்தடி வஞ்சிப்பா | 1 | வஞ்சிவிருத்தம் | 1 |
| **மருட்பா** | | | |
| சமநிலைப் புறநிலை வாழ்த்து மருட்பா | 1 | | |
| வியனிலைக் கைக்கிளை மருட்பா | 1 | | |
| வாயுறை வாழ்த்து மருட்பா | 1 | | |
| செவியறிவுறூஉ மருட்பா | 1 | | |

## நூலில் சான்றமைத்து விளக்கப்பட்டுள்ள தொடைவகைகள்

சிதம்பரச் செய்யுட்கோவை மோனை, இயைபு, எதுகை, முரண், அளபெடை, அந்தாதி, இரட்டை, செந்தொடை ஆகிய தொடை வகைகளுக்கு மட்டுமன்றி, காரிகையின் ஒழிபியல் நூற்பாக்களில் கூறப்பட்ட கடைமுரண், கடையிணை முரண், பின்முரண், கடைக்கூழை முரண், இடைப்புணர் முரண், வருக்கவெதுகை, நெடிலெதுகை, இனவெதுகை, நெடின்மோனை, அனுமோனை ஆகிய தொடை வகைகளுக்கும், 'சிறப்பில' எனக் குறிப்பிட்டு நூற்பாக்களில் சுட்டப்பெற்ற உயிரெதுகை, இரண்டடியெதுகை, மூன்றாமெழுத்தொன்றெதுகை ஆகிய தொடை வகைகளுக்கும் பாக்களில் சான்றமைத்துக் குறிப்புரை வாயிலாக விளக்குகின்றது.

நூற்பாக்களில் இடம்பெறாமல் உரையில் மட்டும் சுட்டப்பெறுவனவாகிய தலையாகெதுகை, இடையாகெதுகை, உரையில் 'சிறப்பில' எனச்சுட்டப்பெறும் விட்டிசைவல்லொற்றெதுகை, வழியெதுகை, வழிமுரண், மருட்செந்தொடை ஆகியவற்றுக்கும்கூடச் சிதம்பரச் செய்யுட் கோவை சான்றமைத்துக் குறிப்புரையில் விளக்குகின்றது.

13 ஆதி முதலுணர்ந்தியா மன்புசெயப் பெற்றவா
ஓஒ பெரிது மரிதே யெளிதேயோ
போதந் துறைசெய்தான் மெய்துணியான் கைதுணிந்தான்
பேதுற்றும் வெஃகேம் பிற.

இதுவுமது. இதனுள் இரண்டாமடி ஈற்றுச்சீர் இரண்டும் முரணத் தொடுத்தமையால் **கடையிணைமுரண்தொடை.**

இதனுள்ளே தி எனக் குற்றெழுத்தும், ஆ என நெட்டெழுத்தும், ஓஒ என **அளபெடையெழுத்தும்,** ஆ என உயிரெழுத்தும், வெஃகேம் என ஆய்தவெழுத்தும், உணர்ந்தியாம் எனக் குற்றியலிகரமும், அன்பு எனக் குற்றியலுகரமும், துறை என ஐகாரக்குறுக்கமும் ஆக அசைக்கு உறுப்பாமெழுத்துப் **பதின்மூன்றுங்** காண்க.

முதலுணர்ந்தியாமெனக் **கனிச்சீர் வெள்ளையின் விரவி** வரலாகாமையிற் குற்றியலிகரம் அலகு பெறாவெனத் தள்ளிக் **கருவிளங்காய்** எனச் சீர் கொள்க. ஐகாரம் கை எனக் குறுகாதவழி நெட்டெழுத்தின் இயல்பிற்றாயும், துறை எனக் குறுகியவழிக் குற்றெழுத்தின் இயல்பிற்றாயும் நின்றவாறுங் காண்க. 13

---

13 கடையிணைமுரண்தொடை

'மற்றொருசார்
சுருதிற் கடையே கடையிணை பின்கடைக் கூழையுமென்
றிரணத் தொடைக்கு மொழிவ ரிடைப்புண ரென்பதுவே.' --காரிகை 40

கடையிணை முரண் ஆவது, கடை இரு சீர்க்கண் மறுதலைப்படத் தொடுப்பது.

காரிகை 40இன் உரைப்பகுதி

அசைக்குறுப்பாம் எழுத்து

'குறினெடி லாவி குறுகிய மூவுயி ராய்தமெய்யே
மறுவறு மூவின மைதீ ருயிர்மெய் மதிமருட்டுஞ்
சிறுநுதற் பேரமர்க் கட்செய்ய வாயைய நுண்ணிடையாய்
அறிஞ ருரைத்த வளபு மசைக்குறுப் பாவனவே.' --காரிகை 4

அசைக்கு உறுப்பாவன என்பது : இப்பதின்மூன்று திறத்து எழுத்தும் அசைக்கு உறுப்பு ஆவன என்றவாறு.
காரிகை 4இன் உரைப்பகுதி

14 பொன்மன்றம் பொற்றா மரையொக்கும் அம்மன்றிற்
செம்மல் திருமேனி தேனொக்கும் அத்தேனை
உண்டு களிக்குங் களிவண்டை யொக்குமே
எம்பெரு மாட்டி விழி.

இதுவும் **பலவிகற்பத்து இன்னிசைவெண்பா**. இதன் முதலடியிரண்டும் மூன்றாமெழுத்து ஒன்றிவரத் தொடுத்தமையால், **மூன்றாமெழுத்தெதுகை**. 14

15 ஆடகச் செம்பொன் அணிமன் றிடங்கொண்ட
பாடகச் சீறடியாள் பாகத்தான் — சூடகக்கைக்
கங்கையாள் கேள்வன் கழறொழூஉக் கைகூப்பி
நின்றிறைஞ்சச் சென்றிறைஞ்சுங் கூற்று.

இதுவும் இரண்டாமடியின் இறுதி தனிச்சொற்பெற்று **மூன்றுவிகற்பத்தான் வந்த இன்னிசைவெண்பா**. இதன் மூன்றாமடி முதற்சீரும், மூன்றாஞ்சீரும் முதலெழுத்து ஒன்றத்தொடுத்தமையால் **பொழிப்புமோனை**. இதனுள்ளே செம்பொன் எனத் **தேமாவும்**, அணிமன் எனப் **புளிமாவும்**, கழறொழூஉக் எனக் **கருவிளமும்**, ஆடகச் எனக் **கூவிளமும்** ஆக **ஆசிரியவுரிச்சீர் நான்கும்** வந்தன. 15

---

14 மூன்றாமெழுத்தொன்றெதுகை

'உயிராசிடையிட்
டிருக்கு மொருசா ரிரண்டடி மூன்றா மெழுத்துமொன்றி
நிரக்கு மெதுகையென் றாலுஞ் சிறப்பில நேரிழையே' —காரிகை 41

உயிரெதுகை ஆசெதுகை, இடையிட்டெதுகை, இரண்டடியெதுகை, மூன்றாம் எழுத்தொன்று எதுகை என்று ஒருசார் எதுகையும் உள; ஆயினும், பெரியோர் சிறப்பில, எனக்கொள்க.

காரிகை 41இன் உரைப்பகுதி

15 மூவிகற்ப இன்னிசை வெண்பா

துன்னும் என்று மிகுத்துச் சொல்லிய வதனால், இரண்டாம் அடியின் இறுதி தனிச் சொல் பெற்று, மூன்று விகற்பத்தான் வருவனவும் ........ இன்னிசை வெண்பா எனப் படும்.

—காரிகை 24இன் உரைப்பகுதி

பொழிப்புமோனை

'பொழிப்பு இடையிட்டு' —காரிகை 19

முதல் சீர்க்கண்ணும் மூன்றாம் சீர்க்கண்ணும் மோனை முதலாயின வரத்தொடுப்பது பொழிப்பு எனப்படும்.

காரிகை 19இன் உரைப்பகுதி

16 காதல் மகளிர் கலக்கக் கலக்குண்டு
பேதுற்றார் நெஞ்சும் பிழைத்தகன்றார் நன்னெஞ்சும்
போதம் படரும் புலியூரே—தாதுண்டு
வண்டுறங்கு நீள்சடையோன் வைப்பு.

இது மூன்றாமடியின் இறுதி தனிச்சொற் பெற்று **இரண்டு விகற்பத்தான் வந்த இன்னிசை வெண்பா.** இதன் முதலடி இரண்டாமெழுத்துத் தகர அகரமும், இரண்டாமடி இரண்டாமெழுத்துத் தகர உகரமுமாக வந்தமையான் **வருக்கவெதுகை.** 16

17 காமர் உயிர்செகுக்குங் கண்ணொன்றே—காமருசீர்
மாதர் நலனழிக்குங் கண்ணொன்றே—மாதருக்
கின்னா விரவொழிக்குங் கண்ணொன்றே—இந்நிலத்தில்
தன்னே ரிலாதான் தனக்கு.

இது அடிதோறும் **ஒரூஉத்தொடை** பெற்றுப் **பலவிகற்பத்தான் வந்த இன்னிசை வெண்பா.** இதன் மூன்றாமடி ஈற்றயற்சீரொழிந்து ஏனைமூச்சீரும் முதலெழுத்து ஒன்றத் தொடுத்தமையால் **கீழ்க்கதுவாய் மோனை.** 17

---

**16 இருவிகற்ப இன்னிசை வெண்பா**

துன்னும் என்று மிகுத்துச் சொல்லிய வதனால், ........, மூன்றாம் அடியின் இறுதி தனிச்சொல் பெற்று இரண்டு விகற்பத்தான் வருவனவும்........ இன்னிசை வெண்பா எனப்படும்.

---காரிகை 24இன் உரைப்பகுதி

**வருக்கவெதுகை**

'வருக்க நெடிலினம் வந்தா லெதுகையு மோனையுமென்
றொருக்கப் பெயரா லுரைக்கப்படும்'

—காரிகை 41

வருக்கவெழுத்தும், நெடிலெழுத்தும், இனவெழுத்தும், எதுகையும், மோனையுமாய் வந்தால், அவை வருக்கவெதுகை, நெடிலெதுகை, இனவெதுகை எனவும், வருக்கமோனை, நெடில்மோனை, இனமோனை எனவும் பெயரிட்டு வழங்கப்படும்.

—காரிகை 41இன் உரைப்பகுதி

**17 ஒரூஉத் தொடை பெற்ற பலவிகற்ப இன்னிசைவெண்பா**

துன்னும் என்று மிகுத்துச் சொல்லிய வதனால், ........தனிச்சொல் இன்றி, பலவிகற்பாகி, அடிதோறும் ஒரூஉத் தொடைபெற்று வருவனவும், நேரிசை வெண்பாவில் சிறிது வேறுபட்டு, நான்கு அடியான் வருவனவும், இன்னிசை வெண்பா எனப்படும்.

### பஃறொடை வெண்பா

18 செக்கர்ச் சடையிற் பசுங்குழவி வெண்டிங்கள்
முக்கண் ஒருவர்க்கு நும்மோ டிருசுடரும்
ஒக்க விழித்தலான் உய்ந்தே மொருநீயே
அக்க ணொருமூன்று மாயின்மற் றுய்வுண்டே
மைக்கண் மடவார் உயிர்க்கு,

**இது ஒருவிகற்பத்து ஐந்தடிப் பஃறொடை வெண்பா.** இது முதலடி இரண்டாஞ்சீரொழிந்து ஏனை முச்சீரும் முரணத்தொடுத்தமையான் **மேற்கது வாய் முரண்.** இரண்டாமடி ஈற்றயற்சீரொழிந்து ஏனை முச்சீரும் முரணத் தொடுத்தமையாற் **கீழ்க்கதுவாய் முரண். இது பிறப்பென்னும் வாய்பாட்டுக் குற்றுகர இயற்சீரான்** முடிந்தது. 18

---

*செய்யுள் எண் 17இன் அடிக்குறிப்புத் தொடர்ச்சி*

*.........இஃது அடிதோறும் ஒரூஉத்தொடை பெற்று, நேரிசை வெண்பாவில் சிறிது வேறுபட்டுவந்த இன்னிசை வெண்பா...........இஃது அடிதோறும் தனிச்சொல் பெற்று, மூன்று விகற்பத்தான் வந்த இன்னிசை வெண்பா,*

*—காரிகை 24இன் உரைப்பகுதி*

**(காரிகையுரை காட்டிய இவ்விரு இன்னிசை வெண்பா வகையையும் ஒரே பாடலில் இணைத்து அமைத்துள்ளார் குமரகுருபரர்—ப-ர்)**

**கீழ்க்கதுவாய் மோனை**

*'முதலிறுவாய்*
*வருசீ ரயலில மேல்கீழ் வகுத்தமை தீர்கதுவாய்* —காரிகை 19

*முதல் அயல் சீர்க்கண் இன்றி, ஒழிந்த மூன்று சீர்க்கண்ணும் மோனை முதலாயின வரத்தொடுப்பது மேற்கதுவாய் என்றும், ஈற்றயல் சீர்க்கண் இன்றி, ஒழிந்த மூன்று சீர்க் கண்ணும் மோனை முதலாயின வரத்தொடுப்பது கீழ்க்கதுவாய் என்றும் சொல்லப்படும்.*

*—காரிகை 19இன் உரைப்பகுதி*

18 **பஃறொடை வெண்பா**

*'அடிபலவாய்ச்*
*சென்று நிகழ்வ பஃறொடை யாம்'* —காரிகை 24

*நான்கு அடியின் மிக்க, பல அடியால் வருவது பஃறொடை வெண்பா எனப்படும்.*

*.........இஃது ஐந்து அடியான், ஒரு விகற்பத்தான் வந்த பஃறொடை வெண்பா.*

*—காரிகை 24இன் உரைப்பகுதி*

**மேற்கதுவாய் முரண், கீழ்க்கதுவாய் முரண்**

**முன்னைய பாடலின் 'கீழ்க்கதுவாய் மோனை'க்கான இலக்கண அடிக்குறிப்பே இதற்கும் உரியதாகும்.**

## நன்றியுரை

இந்நூலகத் தமிழ்த்துறையின் 1602 (b) எனும் ஓலைச்சுவடியை அடிப்படையாகக்கொண்டு இந்நூல் பதிப்பிக்கப்பெற்றுள்ளது. இதனைப் 'பருவ இதழ்ப் படைப்பு மற்றும் தனிநூல்' திட்டத்தின்கீழ் வெளிவர இசைவளித்த முன்னாள் தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் நூலக இயக்குநர் திருமிகு து. நா. இராமநாதன், இ. ஆ. ப. அவர்களுக்கும், தற்போது இந்நூலுக்கு வெளியீட்டாளர் முகவுரை வழங்கிச் சிறப்பித்த தஞ்சை மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் நூலக இயக்குநர் உயர்திரு முனைவர் மூ. இராசாராம், இ. ஆ. ப., அவர்களுக்கும்,

இந்நூல் நன்முறையில் வெளிவர அக்கறை காட்டி ஆவனசெய்த நூலக நிருவாக அலுவலர் திரு. நா. தியாகராசன், எம். ஏ., பி. எல். அவர்களுக்கும், வெளியீட்டு மேலாளர் திரு. அ. பஞ்சநாதன், எம். ஏ., எம். எல். ஐ. எஸ்., அவர்களுக்கும்,

இந்நூலை நன்முறையில் அச்சிட்டு அளித்த சரசுவதி மகால் நூலக அச்சகப் பணியாளர்களுக்கும், புத்தகக் கட்டுமானப்பிரிவின் பணியாளர்களுக்கும், நூல் நன்முறையில் வெளிவரத் துணைநின்ற ஏனையோர்க்கும் இப்பதிப்பாசிரியனின் மனமார்ந்த நன்றி படையலாகின்றது.

## நிறைவுரை

குமரகுருபரரின் இலக்கிய இலக்கணக் கொடையான இந்நூல், இலக்கிய அன்பர்களும் இலக்கண அன்பர்களும் சைவ சமய அன்பர்களும் ஒருசேர உவந்து கொண்டாடும் பெற்றித்தாய்ப் பிறங்குகின்றது. அத்தகு சிறப்பு வாய்ந்த சிதம்பரச் செய்யுட் கோவையின் இப்பதிப்பு "சிதம்பரச் செய்யுட் கோவை—ஒரு யாப்புச் சான்றிலக்கிய நூல்" என்னும் நிலையினை அழுத்தமுறக் காட்டுவதாக அமைந்துள்ளது. இப்பதிப்புமுயற்சியின் நிறைபோற்றிக் குறை பொறுத்து அறிஞருலகம் இப்பதிப்பினை ஏற்குமென்பது இப்பதிப்பாசிரியனின் நம்பிக்கை.

தஞ்சை,
28—2—99.

**ய. மணிகண்டன்,**
பதிப்பாசிரியர்.

## உசாத்துணைக் குறிப்புகள்

1 இலக்கண வரலாறு, சோம. இளவரசு, ப. 184.

2 இலக்கணத் தொகை - யாப்பு, பாட்டியல், ச. வே. சுப்பிரமணியம், ப. 19.

3 மேலது ப. 18

4 மேலது ப. 27 மற்றும் 'யாப்பியல் சுவடிப் பதிப்புகள்' அன்னிதாமசு, சுவடிப் பதிப்பு வரலாறு (கருத்தரங்கக் கட்டுரைகள்) (தட்டச்சு வடிவ நூல்) ப. 5

5 'யாப்பியல் சுவடிப் பதிப்புகள்', அன்னிதாமசு, ப. 5

6 'யாப்பியல்', அன்னிதாமசு, தமிழ் ஆய்வுக் களங்கள், ப. ஆ. ந. கடிகாசலம், ப. 19.

7 சங்க இலக்கிய ஒப்பீடு - இலக்கியக் கொள்கைகள், தமிழண்ணல், ப. 230

8 தமிழ்ச்சுடர் மணிகள், ச. வையாபுரிப் பிள்ளை, ப. 105

9 இலக்கணத் தொகை — யாப்பு, பாட்டியல், ப. 105

10 அ. தமிழ்ப் புலவர்கள் வரலாறு — பதினேழாம் நூற்றாண்டு, ச. சோமசுந்தர தேசிகர், ப. 47

ஆ. தமிழ் இலக்கிய வரலாறு: 16 ஆம் நூற்றாண்டு — பாகம் 2, மு. அருணாசலம், ப. 166

இ. ஸ்ரீ குமர குருபர சுவாமிகள், மு. அருணாசலம், ப. 211, 212

11 திரிசிரபுரம் ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் பிரபந்தத் திரட்டு, உ. வே. சா. பதிப்பு, 1926. 'குமரகுருபரஸ்வாமிகள் சரித்திரம்' பாடல் எண் 203 — 206

12 புலவர் புராணம், 'குமரகுருபரசாமி சருக்கம்', வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள், பாடல் எண் - 28

13 தமிழ்ப்புலவர்கள் வரலாறு — பதினேழாம் நூற்றாண்டு, ச. சோமசுந்தர தேசிகர், ப. 47

14 ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள், மு. அருணாசலம், ப. 212

15 மேலது, ப. 138

16 டாக்டர் உ. வே. சா. இலக்கணப் பதிப்புகள், டாக்டர் கி. நாச்சிமுத்து, ப 21

17 'யாப்பியல்', அன்னிதாமசு, தமிழ் ஆய்வுக் களங்கள், ப. ஆ. ந. கடிகாசலம், ப. 19

# சிதம்பரச் செய்யுட் கோவை

## வெண்பா விகற்பம்

1 பூங்கொன்றைக் கண்ணியான் பொன்மன் றிறைஞ்சிடுக
ஆங்கொன்றைக் கண்ணி யவர்.

இது சீர்முழுதும் எதுகையொன்றத்தொடுத்தமையால் **தலையாகெதுகை.** பூங்கொன்றைக் கண்ணியான் எனவும், பொன்மன் றிறைஞ்சிடுக எனவும், **வெண்சீர் வெண்டளையுர், இயற்சீர் வெண்டளையும்** விரவி வருதலின், இஃது **ஒழுகிசைச் செப்பலோசைத்து.** இதனானே, **வெண்பா இரண்டடிச் சிறுமை** யுடைத்தென்பதூஉங் கொள்க. இதனுள், கண்ணியவர் என்னும் ஒருமொழியைக் கண்ணியெனவும் அவரெனவும் **வகையுளி** செய்து சீர் கொள்ளப்படுதலின், இது **மலரென்னும் வாய்பாட்டான்** முடிந்தது. 1

---

**யாப்பருங்கலக் காரிகையில் இடம்பெற்றுள்ள ஒத்த இலக்கணப் பகுதி:**

**1 தலையாகெதுகை**

'இரண்டாம்
வழுவா வெழுத்தொன் றின் மாதே யெதுகை' —காரிகை 16

ஒருக்கப் பெயரான் என்று சிறப்பித்தவதனால், ஒரு சார் ஆசிரியர் தலையாகெதுகை, இடையாகெதுகை, கடையாகெதுகை என்றும், தலையாகுமோனை, இடையாகுமோனை, கடையாகுமோனை என்றும் வேண்டுவர். எனக்கொள்க. என்னை,

'சீர்முழு தொன் றிற் றலையா கெதுகை
யோரெழுத் தொன்றி னிடைகடை பிறவே'

என்றார் ஆகலின். —காரிகை 41இன் உரைப்பகுதி

**ஒழுகிசைச் செப்பலோசை**

'வெண்பா வகவல் கலிப்பா வளவடி வஞ்சியென்னும்
ஒண்பா வடிகுறள் சிந்தென் றுரைப்ப வொலிமுறையே
திண்பா மலிசெப்பல் ... ..... .........' —காரிகை 21

திண்பா மலி செப்பல் என்று சிறப்பித்தவதனால். செப்பலோசை மூன்று வகைப்படும். ஏந்திசைச் செப்பலும், தூங்கிசைச் செப்பலும், ஒழுகிசைச் செப்பலும் என. என்னை,

......... ......... ......... .. ......
'வெண்சீ ரொன்றலும் இயற்சீர் விகற்பமும்
ஒன்றிய பாட்டே யொழுகிசைச் செப்பல்' —சங்கயாப்பு

2 அறனன்று மாதவ னென்ப துலகெந்தை
தாள்காணார் நாணுக் கொள.

இஃது இருவிகற்பக் குறள்வெண்பா. மோனை முதலாகிய தொடையும் தொடைவிகற்பமும் போலாது தொடுத்தலின், இது செந்தொடை. 2

---

செய்யுள் எண் 1இன் அடிக்குறிப்புத் தொடர்ச்சி

......... ......... ......... .........

இஃது வெண்சீர் வெண்டளையும், இயற்சீர் வெண்டளையும் விரவி வந்தமையால் ஒழுகிசைச் செப்பலோசை. —காரிகை 21ன் உரைப்பகுதி

**வெண்பா இரண்டடிச் சிறுமை**

'வெள்ளைக் கிரண்டடி —காரிகை 14

வெண்பாவிற்கு இரண்டு அடியே சிறுமை. —காரிகை 14இன் உரைப்பகுதி

'ஈரடி வெண்பாக் குறள்' —காரிகை 23

இரண்டு அடியால் வரும் வெண்பா குறள்வெண்பா எனப்படும்.
—காரிகை 23இன் உரைப்பகுதி

**ஒரு விகற்பக் குறள்வெண்பா**

இவை இரண்டு அடியான். இரண்டு விகற்பத்தானும், ஒரு விகற்பத்தானும் வந்த குறள்வெண்பா. —காரிகை 23இன் உரைப்பகுதி

**வகையுளி**

'......... ......... ......... இனியொழிந்த
மருடீர் விகாரம் வகையுளி வாழ்த்து வசைவனப்புப்
பொருள்கோள் குறிப்பிசை யொப்புங் குறிக்கொள் பொலங்கொடியே.'
—காரிகை 43

வகையுளி என்பது: முன்னும், பின்னும் அசை முதலாகிய உறுப்புக்கள் நிற்புழி யறிந்து. குற்றப்படாமல் வண்ணம் அறுத்தல், எனக்கொள்க.

—காரிகை 43இன் உரைப்பகுதி

**2 இருவிகற்பக் குறள்வெண்பா**

இரண்டு விகற்பத்தானும் ஒரு விகற்பத்தானும் வந்த குறள்வெண்பா
—காரிகை 23இன் உரைப்பகுதி

**செந்தொடை**

'முந்திய மோனை முதலா முழுதுமொவ் வாதுவிட்டாற்
செந்தொடை நாமம் பெறும்' —காரிகை 17

'மோனை முதலாகிய தொடையும், தொடைவிகற்பமும் போலாது வேறுபடத் தொடுப்பது செந்தொடை எனப்படும்' —காரிகை 17இன் உரைப்பகுதி.

'......இது மோனை முதலாகிய தொடையும், தொடைவிகற்பமும் போலாமை வேறுபடத் தொடுத்தமையால் செந்தொடை' —காரிகை 18இன் உரைப்பகுதி

3 கண்ணுதல் காட்சி கிடைத்த விழிக்கில்லை
வெல்கூற்றின் றோற்றங் கொளல்.

இதுவுமது. அனுவெழுத்தினான் இணைமோனை பெற்று, ஏனைத் தொடையும் தொடைவிகற்பமும் போலாது தொடுத்தலின் இது மருட்செந் தொடை. 3

4 திருமுடியிற் கண்ணியு மாலையும் பாம்பு
திருமார்பி லாரமும் பாம்பு — பெருமான்
திருவரையிற் கட்டிய கச்சையும் பாம்பு
பொருபுயத்திற் கங்கணமும் பாம்பு.

இது குறளிரண்டாய் இடையே தனிச்சொற்பெற்று ஒரு விகற்பமாய் நடத்தலின் ஒரு விகற்பத்து இருகுறணேரிசைவெண்பா. அடிதொறும் ஈற்றுச் சீர் ஒரு சொல்லே வரத் தொடுத்தமையான் அடியியைபுத்தொடை. இது காசென்னும் வாய்பாட்டுக் குற்றியலுகர இயற்சீரான் முடிந்தது. 4

---

3. அனுவெழுத்து

அனுவெழுத்து -- இனவெழுத்து.

இணைமோனை

'இருசீர் மிசையிணை யாகும்' —காரிகை 19

'முதல் இரு சீர்க்கண்ணும் மோனை முதலாயின வரத்தொடுப்பது இணை எனப் படும்.' —காரிகை 19இன் உரைப்பகுதி

மருட்செந்தொடை

'இனவெழுத்துப் பெற்று, மோனை முதலாகிய தொடையும், தொடைவிகற்பமும் போலாமை வேறுபடத் தொடுப்பது மருட்செந்தொடை எனக்கொள்க'.
—காரிகை 41இன் உரைப்பகுதி

4 ஒரு விகற்பத்து இருகுறணேரிசை வெண்பா

'......................குறட்பா இரண்டாய் இடைக்கண்
சீரிய வான்றனிச் சொல்லடி மூச்செப்ப லோசைகுன்றா
தோரிரண் டாயு மொருவிகற் பாயும் வருவதுண்டேல்
நேரிசை யாகும்.' —காரிகை 23

இரண்டு குறள்வெண்பாவாய், நடுவு முதற்றொடைக்கு ஏற்ற தனிச்சொல்லால் அடி நிரம்பி, செப்பலோசை வழுவாது, முதல் இரண்டு அடியும் ஒரு விகற்பாய், கடை இரண்டு அடியும் மற்றொரு விகற்பமாய் வரினும், நான்கு அடியும் ஒரு விகற்பமாய் வரினும், இரு குறணேரிசை வெண்பா எனப்படும். —காரிகை 23இன் உரைப்பகுதி

5 கறையரவுக் கஞ்சுறா தஞ்சுறூஉந் திங்கள்
இறைவி நறுநுதலைக் கண்டு—பிறைமுடியோன்
கைம்மா ணடமுவந்த காற்புலிக்கஞ் சாதஞ்சும்
அம்மான் விழிமானைக் கண்டு.

இதுவும் அவ்வாறே இருவிகற்பத்தால் நடந்தமையான், **இருவிகற்பத்து இருகுறணேரிசை வெண்பா.** அடிதொறும் இரண்டாமெழுத்து ஒன்றிவாத் தொடுத்தமையான் **அடியெதுகைத்தொடை.** இதனுள், முதற்றொடை இரண்டா மெழுத்து மாத்திரையே ஒன்றத் தொடுத்தமையான் **இடையாகெதுகையுமாம்.** 5

---

*செய்யுள் எண் 4இன் அடிக்குறிப்புத் தொடர்ச்சி*

**அடியிளைபுத்தொடை**

*'இறுதி இயைபு'* —*காரிகை 16*

*அடிதோறும் இறுதிக்கண் நின்ற எழுத்தானும், சொல்லானும் ஒன்றிவரத் தொடுப்பது அடியிறையபுத்தொடை எனப்படும்.* —*காரிகை 16இன் உரைப்பகுதி*

5. இருவிகற்பத்து இருகுறணேரிசை வெண்பா

*முன்னைய பாடலின் இலக்கண அடிக்குறிப்பே இதற்கும் உரியதாகும்.*

**அடியெதுகைத்தொடை**

*' இரண்டாம்*
*வழுவா வெழுத்தொன்றின் மாதே எதுகை '*

—*காரிகை 16*

*அடிதோறும் முதற்கண் இரண்டாம்எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது அடியெதுகைத் தொடை எனப்படும்,*

—*காரிகை 16இன் உரைப்பகுதி*

**இடையாகெதுகை**

*ஒருக்கப்பெயரான் என்று சிறப்பித்தவதனால், ஒருசார் ஆசிரியர் தலையாகெதுகை, இடையாகெதுகை, கடையாகெதுகை......என்னும் வேண்டுவர், எனக்கொள்க. என்னை,*

*' சீர்முழு தொன்றித் தலையா கெதுகை*
*யோரெழுத் தொன்றி னிடைகடை பிறவே.'*

*என்றார் ஆகலின்,* —*காரிகை 41இன் உரைப்பகுதி*

6 வணங்கு சிறுமருங்குற் பேரமர்க்கண் மாதர்
அணங்கு புரிவதற மானாற்—பிணங்கி
நிணங்காலு முத்தலைவே னீள்சடையெங் கோமாற்
கிணங்காது போலு மிரவு,

இது குறளிரண்டாய் முதற்குறள் ஈற்றின்கண் ஓராசிடையிட்டுத் தனிச் சொற் பெற்று ஒரு விகற்பமாய் நடத்தலான் **ஒரு விகற்பத்து ஓராசிடை நேரிசை வெண்பா.** இதனுள் முதலடி நடுவிருசீரும் முரண்த் தொடுத்தமையின் **இடைப்புணர்முரண்தொடை.** இது **பிறப்பென்னும் வாய்பாட்டு** முற்றுகர இயற்சீரான் முடிந்தது. 6

7 வரத்திற் பிறப்பொன் றருள்கெனினும் வள்ளல்
கரத்திற் கபாலத்தைக் காணாஉப்—புரத்தை
இரும்புண்ட ரீகபுரத் தெய்தினார்க் கீயான்
அரும்புண்ட ரீகத் தயன்.

இதுவும் அவ்வாறே இருவிகற்பமாய் நடத்தலான் **இருவிகற்பத்து ஓராசிடை நேரிசை வெண்பா.** இதனுள் முதலடி முதற்சீரும் ஈற்றுச் சீரும் முதலெழுத்து ஒன்றத் தொடுத்தமையால் **ஒரூஉமோனைத்தொடை.** 7

---

6 ஒரு விகற்பத்து ஓராசிடை நேரிசை வெண்பா

*சீரிய வான் தனிச்சொல் என்று சிறப்பித்தவதனால், முதல் குறட்பாவினோடு தனிச்சொல் இடைவேறுபட்டு விட்டிசைப்பின்—ஒற்றுமைப்படாத உலோகங்களை ஒற்றுமைப் படப் பற்றாசிட்டு விளக்கினாற்போல—முதல்குறட்பாவின் இறுதிக்கண் ஒவ்வும் இரண்டும் அசைகூட்டி உச்சரிக்கப்பட்டு, இரண்டு விகற்பத்தானும், ஒரு விகற்பத்தானும் வருவனவும் உள. அவை ஒருசார் ஆசிடை நேரிசை வெண்பா எனக்கொள்க.*

*—காரிகை 23இன் உரைப்பகுதி*

இடைப்புணர் முரண்தொடை

*'இரணத் தொடைக்கு மொழிவர் இடைப்புணர் என்பதுவே'* *—காரிகை 40*

*இடைப்புணர் முரண் ஆவது, நடு இருசீர்க்கண்ணும் மறுதலைப்படத் தொடுப்பது.*
*—காரிகை 40இன் உரைப்பகுதி*

7. இருவிகற்பத்து ஓராசிடை நேரிசை வெண்பா

*6ஆம் பாடலின் இலக்கண அடிக்குறிப்பே இதற்கும் உரியதாகும்.*

ஒரூஉமோனைத்தொடை

*' ஒரூஉவாம்*
*இருசீர் இடையிட்டது.'* *—காரிகை 19*

*நடு இரு சீர்க்கண்ணும் இன்றி, முதல் சீர்க்கண்ணும், இறுதிச் சீர்க்கண்ணும் மோனை முதலாயின வரத்தொடுப்பது ஒரூஉ எனப்படும், —காரிகை 19இன் உரைப்பகுதி*

8 கூற்றங் குமைத்த குரைகழற்கால் கும்பிட்டுத்
தோற்றந் துடைத்தேந் துடைத்தேமாற்—சீற்றஞ்செய்
ஏற்றினான் தில்லை யிடத்தினா னென்னினியாம்
போற்றினா னல்கும் பொருள்.

இது முதற்குறளீற்றின்கண் இரண்டாசிடையிட்டு ஒரு விகற்பமாய் நடத்தலான் **ஒரு விகற்பத்து ஈராசிடை நேரிசை வெண்பா.** 8

9 நீரிற் குமிழி இளமை நிறைசெல்வம்
நீரிற் சுருட்டும் நெடுந்திரைகள்—நீரில்
எழுத்தாகும் யாக்கை நமரங்காள் என்னே
வழுத்தாத தெம்பிரான் மன்று.

இதுவும் அவ்வாறே இருவிகற்பமாய் நடத்தலான் **இருவிகற்பத்து ஈராசிடை நேரிசைவெண்பா.** 9

## இன்னிசை வெண்பா

10 வாழி திருமன்றங் கண்ட மலர்க்கண்கள்
வாழி பெருமான் புகழ்கேட்ட வார்செவிகள்
வாழி யவனை வணங்கு முடிச்சென்னி
வாழியவன் சீர்பாடும் வாய்.

இது நான்கடியாய்த் தனிச்சொல் இன்றி ஒருவிகற்பமாய் நடத்தலின் **ஒருவிகற்பத்து இன்னிசை வெண்பா.** இஃது அடிதோறும் முதலெழுத்து ஒன்றத் தொடுத்தமையான் **அடிமோனைத்தொடை.** இதனுள் அடிதோறும் ஈற்றுச்சீர் முரணத் தொடுத்தமையாற் **கடைமுரண்தொடையுமாம்.** 10

---

**8. ஒரு விகற்பத்து ஈராசிடை நேரிசை வெண்பா**

**6ஆம் பாடலின் இலக்கண அடிக்குறிப்பே இதற்கும் உரியதாகும்.**

**9 இருவிகற்பத்து ஈராசிடை நேரிசை வெண்பா**

**6ஆம் பாடலின் இலக்கண அடிக்குறிப்பே இதற்கும் உரியதாகும்.**

**10 ஒருவிகற்பத்து இன்னிசை வெண்பா**

'ஒன்றும் பலவும் விகற்பொடு நான்கடி யாய்த்தனிச்சொல்
இன்றி நடப்பினஃ தின்னிசை,'
—காரிகை 24

ஒரு விகற்பத்தானும், பல விகற்பத்தானும் வந்து, நான்கு அடியாய், தனிச்சொல் இன்றி நடப்பின், அஃது இன்னிசை வெண்பாஎனப்படும்.

—காரிகை 24இன் உரைப்பகுதி

11 பூந்தண் பசுந்துழாய்ப் போது நறாவிரி
தேந்தண் டிரடிண்டோட் டேவற்குந் தேவிக்கும்
காந்தன் பதமலர்கள் காமுற்றார் காமுறார்
பாந்தண் முடிச்சூடும் பூ.

இதுவுமது. இதனுள் மூன்றாமடி இரண்டாஞ் சீரொழிந்து ஏனை முச்சீரும் முதலெழுத்து ஒன்றத் தொடுத்தமையான் **மேற்கதுவாய் மோனைத் தொடை.** இதனுள்ளே போ என நெட்டெழுத்துத் தனியே நின்றும், து எனக் குற்றெழுத்துத் தனியே நின்றும், பூந் என நெட்டெழுத்து ஒற்றடுத்தும், தண் எனக் குற்றெழுத்து ஒற்றடுத்தும் **நேரசை நான்கும்** வந்தன. விரி எனக் குறில் இணைந்தும், நறா எனக் குறினெடில் இணைந்தும், பசுந் எனக் குறில் இணைந்து ஒற்றடுத்தும், துழாய் எனக் குறினெடில் இணைந்து ஒற்றடுத்தும் **நிரையசை நான்கும்** வந்தன. ஓரசைச் சீர் இரண்டனுள், பூ என நேரசைச் சீரும் வந்தவாறு காண்க. இது நாளென்னும் வாய்பாட்டான் முடிந்தது. 11

---

**செய்யுள் எண் 10இன் அடிக்குறிப்புத் தொடர்ச்சி**

அடிமோனைத்தொடை

'எழுவாய் எழுத்தொன்றின் மோனை' —காரிகை 16

அடிதோறும் முதல் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது அடிமோனைத்தொடை எனப்படும். —காரிகை 16இன் உரைப்பகுதி

கடைமுரண்தொடை

'மற்றொருசார்
கருதிற் கடையே கடையிணை பின்கடைக் கூழையுமென்
றிரணத் தொடைக்கு மொழிவர் இடைப்புண ரென்பதுவே'
—காரிகை 40

கடைமுரண் ஆவது, அடிதோறும் இறுதிச் சீர்க்கண் மறுதலைப்படத் தொடுப்பது —காரிகை 40இன் உரைப்பகுதி

11 மேற்கதுவாய்மோனை

முதலிறுவாய்
வருசீ ரயலில மேல்கீழ் வகுத்தமை தீர்கதுவாய்' —காரிகை 19

முதல் அயல் சீர்க்கண் இன்றி, ஒழிந்த மூன்று சீர்க்கண்ணும் மோனை முதலாயின வரத்தொடுப்பது மேற்கதுவாய் என்றும்........... —காரிகை 19இன் உரைப்பகுதி

12 புனலழுவம் புக்குடைந்தோர் தாளூன்றி நின்று
வனசங்காள் செய்தவநீர் வாழியரோ வாழி
பொருவிடையோன் தெய்வப் புலியூரை யொப்பாள்
திருமுகத்துக் கொப்பச் செயின்.

இது **பலவிகற்பத்து இன்னிசை வெண்பா**. தமிழ்வழக்கால் இரு விகற்பமும் பல விகற்பமெனப்பட்டது. இதன் முதலடி முதற்சீரிரண்டும் முதலெழுத்து ஒன்றிவரத் தொடுத்தமையான் **இணைமோனைத்தொடை**. இது முதற்றொடை ஓரெதுகைத்தாயும், ஏனைத்தொடை வேறோரெதுகைத்தாயும் வந்தமையான் **இரண்டடியெதுகை** யென்க. இதனுள்ளே தாளூன்றி எனத் **தேமாங்காயும்**, வனசங்காள் எனப் **புளிமாங்காயும்**, புனலழுவம் எனக் **கருவிளங்காயும்**, புக்குடைந்தோர் எனக் **கூவிளங்காயும்** ஆக **வெண்சீர் நான்கும்**, செயின் என நிரையசைச்சீரும் வந்தன. 12

---

## 12 பல விகற்பத்து இன்னிசை வெண்பா

*.........இவை நான்கு அடியாய், தனிச்சொல் இன்றி, பல விகற்பத்தான் வந்த இன்னிசை வெண்பா.*

*ஒன்றல்லன எல்லாம் பல என்பது தமிழ்நடை. என்னை ?*

*'ஒன்றல் லவைபல தமிபநடை வடநூல்*
*இரண்டல் லவைபல வென்றிசி னோரே'*

*என்றார் ஆகலின்.* —காரிகை 24இன் உரைப்பகுதி

### இணைமோனைத்தொடை

*' இருசீர் மிசைஇணை யாகும் '* —காரிகை 19

*முதல் இரு சீர்க்கண்ணும் மோனை முதலாயின வரத்தொடுப்பது இணை எனப்படும்.*
—காரிகை 19இன் உரைப்பகுதி

### இரண்டடியெதுகை

*' உயிராசிடையிட்*
*டிருக்கு மொருசார் இரண்டடி மூன்றா மெழுத்துமொன்றி*
*நிரக்கு மெதுகையென் றாலுஞ் சிறப்பில் நேரிழையே.'* —காரிகை 41

*.........இது முதல் இரண்டு அடியும் ஓர் எதுகையாய், பின்பு இரண்டு அடியும் மற்றோர் எதுகையாய் வந்தமையால், இரண்டடியெதுகை.*

*'இரண்டடி யெதுகை திரண்டொருங் கியன்றபின்*
*முரண்ட வெதுகையு மிரண்டினுள் வரையார்'*

*என்றார் ஆகலின்.* —காரிகை 41இன் உரைப்பகுதி

காரிகை உரையில் மட்டும் கூறப்பட்டவற்றுக்குக் கூடச் சான்றமைத்து விளக்கும் இந்நூல், ஒழிபியல் நூற்பாக்களில் கூறப்பட்டவற்றுள் 'ஆசெதுகை', 'இடையிட்டெதுகை', 'வருக்கமோனை' ஆகியவற்றை மட்டும் சான்றமைத்து விளக்காமை சுட்டத்தக்கது.

பின்வரும் பட்டியல் சிதம்பரச் செய்யுட் கோவையில் சான்றமைத்து விளக்கப்பெற்ற தொடைவகைகளையும், விகற்பங்களையும் எடுத்துரைக்கும்.

*காரிகையின் உறுப்பியலில் கூறப்பட்டவற்றுக்கான இந்நூற் சான்றுகள்:*

## (எண் : பாடல் எண்.)

**மோனை**
அடிமோனை 10
இணைமோனை 12
பொழிப்புமோனை 15
ஒரூஉமோனை 7
கூழை மோனை 19
மேற்கதுவாய்மோனை 11
கீழ்க்கதுவாய் மோனை 17
முற்றுமோனை 25

**இயைபு**
அடியியைபு 4
இணையியைபு 23
பொழிப்பியைபு 23
ஒரூஉவியைபு 22
கூழையியைபு 22
மேற்கதுவாயியைபு 22
கீழ்க்கதுவாயியைபு 22
முற்றியியைபு 22

**எதுகை**
அடியெதுகை 5
இணையெதுகை 23
பொழிப்பெதுகை 21
ஒரூஉவெதுகை 21
கூழையெதுகை 23
மேற்கதுவாயெதுகை 21
கீழ்க்கதுவாயெதுகை 21
முற்றெதுகை 38
பருஅசித3

**முரண்**
அடிமுரண் 41
இணைமுரண் 34
பொழிப்புமுரண் 19
ஒரூஉமுரண் 23
கூழைமுரண் 28
மேற்கதுவாய் முரண் 18
கீழ்க்கதுவாய் முரண் 18
முற்றுமுரண் 38

**அளபெடை**
அடியளபெடை 42
இணையளபெடை 42
முதலாகிய விகற்பம் ஏழும்

**அந்தாதி**
அந்தாதித்தொடை 27

**இரட்டை**
இரட்டைத்தொடை 26

**செந்தொடை**
செந்தொடை 2

**பிற எதுகை, மோனை**
நெடிலெதுகை 74
இனவெதுகை 19
நெடின்மோனை 75
அனுமோனை 75

**உரையின்படி**
தலையாகெதுகை 1
இடையாகெதுகை 5

**காரிகையின் ஒழிபியலில் கூறப் பட்டவற்றுக்கான இந்நூற் சான்றுகள் :**

கடைமுரண் 10
கடையிணைமுரண் 13
பின்முரண் 57
கடைக்கூழை முரண் 44
இடைப்புணர்முரண் 6
வருக்கவெதுகை 16

**'சிறப்பில' எனச் சுட்டப் பெற்றவை:**
உயிரெதுகை 28
இரண்டடியெதுகை 12
மூன்றாமெழுத்தொன்றெதுகை 14
**உரையின்படி:**
**'சிறப்பில' எனச்சுட்டப்பெற்றவை:**
விட்டிசை வல்லொற்றெதுகை 61
வழியெதுகை 74
வழிமுரண் 73
மருட்செந்தொடை 3

## இந்நூலின் தனிச்சிறப்புகள்

யாப்பருங்கலக்காரிகைக்கான முழுமையான சான்றிலக்கியமாக இந்நூல் அமைந்துள்ளது.

காரிகையை முழுமையாகப் பின்பற்றி அதில் கூறப்பட்டுள்ள இலக்கணத்திற்கு இந்நூல் எடுத்துக்காட்டுப்பாக்களையும் இலக்கணக் குறிப்புரையையும் தருகின்றது. இந்நூலின் முந்துநூலான 'பாப்பாவின' நூலின் இலக்கணக் குறிப்புரைகளில் அணி, பொருளிலக்கணச் செய்திகளும் இடம்பெற்றுள்ளமை போலன்றி இந்நூற் குறிப்புரைகளில் யாப்பிலக்கணச் செய்திகள் மட்டுமே இடம் பெற்றுள்ளன.

பா, பாவின வகைகளின் வைப்புமுறையிலும் இலக்கணங்கூறுவதிலும் காரிகையையே இந்நூல் பின்பற்றியுள்ளது. காரிகை நூற்பாக்களோடு காரிகை உரையையும் பின்பற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

காரிகையின் உறுப்பியல் கூறும் செய்யுளுறுப்புகளான எழுத்து அசை முதல் ஒழிபியல் கூறும் செய்திகள்வரை அனைத்து இலக்கணக்கூறுகளும் அமையச் சான்றுப்பாக்கள் இயற்றப்பட்டு அவையனைத்தும் குறிப்புரையில் விளக்கப்படுதல் இந்நூலின் தனிச்சிறப்பு. (பாப்பாவினத்தில் காரிகையின் உறுப்பியல், செய்யுளியல் கூறும் இலக்கணத்திற்கு மட்டுமே சான்றமைக்கப் பட்டுள்ளது. ஒழிபியலுக்குச் சான்றமைக்கப்படவில்லை என்பது கருதத் தக்கது.)

பஃறொடை வெண்பாப் பகுதியில் ஏழடி வரையும், ஆசிரிய விருத்தப் பகுதியில் பதின்சீரடிவரையும்கொண்டு இந்நூலில் சான்றுகள் அமைக்கப் பட்டுள்ளன.

காரிகையின் நூற்பாக்களில் கூறப்படாத (காரிகை நூற்பாக்களின் வடிவால் உணர்த்தப்படுகின்ற) கட்டளைக் கலித்துறை, மருட்பாவின் சமநிலை,

வியனிலைப் பாகுபாடு ஆகியவற்றுக்குக் காரிகை உரையிலுள்ள இலக்கணங்கொண்டு இந்நூலில் சான்றுப்பாக்கள் அமைக்கப்பட்டுள்ளன; குறிப்புரையில் விளக்கப்பட்டுள்ளன.

காரிகையின் நூற்பாவிலும் உரையிலும் உறுப்பியலில் கூறப்படும் தொடைவிகற்பம், தொடைவகைகளுக்கு மட்டுமல்லாமல் காரிகையின் ஒழிபியலில் கூறப்பட்டுள்ள தொடைவகைகளுக்கும் ('சிறப்பில' எனச் சுட்டப்பெற்றவற்றுக்கும் கூட) இந்நூல் சான்றமைத்துக்காட்டுதல் இந்நூலின் தனித்தன்மையாகும்.

காரிகை பாவினத்தைப் பொதுவாகத் தாழிசை, துறை, விருத்தம் என்னும் வைப்புமுறையில் வகைப்படுத்தி இலக்கணம் கூறும். ஆனால் வெண்பாவின் இனத்திற்கு இலக்கணம் கூறும் காரிகை நூற்பாவில் தலைதடுமாற்றமாக விருத்தம், தாழிசை, துறை என வரிசைப்படுத்தப்பட்டுள்ளது. சிதம்பரச் செய்யுட்கோவை வெண்பாவினத்திற்குச் சான்றமைக்கையில் காரிகையின் நூற்பாவினைப் பின்பற்றாமல், பிற பாவினத்திற்குக் காரிகைநூற்பாக்கள் வரிசைப்படுத்தும் தாழிசை, துறை, விருத்தம் எனும் பாவின வைப்புமுறையையே பின்பற்றியுள்ளது. இவ்வைப்பு முறையைக் காரிகையுரை வேறொரு நூற்பாவை அமைத்துக்காட்டிக் கூறுதல் குறிப்பிடத்தக்கது.

காரிகையின் நூற்பாக்களும் உரையும் கூறும் இலக்கணத்தை முழுமையாக அடியொற்றலும், காரிகையின் உறுப்பியல் தொடங்கி ஒழிபியல்வரை கூறப்பட்டுள்ள இலக்கணத்தில் மிகப்பெரும்பான்மைக்கும் சான்றமைத்து விளக்குதலும் இந்நூலின் தனிச்சிறப்புகளாகும்.

## இந்நூலின் முற்பதிப்புகள்

இந்நூல் பல பதிப்புகளை இன்றுவரை பெற்றுள்ளது. கி. பி. 1886ஆம் ஆண்டு இந்நூல் முதற்பதிப்பாகச் சபாபதி சுவாமிகளும் வே. குமாரசுவாமி உடையாரும் பதிப்பித்து வெளிவந்ததாகத் தெரிகிறது.[16] தமிழ்த் தாத்தா உ. வே. சாமிநாதையரால் பதிப்பிக்கப்பட்ட 'குமரகுருபரர் பிரபந்தத் திரட்டு' நூலின்கண் இந்நூல் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. தில்லையம்பூர்ச் சந்திரசேகரகவிராஜ பண்டிதரால் பரிசோதிக்கப்பட்டு வல்லிபுரம் இராமசாமி முதலியாரால் இராட்சச ஆண்டு (1916?) முத்தமிழ் விளக்க அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்ட பழம்பதிப்பு ஒன்றும் உள்ளது. 1937ஆம் ஆண்டு, வைத்தீசுவரன்கோவில் வித்வான் மு. சண்முக தேசிகர் இயற்றிய பதவுரை, குறிப்புரையுடன் சீர்காழி வித்துவசிகாமணி ப. அ. முத்துத்தாண்டவராயபிள்ளை அவர்களால் பார்வையிடப்பெற்று வெளிவந்துள்ள பதிப்பும் உள்ளது. சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் முதலிய நிறுவனங்கள் வெளியிட்ட பதிப்புகளும் உள்ளன.

## இப்பதிப்பின் இயல்பும் சிறப்பும்

சிதம்பரச் செய்யுட் கோவைக்கு இதுவரை எழுந்துள்ள பதிப்புகள், இலக்கிய நோக்கில் அணுகிப் பதிப்பிக்கப்பெற்றனவாகவே பெரிதும் உள்ளன. இப்பதிப்பு, சிதம்பரச் செய்யுட் கோவையைச் 'யாப்புச் சான்றிலக்கிய நூல்' என்னும் யாப்பிலக்கண நோக்கில் அணுகிப் பதிப்பித்து வழங்குகின்றது.

சிதம்பரச் செய்யுட்கோவை, காரிகை கூறும் இலக்கணங்கட்குச் சான்றாகப் படைக்கப்பெற்றது எனும் கருத்து வழங்கிவருகின்றது. காரிகையின் நூற்பாக்கள் மட்டும் கூறுகின்ற இலக்கணங்களுக்குச் சிதம்பரச் செய்யுட் கோவை சான்றுபடைத்துள்ளதா, உரை கூறுகின்ற இலக்கணங்களுக்கும் சேர்த்துச் சான்று படைத்துள்ளதா என்பது தெளிவுபடுத்தப்பெற வேண்டியதாகும். யாப்புச் சான்றிலக்கிய நூல்களின் இயல்புகள் குறித்து முனைவர் அன்னிதாமசு அவர்கள் சில வினாக்கள் எழுப்பி ஆராயத் தூண்டியுள்ள பின்வரும் கருத்துரை நோக்கத்தக்கது.[17]

> "யாப்புச் சான்றிலக்கிய நூல்களும் தனியாய்வுக்குட்படத் தக்கன. இவை முன்னிலக்கணம் சுட்டுகின்ற பா — இன — வகைகளுக்கு மட்டும் சான்று தந்து இலக்கணக் குறிப்புத் தருகின்றனவா? அல்லது மரபு யாப்புப்படி, விதிமுறை மாறாது அமைவனவற்றுடன் சிறிது யாப்பு மாறுபாடு தருவனவற்றையும் அளிக்கின்றனவா? இலக்கியத்தில் மட்டும் கண்டுணர்ந்த வகைகளைப் புதியதாகப் புகுத்துகின்றனவா? அல்லது தாமே உருவாக்கிய ஆக்க வகைகளையும் அமைக்கின்றனவா? எனப் பன்முக நோக்கில் இவற்றின் கொடையை அணுகலாம். இவை இன்னும் ஆயப்படாத நிலையில் அமைவது கருத்தில் கொள்ளத்தக்கது".

இப்பதிப்பு இவ்வகையில், காரிகை நூற்பாவையும் உரையையும் சிதம்பரச் செய்யுட்கோவைப் பாடல்-உரைப்பகுதிகளுடன் ஆங்காங்கு ஒப்பிட்டுக்காட்டிக், "காரிகை நூற்பாவும் உரையும் கூறிய இலக்கணங்களுக்குச் சிதம்பரச் செய்யுட் கோவை சான்றுகள் படைத்துக் காட்டியுள்ளது" என்பதைத் தெளிவுபடுத்துகின்றது.

இப்பதிப்பு, சிதம்பரச் செய்யுட்கோவையை யாப்புச் சான்றிலக்கிய நூல் எனும் அடிப்படையில் அணுகித் தமிழுலகிற்கு அளிக்கின்றது. இலக்கண நோக்கிலான ஆய்வு முகவுரை, ஒத்த காரிகைப் பகுதிகள், அருஞ்சொற்பொருள், பாடவேறுபாடுகள், உரையில் இடம்பெற்றுள்ள யாப்பிலக்கணக் கலைச்சொல் அகரநிரல், செய்யுள் முதற்குறிப்பு அகரநிரல் ஆகியன இப்பதிப்பு நூலினை வளப்படுத்தும் பகுதிகளாகத் திகழுகின்றன.

19 பொன்புரிந்த செஞ்சடைக்கு வெள்ளிப் புரிபுரிக்கும்
வெண்டிங்கட் கண்ணியான் வெல்கொடியு மானேறே
அங்கவன்ற னூர்தியுமற் றவ்வேறே யவ்வேற்றின்
கண்டத்திற் கட்டுங் கதிர்மணிக்கிங் கென்கொலோ
பைந்தொடியார் செய்த பகை.

இது **பலவிகற்பத்து ஐந்தடிப் பஃறொடை வெண்பா.** இதன் முதலடி முதற்சீரும் மூன்றாஞ் சீரும் முரணத் தொடுத்தமையால் **பொழிப்பு முரண் தொடை.** நான்காமடி இறுதிச் சீரொழிந்து ஏனை முச்சீரும் முதலெழுத்து ஒன்றத் தொடுத்தமையால் **கூழைமோனை.** இஃது அடிதோறும் இரண்டாமெழுத்து மெல்லினம் வரத் தொடுத்தமையான் **இனவெதுகை.**

---

## 19. பலவிகற்பத்து ஐந்தடிப் பஃறொடை வெண்பா

***குறிப்பு:*** *ஐந்தடியான் வந்த ஒரு விகற்பப் பஃறொடை வெண்பாவிற்குச் சான்று காட்டும் காரிகையுரை, ஐந்தடியான் வந்த பலவிகற்பப் பஃறொடை வெண்பாவிற்குச் சான்று காட்டவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.*

### பொழிப்பு முரண்

*15ஆம் பாடலின் அடிக்குறிப்பில் இதற்கான இலக்கணம் உள்ளமை காண்க.*

### கூழை மோனை

*'ஈறிலி கூழை'* —*காரிகை 19*

*இறுதிச் சீர்க்கண் இன்றி, ஒழிந்த மூன்று சீர்க்கண்ணும் மோனை முதலாயின வரத் தொடுப்பது கூழை எனப்படும்.*

—*காரிகை 19இன் உரைப்பகுதி*

### இனவெதுகை

*16ஆம் பாடலின் அடிக்குறிப்பில் இதற்கான இலக்கணம் உள்ளமை காண்க.*

*'இனவெதுகை மூன்று வகைப்படும்: வல்லினவெதுகை, மெல்லினவெதுகை, இடையினவெதுகை என.'*

—*காரிகை 41இன் உரைப்பகுதி*

20 கருந்தாது கொல்லுங் கருங்கைத்தின் கொல்லர்
வருந்தா தியன்றதொரு வல்விலங்கு பூண்டு
திருந்தாதார் முன்றிறொறுஞ் சென்றுசிலர் தூங்க
இருந்தேங் களிதூங்கி யாமேமற் றம்ம
அருந்தா தலர்தில்லை யம்பலத்திற் றூங்கும்
பெருந்தேன் முகந்துண்ணப் பெற்று.

இஃது **ஒருவிகற்பத்து ஆறடிப் பஃறொடை வெண்பா.**

21 வின்மதனை வென்ற தலர்விழியே யொன்னார்தம்
பொன்னெயில் தீமடுத்த தின்னகையே பூமிசையோன்
தார்முடி கொய்தது கூருகிரே யாருயிருண்
கூற்றுயி ருண்ட தடித்தலமே யேற்றான்
பரசும் பினாகமுஞ் சூலமு மென்னே
கரமலர் சேப்பக் கொளல்.

இது **பலவிகற்பத்து ஆறடிப் பஃறொடை வெண்பா.** இதன் முதலடி யிற்றயற்சீரொழிந்து ஏனை முச்சீரும் இரண்டாமெழுத்து ஒன்றத் தொடுத்தமையால் **கீழ்க்கதுவாயெதுகை.** இரண்டாமடி முதற்சீரும் மூன்றாஞ்சீரும் இரண்டாமெழுத்து ஒன்றத் தொடுத்தமையால் **பொழிப்பெதுகை.** மூன்றாமடி முதலயற்சீரொழிந்து ஏனைமுச்சீரும் இரண்டாமெழுத்து ஒன்றத்தொடுத்தமையால் **மேற்கதுவாயெதுகை.** நான்காமடி முதற்சீரும் ஈற்றுச்சீரும் இரண்டாமெழுத்து ஒன்றத் தொடுத்தமையான் **ஒரூஉவெதுகை.** 21

---

20. **ஒரு விகற்பத்து ஆறடிப் பஃறொடை வெண்பா**

**குறிப்பு :** காரிகையுரையில் ஆறடியான் வந்த ஒருவிகற்பத்துப் பஃறொடை வெண்பாவிற்குச் சான்று காட்டப்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

21. **பலவிகற்பத்து ஆறடிப் பஃறொடை வெண்பா**

**குறிப்பு:** காரிகையுரையில் இதற்குச் சான்று காட்டப்பெற்றுள்ளது.

'...........இஃது ஆறடியான் வந்த பலவிகற்பப் பஃறொடை வெண்பா.'

—காரிகை 24இன் உரைப்பகுதி

**கீழ்க்கதுவாயெதுகை, பொழிப்பெதுகை, மேற்கதுவாயெதுகை, ஒரூஉவெதுகை**

17, 15, 7ஆம் பாடல்களின் அடிக்குறிப்புக்களில் இவற்றுக்கான இலக்கணம் உள்ளமை காண்க.

22 வானே நிலனே கனலே மறிபுனலே
ஊனேயவ் வூனி னுயிரே யுயிர்த்துணையே
ஆனே றுமேறே யரசே யருட்கடலே
தேனே யமுதே யளியேயோங்கள் செல்வமே
யானே புலனு நலனு மிலனன்றே
ஆனாலு மென்போன்மற் றார்பெற்றா ரம்பலத்துள்
மாநாடகங்காணும் வாழ்வு.

இது ஒருவிகற்பத்து ஏழடிப் பஃறொடை வெண்பா. இதன் முதலடி நாற்சீரும் இறுதியெழுத்து ஒன்றத் தொடுத்தமையால் **முற்றியைபு** இரண்டாமடி முதலயற்சிரொழிந்து ஏனைமுச்சீரும் இறுதியெழுத்து ஒன்றத்தொடுத்தமையால் **கீழ்க்கதுவாயியைபு.** மூன்றாமடி முதற்சீரொழிந்து ஏனை முச்சீரும் இறுதியெழுத்து ஒன்றத் தொடுத்தமையால் **கூழையியைபு.** நான்காமடியிற்றயற் சீரொழிந்து ஏனை மூச்சீரும் இறுதியெழுத்து ஒன்றத்தொடுத்தமையால் **மேற்கதுவாயியைபு.** ஐந்தாமடி முதற்சீரும் இறுதிச்சீரும் இறுதியெழுத்து ஒன்றத்தொடுத்தமையான் **ஒரூஉவியைபு.** இது **காசென்னும் வாய்பாட்டு முற்றுகர இயற்சீரான்** முடிந்தது. 22

---

**22 ஒருவிகற்பத்து ஏழடிப் பஃறொடை வெண்பா**

குறிப்பு: காரிகையுரையில் ஏழடியான் வந்த ஒருவிகற்பத்துப் பஃறொடை வெண்பாவிற்குச் சான்று காட்டப்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

**முற்றியைபு**

'வருசீர் முழுவதும் ஒன்றின்முற் றாமென்ப'.

எல்லாச் சீர்க்கண்ணும் மோனை முதலாயின வரத் தொடுப்பது முற்று எனப்படும்

காரிகை 19இன் உரைப்பகுதி

**கீழ்க்கதுவாயியைபு, கூழையியைபு, மேற்கதுவாயியைபு, ஒரூஉவியைபு.**

17, 19, 7ஆம் பாடல்களின் அடிக்குறிப்புக்களில் இவற்றுக்கான இலக்கணம் உள்ளமை காண்க.

23 வண்டுஞ் சுரும்பு ஞிமிறுங் குடைந்தார்ப்பத்
தண்டே னுரைக்கு மிதழி நறுங்கண்ணி
எண்டோண் முக் கண்ணா னிமையம் புணைமன்றில்
அண்டர்கள் கண்களிப்பத் தொண்ட ரகங்குளிர்ப்ப
நின்றாடு மாடற் குருகா திருத்திரால்
வன்றிண் மறலி புடைத்துக் கொடிறுடைக்கும்
அன்று முருகீர்கொல் லாம்.

இது பலவிகற்பத்து ஏழடிப் பஃறொடை வெண்பா. இதன் இரண்டா மடி இறுதிச் சீரிரண்டும் இறுதியெழுத்து ஒன்றத்தொடுத்தமையான் இணையியைபு. மூன்றாமடி முதற்சீரும் இரண்டாஞ்சீரும் இரண்டாமெழுத்து ஒன்றத் தொடுத்தமையான் இணையெதுகை. நான்காமடி இறுதிச் சீரொழிந்து ஏனை முச்சீரும் இரண்டாமெழுத்து ஒன்றத்தொடுத்தமையால் கூழையெதுகை. அதுவே இரண்டாஞ்சீரும், இறுதிச்சீரும் இறுதியெழுத்து ஒன்றத்தொடுத்தமை யால் பொழிப்பியைபு. ஐந்தாமடி முதற்சீரும் இறுதிச்சீரும் முரணத்தொடுத்த மையான் ஒரூஉ முரண். 23

---

23. பலவிகற்பத்து ஏழடிப் பஃறொடை வெண்பா

குறிப்பு: காரிகையுரையில் இதற்குச் சான்று காட்டப்பெற்றுள்ளது,

காரிகை நூலிலோ உரையிலோ பஃறொடை வெண்பாவில் நேரிசை, இன்னிசைப் பாகுபாடு சுட்டப்பெறவில்லை. ஆதலால் இந்நூலின் பஃறொடை வெண்பாக்கள் இன்னிசையாகவே உள்ளமை குறிப்பிடத்தக்கது

'...........இது பலவிகற்பத்தான் வந்த ஏழடிப் பஃறொடை வெண்பா.

இனி, ஏழு அடியின் மிக்க பஃறொடை வெண்பாக்களை யாப்பருங்கலவிருத்தி யுள்ளும் தேசிகமாலை முதலியவற்றுள்ளும் கண்டுகொள்க.'

—காரிகை 24இன் உரைப்பகுதி

இணையியைபு, இணையெதுகை, கூழையெதுகை, பொழிப்பியைபு, ஒரூஉ முரண்.

3, 19, 15, 7ஆம் பாடல்களின் அடிக்குறிப்புக்களில் இவற்றுக்கான இலக்கணம் உள்ளமை காண்க.

## சிந்தியல் வெண்பா

24 கங்கைக்குக் கண்மலர் சாத்தக் கருங்குவளை
செங்குவளை பூத்தாள் செயலென்னே—எங்கோமான்
பங்குற்றுந் தீரா பசப்பு.

இது மூன்றடியாய் இரண்டாமடியின் இறுதி தனிச்சொற் பெற்று ஒரு விகற்பத்தான் வந்தமையான் **ஒருவிகற்ப நேரிசைச் சிந்தியல் வெண்பா** 24

25 கம்பக் கரடக் களிற்றின் கபாயணிந்த
அம்பொற் புயத்தாற் கமைந்ததால்—அம்பை
முலையானைக் கோடணிந்த மார்பு.

இதுவும் அவ்வாறே இருவிகற்பத்தான் வந்தமையான் **இருவிகற்ப நேரிசைச் சிந்தியல் வெண்பா.** இதன் முதலடி நாற்சீரும் முதலெழுத்து ஒன்றத் தொடுத்தமையான் முற்றுமோனை. 25

---

24. நேரிசைச் சிந்தியல் வெண்பா

'நேரிசை யின்னிசை போல நடந்தடி மூன்றின் வந்தால்
நேரிசை யின்னிசைச் சிந்திய லாகும்.' —காரிகை 25

நேரிசை வெண்பாவே போல, இரண்டாம் அடியின் இறுதி தனிச்சொல் பெற்று, இரு விகற்பத்தானும், ஒரு விகற்பத்தானும், மூன்று அடியால் வருவன நேரிசைச் சிந்தியல் வெண்பா எனவும். இன்னிசை வெண்பாவே போல, தனிச்சொல் இன்றி, ஒருவிகற்பத் தானும், பல விகற்பத்தானும். மூன்று அடியால் வருவன இன்னிசைச் சிந்தியல் வெண்பா எனவும் வழங்கப்படும்.

—காரிகை 25இன் உரைப்பகுதி

25. முற்றுமோனை

22ஆம் பாடலின் அடிக்குறிப்பில் இதற்கான இலக்கணம் உள்ளமை காண்க.

26 போற்றுமின் போற்றுமின் போற்றுமின் போற்றுமின்
கூற்றங் குமைக்க வருமுன் நமரங்காள்
ஏற்றுவந்தான் பொற்றாள் இணை.

இது தனிச்சொல் இன்றி மூன்றடியாய் ஒருவிகற்பத்தான் வந்த ஒரு விகற்பத்து இன்னிசைச் சிந்தியல் வெண்பா. இதன் முதலடிநாற்சீரும் ஒரு சொல்லே வரத் தொடுத்தமையான் இரட்டைத்தொடை. 26

27 உம்பர் பெருமாற் கொளிர்சடிலம் பொன்பூத்த
தம்பொற் புயம்வேட்டேந் தார்முலையும் பொன்பூத்த
பொன்பூத்த பூங்கொன்றை சூழ்ந்து.

இஃது இரண்டு விகற்பத்தான் வந்த இன்னிசைச் சிந்தியல் வெண்பா இது வோரடியின் இறுதியெழுத்துஞ் சீரும் மற்றையடிக்கு முதலாகத் தொடுத்தமையான் அந்தாதித் தொடை. 27

---

## 26. இன்னிசைச் சிந்தியல் வெண்பா

24ஆம் பாடலின் அடிக்குறிப்பில் இதற்கான இலக்கணம் உள்ளமை காண்க.

### இரட்டைத்தொடை

'அடிமுழுதும்
வந்த மொழியே வருவ திரட்டை வரன்முறையான்' —காரிகை 17

ஓர் அடி முழுதும் ஒரு சொல்லே வரத்தொடுப்பது இரட்டைத்தொடை எனப்படும்.

—காரிகை 17இன் உரைப்பகுதி

## 27. அந்தாதித் தொடை

'அந்த முதலாத் தொடுப்ப தந்தாதி' —காரிகை 17

அடிதோறும் இறுதிக்கண் நின்ற எழுத்தானும், அசையானும், சீரானும், அடியானும் மற்றையடிக்கு ஆதியாகத் தொடுப்பது அந்தாதித் தொடை எனப்படும்.

—காரிகை 17இன் உரைப்பகுதி

28 கருமிடற்றன் செஞ்சடையன் வெண்ணீற்றன் என்னும்
மழுவலத்தன் மானிடத்த னென்னும் — மழுவலத்த
மன்றுடையான் றார்வேட்ட மான்.

இது பலவிகற்பத்து இன்னிசைச் சிந்தியல் வெண்பா. இதன் முதற்றொடை இரண்டாமெழுத்தின்மேல் நின்ற உயிரொன்றத் தொடுத்தமையான் உயிரெதுகை. 28

வெண்பா விகற்பம் முற்றும்.

## வெண்பாவினம்

### குறள்வெண்செந்துறை

29 செம்பொன் வேய்ந்த செழுமணி மன்றத்
தம்பொன் மேருவுக் கடிமுடி யின்றே.

இது விழுமிய பொருளும் ஒழுகிய ஓசையும் உடைத்தாய் அடியிரண்டாய்த் தம்மில் ஒத்துவந்தமையால் குறள்வெண்செந்துறை. 29

---

28. உயிரெதுகை

'உயிராசிடையிட்
டிருக்கு மொருசா ரிரண்டடி மூன்றா மெழுத்துமொன்றி
நிரக்கு மெதுகையென் றாலுஞ் சிறப்பில நேரிழையே.' —காரிகை 41

உயிரெதுகை, ஆசெதுகை, இடையிட்டெதுகை, இரண்டடியெதுகை, மூன்றாம் எழுத்தொன்று எதுகை என்று ஒருசார் எதுகையும் உள; ஆயினும் பெரியதோர் சிறப்பில, எனக்கொள்க.

.........இரண்டாம் எழுத்து ஒன்றாதாயினும், இரண்டாம் எழுத்தின் மேல் ஏறிய உயிர் ஒன்றி வந்தமையால், உயிரெதுகை. —காரிகை 41இன் உரைப்பகுதி

29. குறள்வெண்செந்துறை

'அந்தமில் பாத மளவிரண் டொத்து முடியின்வெள்ளைச்
செந்துறை யாகும்' —காரிகை 26

இரண்டு அடியாய், தம்முள் அளவொத்து வருவது வெண்செந்துறை என்றும் செந்துறை வெள்ளை என்றும் பெயரிட்டு வழங்கப்படும்.

அந்தமில் பாதம் என்று சிறப்பித்தவதனால், விழுமிய பொருளும், ஒழுகிய ஓசையும் உடைத்தாய் வருவது, எனக்கொள்க. —காரிகை 26இன் உரைப்பகுதி

## குறள்வெண்டாழிசை

30 கம்பைமாநதி யின்கரைச்சிறு கன்னிபார முலைத்தழும்பணி
உம்பர்கோன்விடை யொன்றுல கேழு முண்ட துவே.

இது அடியிரண்டாய்ச் சீர்வரையறையின்றி ஈற்றடி குறைந்து வந்தமை யால் குறள்வெண்டாழிசை. 30

31 முன்புல கீன்ற முகிண்முலைக் கன்னியோ
டின்புறும் யோகி யெழுபுவிக் கரசே.

இது ஒழுகியவோசையும் விழுமிய பொருளுமின்றிக் குறள்வெண்செந் துறையோடு மாறுபட்டுவந்த குறள்வெண்டாழிசை. 31

32 பின்றாழ் நறுங்கூந்தற் பிடிதழீஇ மால்யானைக்
கன்றினு முக்கட் களிறு.

இது குறள்வெண்பா செப்பலோசையிற் சிதைத்துவந்த குறள்வெண்டாழிசை. இவையிரண்டும் குறள்வெண்பாவினம். 32

---

30. குறள்வெண்டாழிசை

*' சீர்பலவாய்*
*அந்தங் குறைநவுஞ் ........... ...........*
*........... ........... குறளினத் தாழிசையே.'* —காரிகை 26

நாற்சீரின் மிக்க, பலசீரான் வந்து, அடி இரண்டாய், ஈற்றடி குறைந்து வருவன குறட்டாழிசை எனப்படும். —காரிகை 26இன் உரைப்பகுதி

31. குறள்வெண்டாழிசை

*'செந்துறைப் பாட்டின் இழிபும்.....*
*........... ........... குறளினத் தாழிசையே.'* —காரிகை 26

அடி இரண்டாய், அளவு ஒத்து, விழுமிய பொருளும், ஒழுகிய ஓசையும் இன்றி, இவ்வாறே செந்துறை வெள்ளையில் சிதைந்து வருவன எல்லாம் செந்துறைச் சிதைவுத் தாழிசைக் குறள் எனப்படும். --காரிகை 26இன் உரைப்பகுதி

32. குறள்வெண்டாழிசை

*' அங்கேழ்*
*சந்தஞ் சிதைந்த குறளுங் குறளினத் தாழிசையே.'* —காரிகை 26

செப்பலோசையில் சிதைந்து, வேற்றுத் தளைதட்டு, குறள்வெண்பாவில் சிதைந்து வருவன எல்லாம் குறள்வெண்பாவிற்கு இனம் ஆகிய குறட்டாழிசை எனப்படும்.
—காரிகை 26இன் உரைப்பகுதி

## வெள்ளொத்தாழிசை

33 கனக மார் கவின்செய் மன்றில்
அனக நாட கர்க்கெம் மன்னை
மனைவிதாய் தந்தை மகள்.

இது மூன்றடியாய் வெண்பாவேபோல் முடிந்தமையான் வெள்ளொத்தாழிசை. இதனுள் ஆர் என நேரசைச்சீர் நின்று மேலே கவின் என நிரையசை வர மாஞ்சீர் போல இயற்சீர் வெண்டளையாயினவாறு காண்க. 33

34 (1) அம்பேருண் கண்ணார்க் கழிந்த மடநெஞ்சே
கொம்பே ருடையான் கழலிறைஞ்சா தென்கொலியாம்
வம்பே யிறந்து விடல்.

(2) வாணேருண் கண்ணார்க் கழிந்த மடநெஞ்சே
நீணாகம் பூண்டான் கழலிறைஞ்சா தென்கொலியாம்
வீணே யிறந்து விடல்.

(3) கோளாருண் கண்ணார்க் கழிந்த மடநெஞ்சே
ஆளாகி யாண்டான் கழலிறைஞ்சா தென்கொலியாம்
வாளா விறந்து விடல்.

இது சிந்தியல்வெண்பா ஒருபொருள்மேல் மூன்றடுக்கி வந்த வெள்ளொத்தாழிசை. 34

---

33. வெள்ளொத்தாழிசை

'வெண்டாழிசையே
மூன்றடி யாய்வெள்ளை போன்றிறும்' —காரிகை 27

மூன்று அடியான், ஈற்றடி வெண்பாவே போல முச்சீரான் இறுவது வெண்டாழிசை என்றும், வெள்ளொத்தாழிசை என்றும் வழங்கப்படும். —காரிகை 27இன் உரைப்பகுதி

34. வெள்ளொத்தாழிசை

சிந்தியல் வெண்பா ஒருபொருண்மேல் மூன்று அடுக்கி வருவன எல்லாம் வெள்ளொத்தாழிசை என்று வழங்கப்படும். —காரிகை 27இன் உரைப்பகுதி

35 பாசிருக்குந் தமிழ்மூவர் பாட்டிருக்குந் திருமன்றிற்
பரசொன் றேந்தி
அரசிருக்கும் பெருமானார்க் காட்செய்யா ரென்செய்வார்
முரசிருக்கும் படைநமனார் முன்னாகு மந்நாளே.

இது முதலடி அறுசீராய் ஏனையடி நாற்சீராய் வந்த மூன்றடி வெண்டுறை. 35

36 படர்தரும்வெவ் வினைத்தொடர்பாற் பவத்தொடர்பப்
பவத்தொடர்பாற் படரா நிற்கும்
விடலரும்வெவ் வினைத்தொடர்பவ் வினைத்தொடர்புக்
கொழிபுண்டே வினையேற் கம்மா
இடர்பெரிது முடையேன்மற் றென்செய்கே
னென்செய்கேன்
அடலரவ மரைக்கசைத்த வடிகளோ
வடிகளோ.

இது முதலடியிரண்டும் அறுசீராய் ஏனையடி நாற்சீராய் வந்த நான்கடி வெண்டுறை. 36

---

35. (35—38) வெண்டுறை

'மூன்றிழி பேழுயர்வாய்
ஆன்றடி தாஞ்சில வந்தங் குறைந்திறும் வெண்டுறையே.' —காரிகை 27

மூன்று அடிச் சிறுமையாய், ஏழு அடிப் பெருமையாய், இடையிடை நான்கு அடியானும், ஐந்து அடியானும், ஆறு அடியானும் வந்து, பின்பில் சில அடி சில சீர் குறைந்து வருவன, வெண்டுறை ஆம்.

ஆன்று அடி தாம் என்று சிறப்பித்தவதனால், முன்பில் சில அடி ஓர் ஓசையாயும், பின்பில் சில அடி மற்றோர் ஓசையாயும் வருவன ஒருசார் வேற்றொலி வெண்டுறை எனக்கொள்க.
—காரிகை 27இன் உரைப்பகுதி

37 கூற்றிருக்கு மடலாழிக் குரிசின்முத
லோரிறைஞ்சக் கொழுந்தேன் பில்கி
ஊற்றிருக்குந் தில்லைவனத் தசும்பிருக்கும்
பசும்பொன்மன்றத் தொருதா ளூன்றி
வண்டுபா டச்சுடர் மகுடமா டப்பிறைத்
துண்டமா டப்புலித் தோலுமா டப்பகி
ரண்டமா டக்குலைந் தகிலமா டக்கருங்
கொண்டலோ டுங்குழற் கோதையோ டுங்கறைக்
கண்டனா டுந்திறங் காண்மினோ காண்மினோ.

இது முதலடியிரண்டும் அறுசீராய் ஓரோசைத்தாய் ஏனையடி நாற்சீராய் வேறோரோசைத்தாய் வந்தமையான் **ஏழடி வேற்றொலி வெண்டுறை.** 37

38 உருவல னருவல னொருவன்மற் றிருவருக்
கரியவ னெனவுணர்ந் தறைகுந ரறைகமற்
பரவைதன் மனைவயிற் பாவல னேவலின்
இருமுறை திரிதலி னெளியனென் றெளியனும்
பரவுவன் மன்றம் பணிந்து.

இதுவும் ஈற்றடி சிறிது குறைந்து வந்தமையான் **ஓரொலி வெண்டுறை.** இதன் முதலடி நாற்சீரும் முரணத் தொடுத்தமையால் **முற்றுமுரண்.** அதுவே நாற்சீரும் இரண்டாமெழுத்து ஒன்றத் தொடுத்தமையால் **முற்றெதுகையுமாம்.** 38

## வெளிவிருத்தம்

39 அங்கட் கமலத் தலர்கமல மேயிரு நீரேபோலும்
வெங்கட் சுடிகை விடவரவின் மேயிரு நீரேபோலும்
திங்கட் சடையீருந் தில்லைவனத் துள்ளிரு நீரேபோலும்.

இது அடிதோறும் தனிச்சொற் பெற்று மூன்றடியான் வந்தமையால் **மூன்றடி வெளிவிருத்தம்.** 39

---

38. **முற்றுமுரண், முற்றெதுகை**

***25ஆம் செய்யுளின் இலக்கண அடிக்குறிப்பே இதற்கும் உரியதாகும்.***

39, 40. **மூன்றடி வெளிவிருத்தம், நான்கடி வெளிவிருத்தம்**

***'மூன்றடி யானு முடிந்தடி தோறு முடிவிடத்துத்***
***தான்றனிச் சொற்பெறுந் தண்டா விருத்தம்'*** —காரிகை 27

40 வெஞ்சமன் வஞ்ச வேலோ டெதிர்ந்தான் நமரங்காள்
அஞ்ச லெனுஞ்சொல் லார்சொல வல்லார் நமரங்காள்
மஞ்சிவ ரிஞ்சி மன்ற மிறைஞ்சீர் நமரங்காள்
நஞ்சம யின்றார் நல்குவர் மாதோ நமரங்காள்.

இது நான்கடியாய் அடிதோறும் தனிச்சொற் பெற்று வந்தமையால் நான்கடி வெளிவிருத்தம். 40

வெண்பாவியல் முற்றும்.

## ஆசிரியப்பா

### நேரிசை ஆசிரியப்பா

41 பொற்றாது பொதிந்த சிற்சபை பொலியப்
பச்சிளங் கொடியொடு படரும்
செக்கர் வார்சடைக் கற்பக தருவே.

இஃது ஈற்றயலடி முச்சீராய் ஏனையடி நாற்சீராய் வந்தமையால் **நேரிசை ஆசிரியம்.** இஃது அடிதோறும் முதற்சீர் முரணத் தொடுத்தமையான் **அடிமுரண்தொடை.** இதனுள்ளே பொதிந்த சிற்சபை என **நேரொன்றாசிரியத்தளையும்,** சிற்சபை பொலிய என **நிரையொன்றாசிரியத்தளையும்** வந்தவாறு காண்க. இதனானே **ஆசிரியம் மூன்றடிச் சிறுமையுடைத்தென்பதூஉம்** அறிக. 41

---

**செய்யுள் எண் 39, 40இன் அடிக்குறிப்புத் தொடர்ச்சி**

மூன்று அடியானும் முற்றுப்பெற்று, அடிதோறும் ஒருசொல்லே இறுதிக்கண் தனிச்சொல்லாய் வருவது வெளிவிருத்தம் எனப்படும்

மூன்று அடியானும் என்ற உம்மையால், நான்கு அடியானும் வரப்பெறும், எனக் கொள்க. காரிகை 27இன் உரைப்பகுதி

**41. நேரிசை ஆசிரியம்**

*'கடையயற் பாதமுச் சீர்வரின் நேரிசை'* —காரிகை 28

ஈற்றயலடி முச்சீரான் வருவது நேரிசையாசிரியப்பா. —28இன் உரைப்பகுதி

**அடிமுரண்தொடை**

*'மறுதலைத்த மொழியான் வரினு முரண்'* —காரிகை 16

அடிதோறும் முதற்கண் சொல்லானும், பொருளானும் மறுதலைப்படத் தொடுப்பது அடிமுரண்தொடை எனப்படும். —காரிகை 16இன் உரைப்பகுதி

**ஆசிரியம் மூன்றடிச் சிறுமை**

*'மூன்றகவற்கு ............ இழிபு'* —காரிகை 14

ஆசிரியப்பாவிற்கு மூன்று அடியே சிறுமை. —காரிகை 14இன் உரைப்பகுதி

42 பூஉந் தண்ணன் புனைமயி லகவ
மாஅங் குயில்கள் சாஅய்ந் தொளிப்பக்
கோஒ டரங்கண் முசுவொடும் வெரீஇக்
காஅ றழீஇக் கவிழ்ந்ந் தொடுங்கச்
சூஉன் முதிர்ந்து காஅல் வீஇழ்
வாஅன் றாஅழ் மழைப்பெய றலைஇத்
தேஎன் றாஅழ் பூஉங் காஅ
வளங்ங் கனிந்த மணிமன் றிஙன்
விளங்ங் கொளியை யுளங்கொள றவமே.

இதுவுமது. இஃது அடிதோறும் முதற்கண்ணே அளபெடுத்தமையான் **அடியளபெடைத்தொடை.** இதனுள்ளே **இணையளபெடை** முதலாகிய **விகற்பம் ஏழும்** முறையானே வந்தவாறு காண்க. ஏனைத்தொடை ஏழும், விகற்பம் இருபத்தெட்டும் முன்னர்க் காட்டப்பட்டன. 42

43 தண்ணென் கடுக்கை கண்ணீர் கலுழ்தர
வெண்மதிக் கண்ணி சூடும்
கண்ணுதற் கடவுள்
புண்ணியப் பொதுவி லாடும் பூங்கழ லிறைஞ்சுதும்
விண்ணிமைப் போகிய விடுபெறற் பொருட்டே.

இது முதலடியும் ஈற்றடியும் அளவடியாய்க் குறளடியும் சிந்தடியும் இடையிட்டுத் தொடுத்தமையான் **இணைக்குறளாசிரியம்** இவ்வகவலுள்ளே புண்ணியப் பொதுவி லாடும் பூங்கழ லிறைஞ்சுதும் என நெடிலடியும் அருகி வந்தவாறு காண்க. குறளடிமுதல் நான்கும் இதனுள்ளே வந்தன; ஏனைக் கழிநெடிலடி ஆசிரிய விருத்தத்துட் காண்க. 43

---

**42. அடியளபெடைத்தொடை.**

*' முதல்மொழிக்கண்*
*அழியா தளபெடுத் தொன்றுவ தாகும் அளபெடையே'* —காரிகை 16

*அடிதோறும் முதற்கண் உயிரானும், ஒற்றானும் அளபெடுத்து ஒன்றிவரத் தொடுப்பது அடியளபெடைத்தொடை எனப்படும்.* —காரிகை 16இன் உரைப்பகுதி

**43. இணைக்குறளாசிரியம்**

*' காமருசீர்*
*இடைபல குன்றின் இணைக்குறள்'* —காரிகை 28

*ஈற்றடியும், முதல் அடியும் ஒழிந்து, இடையடிகள் இரண்டும், பலவும் குறளடியானும் சிந்தடியானும் வருவன இணைக்குறளாசிரியப்பா,* —காரிகை 28இன் உரைப்பகுதி

44 மாயிரு விசும்பில் தூநிலாப் பரப்பிப்
பாயிருள் சீக்கும் பனிமதிக் கண்ணியும்
மின்செய் கொண்மூ வெள்ளிவீழ் வீழ்ப்பப்
பொன்செய்மலர்ப் பூங்கொன்றையும்
புலியூர் மன்றி னொலிகழன் மிழற்றப்
பரம நாடக மிருவரைக் காட்டும்
எரிநிறத் தைமுகத் தெண்டோண் முக்கட்
கருமிடற் றொருவநின் செஞ்சடை பொலிதலின்
நோயு மருந்து மோர்வழிக் கிடைத்தென
ஆருயிர் தரித்தன னன்றே யதாஅன்று
தெள்ளமு தன்னவ ருள்ளுயிர் குடிக்குமித்
திங்க ளொன்றே திருமுடிக் கணியினக்
கங்கை யாளு முயிர்வா ழாளே.

இது முற்றும் நேரடியாய் வந்தமையின் நிலைமண்டில ஆசிரியம். இதனுள்ளே பாயிருள் சீக்கும் பனிமதிக் கண்ணியும் என இயற்றளை வெள்ளடியும், பொன்செய்மலர்ப் பூங்கொன்றையும் என வஞ்சியடியும் மயங்கிவந்தவாறு காண்க. எரிநிறத் தைமுகத் தெண்டோள் முக்கண் என முதற்சீரொழிந்து ஏனை மூச்சீரும் முரணத் தொடுத்துக் கடைக்கூழைமுரண் வந்தவாறுங் காண்க. 44

---

## 44. நிலைமண்டில ஆசிரியம்

'எல்லா அடியுமொத்து
நடைபெறு மாயின் நிலைமண்டிலம்' —காரிகை 28

எவ்வா அடியும் தம்முள் அளவு ஒத்து நாற்சீரடியாய் வருவது நிலைமண்டில ஆசிரியப்பா. —காரிகை 28இன் உரைப்பகுதி

### கடைக்கூழை முரண்

'மற்றொருசார்
கருதிற் கடையே கடையிணை பின் கடைக் கூழையுமென்
றிரணத் தொடைக்கு மொழிவ ரிடைப்புண ரென்பதுவே.' —காரிகை 40

ஒருசார் ஆசிரியர் முரண்டொடையைக் கடைமுரணும், கடையிணைமுரணும், பின்முரணும், கடைக்கூழைமுரணும், இடைப்புணர்முரணும் என்று வேண்டுவர்.

கடைக்கூழைமுரண் ஆவது, முதல் சீர்க்கண் இன்றி, ஒழிந்த மூன்று சீர்க்கண்ணும் மறுதலைப்படத்தொடுப்பது. —காரிகை 40இல் உரைப்பகுதி

45 தீர்த்த மென்பது சிவகங் கையே
ஏத்த ருந்தலம் எழிற்புலி யூரே
மூர்த்தி யம்பலக் கூத்தன துருவே.

இது முதலிடைகடை யடிகளை மாறிமாறி உரைப்பினும் பொருள் திரியாமையின் அடிமறி மண்டில ஆசிரியம். 45

ஆசிரியப்பா முற்றும்.

## ஆசிரியவினம்

46 சத்தமு மாகியச் சத்தத் தாற்பெறும்
அத்தமு மாகலின் அனந்தன் கண்களே
உத்தம னைந்தெழுத் துருவங் காண்பன.

இது மூன்றடியாய்த் தம்மில் ஒத்து வந்தமையான் ஆசிரியத் தாழிசை.46

47 (1) சிற்றம் பலத்து நடிக்குஞ் சிவபெருமான்
கற்றைச் சடைக்கு முடிக்குஞ் சுடர்த்திங்கள்
மற்றப் புனல்மங்கை வாணுதலை யொக்குமால்.

(2) பேரம் பலத்து நடிக்குஞ் சிவபெருமான்
வார்செஞ் சடைக்கு முடிக்குஞ் சுடர்த்திங்கள்
நீர்மங்கை கொங்கைக்கு நித்திலக்கச் சொக்குமால்.

---

**45. அடிமறிமண்டில ஆசிரியம்**

'நடுவா தியந்தத்
தடைதரு பாதத் தகவ லடிமறி மண்டிலமே.' —காரிகை 28

எல்லா அடியும் முதல், நடு, இறுதியாக உச்சரிப்பினும், ஓசையும், பொருளும் பிழையாது வருவது அடிமறிமண்டிலவாசிரியப்பா. —காரிகை 28இன் உரைப்பகுதி

**46, 47. ஆசிரியத்தாழிசை**

'தருக்கியல் தாழிசை மூன்றடி யொப்பன' —காரிகை 29

மூன்று அடியாய்த் தம்முள் அளவொத்து வருவன ஆசிரியத் தாழிசை.

தருக்கியல் தாழிசை என்று சிறப்பித்தவதனால், ஒரு பொருள் மேல் மூன்று அடுக்கி வருவன சிறப்புடையன, தனியே வரப்பெறும் ஆயினும், எனக்கொள்க.

—காரிகை 29இன் உரைப்பகுதி

(3) பொன்னம் பலத்து நடிக்குஞ் சிவபெருமான்
பின்னுஞ் சடைக்கு முடிக்குஞ் சுடர்த்திங்கள்
அந்நங்கை செங்கைக் கணிவளையு மொக்குமால்.

இஃது ஒரு பொருள்மேல் மூன்றடுக்கிவந்த ஆசிரியத் தாழிசை. 47

## ஆசிரியத்துறை

48 நாகம் பொதிசடைமேல் நாண்மதியும் வான்மதிபோல்
நங்கை கங்குல்
மேகஞ்செய் கூந்தல் மிலைச்சுந் தலைக்கலனும்
விளங்கு தோற்றம்
ஆகம் பகுந்தளித்த அந்நாளில் அம்பலத்தான்
மாகம் பதியு மதியும் பகுந்தளித்த
வண்ணம் போலும்.

இது நான்கடியாய் ஈற்றயலடி குறைந்துவந்த ஆசிரியத்துறை. 48

---

48—51 ஆசிரியத்துறை

'நான்கடியாய்
ஈருத்தடி நைந்தும் இடைமடக் காயு மிடையிடையே
சுருக்கடி யாயும் துறையாம்' —காரிகை 29

நான்கு அடியாய் ஈற்றயல் அடி குறைந்து வருவனவும்,
நான்கு அடியாய் ஈற்றயல் அடி குறைந்து இடைமடக்காய் வருவனவும்,

நான்கு அடியாய் இடையிடை குறைந்து வருவனவும்,
நான்கு அடியாய் இடையிடை குறைந்து இடைமடக்காய் வருவனவும், ஆசிரியத்துறை.

நான்கு அடியாய் என்பதனை எல்லாவற்றோடும் கூட்டி, இடைமடக்காய் என்பதனை ஒருகால் இருதலையும் கூட்டி மத்திம தீபமாகப் பொருளுரைத்துக்கொள்க.

சீர் வரையறுத்து இலாமையால், எனைத்துச் சீரானும், அடியானும், வரப்பெறும்.

முதலயலடி குறைந்தும், நடுவு ஈரடி குறைந்தும், மிக்கும் வருவன ஆசிரியத்துறை ஆம்.
—காரிகை 29இன் உரைப்பகுதி

49 மாயிரு ஞாலத்து மன்னுயிர்கள் கண்களிப்ப
மன்று ளாடும்
நாயகன் கண்டங் கறுத்தன்றே பொன்னுலகை
நல்கிற் றம்மா
நாயகன் கண்டங் கறாதேலந் நாட்டமரர்
சேயிழை மாதர்க்குச் செங்கைகளுங் கொங்கைகளுஞ்
சிவக்கும் போலும்.

இஃது அவ்வாறே இடைமடக்காய் வந்த **ஆசிரியத்துறை.** 49

50 உண்டாங் கெனினு மிலதென் றறிஞர்கள்
பொய்யெனப் புகலவு மெய்யெனப் பெயர்பெற்
றுன்னாமுன மின்னாமென வுளதாய்
மாய்வது நிலையில் யாக்கை
கண்டாங் கிகழுங் கிழமுதி ரமையத்
தைவளி பித்தென மெய்தரும் வித்திற்
கடலிற் றிரையென வுடலிற் றிரையொடு
கலியா நின்றன நலிவுசெய் நோய்கள்
புண்டாங் கயின்முக் குடுமிப் படையொடு
மெயிறலைத் தழல்விழித் துயிருணக் கனல்சேர்
புகையாமென நிழலாமெனத் திரியா நின்றது
கொலைசெய் கூற்றம்
விண்டாங் ககலுபு மெய்ப்பொரு டுணிவோர்
மின்பொலி பொன்புனை மன்றிலெம் முயிராம்
விமலன் குஞ்சித கமலங் கும்பிட
வேண்டுவர் வேண்டார் விண்மிசை யுலகே.

இது முதலடியும் மூன்றாமடியும் பதினாற்சீராய், ஏனை இரண்டடியும் பதினாறு சீராய், வந்தமையின் இடையிடை குறைந்துவந்த **ஆசிரியத் துறை.** 50

51 திங்கட் சடைக்கற்றைப் புத்தே டிருமார்பிற்
பைங்கட் டலைகள் பலவு நகுவ போலுமால்
பைங்கட் டலைகள் பலவு நகுவகண்
டங்கட் கமலத் தயனு மாலு மழுவரால்.

இது முதலடியும் மூன்றாமடியும் நாற்சீராய், ஏனை இரண்டடியும் ஐஞ்சீராய் இடைமடக்காய் வருதலின் இடையிடை குறைந்து இடைமடக்காய் வந்த **ஆசிரியத்துறை.** 51

52 கனம ளித்தபைங் காவில்வெண் டரளமும்
பவளமுங் கமுகீனப்
புனம ளித்தபூங் கொன்றைபொன் சொரிதரப்
புண்ணிய மலர்தில்லை
வனம ளித்ததே யெனினுமோ ரானந்த
மாக்கடற் றிளைத்தாடும்
அனம ளித்தவேழ் பொழிற்குமோர் பலமென்ப
தம்பொனம் பலந்தானே.

இஃது அறுசீர்க் கடிநெடிலடியான் வந்த **ஆசிரியவிருத்தம்.** 52

53 கோமுனி வருக்குமரி தாய்முதும றைப்பனுவல்
கூறிய பரப்பிரமமாம்
ஓமெனு மெழுத்தின்வடி வாய்நட நவிற்றுபுலி
யூரன்மகு டச்சடிலமேல்

---

**52—56** ஆசிரிய விருத்தம்.

*'குறைவில்தொல் சீரகவல்*
*விருத்தங் கழிநெடில் நான்கொத் திறுவது.'* *—காரிகை 29*

*கழிநெடிலடி நான்காய்த் தம்முள் அளவு ஒத்து வருவன ஆசிரியவிருத்தம்.*

*குறைவில்தொல்சீர் என்று சிறப்பித்தவதனால், எண்சீரின் மிக்க சீரான் வந்த அடி எல்லாம் சிறப்பில, எனக்கொள்க.*

*………… …………*

*பதின்சீரின் மிக்கு வருவன எல்லாம் யாப்பருங்கலவிருத்தியுள் கண்டுகொள்க.*
*—காரிகை 29இன் உரைப்பகுதி*

***குறிப்பு:*** *யாப்பருங்கலக்காரிகையின் உரையில் பதின்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம் வரை சான்றுகாட்டப்பெற்றுள்ளது.*

மாமதி யினைத்தனது கோடென வெடுப்பமத
மாமுகன் முகக்கைதொடரத்
தூமதி பணிப்பகை யெனாவர நதிப்புகவொர்
தோணியென விட்டகலுமே.

இஃது எழுசீர்க் கழிநெடிலடியான் வந்த **ஆசிரியவிருத்தம்.** 53

54 அருவருக்கு முலகவாழ் வடங்க நீத்தோர்க்
கானந்தப் பெருவாழ்வா மாடல் காட்ட
மருவெருக்கன் மதிவளிவான் யமானன் றீநீர்
மண்ணெனுமெண் வகையுறுப்பின் வடிவு கொண்ட
ஒருவருக்கு மொருத்திக்கு முருவொன் றாலவ்
வுருவையிஃ தொருத்தனென்கோ வொருத்தி யென்கோ
இருவருக்கு முரித்தாக வொருவ ரென்றோர்
இயற்சொலில தெனின்யான்மற் றென்சொல் கேனே.

இஃது எண்சீர்க் கழிநெடிலடியான் வந்த **ஆசிரியவிருத்தம்.** 54

55 வளங்கு லாவரு மணங்க னார்விழி
மயக்கி லேமுலை முயக்கி லேவிழு மாந்தர்காள்
களங்கு லாமுட லிறந்து போயிடு
காடு சேர்முனம் விடு சேர்வகை கேண்மினோ
துளங்கு நீள்கழ றழங்க வாடல்செய்
சோதி யானணி பூதி யானுமை பாதியான்
விளங்கு சேவடி யுளங்கொ ளீர்யமன்
விடுத்த பாசமு மடுத்த பாசமும் விலக்குமே.

இஃது ஒன்பதின்சீர்க் கழிநெடிலடியான் வந்த **ஆசிரியவிருத்தம்.** 55

56 கைத்தலத்த முற்க ணிச்சி வைத்திடப்பு றத்தொ ருத்தி
கட்கடைப்ப டைக்கி ளைத்த திறலோராம்
முத்தலைப்ப டைக்க ரத்தெ மத்தர்சிற்ச பைக்கு ணிற்கும்
முக்கணக்க ருக்கொ ருத்தர் மொழியாரோ
நித்திலத்தி னைப்ப தித்த கச்சறுத்த டிக்க னத்து
நிற்குமற்பு தத்த னத்தி னிடையேவேள்
அத்திரத்தி னைத்தொ டுத்து விட்டுநெட்ட யிற்கணிக்க
லக்கணுற்றி டச்செய் விக்கு மதுதானே.

இது பதின்சீர்க் கழிநெடிலடியால் வந்த **ஆசிரியவிருத்தம்.** 56

**ஆசிரியவினம் முற்றும்.**

## கலிப்பா விகற்பம்

### நேரிசை யொத்தாழிசைக் கலிப்பா

—தரவு—

57 கொன்செய்த கலையல்குற் கொலைசெய்த மதர்வேற்கண்
மின்செய்த சிறுமருங்குற் பெருந்தேவி விழிகுளிர்ப்பப்
பொன்செய்த மணிமன்றி னடஞ்செய்த புகழோய்கேள்.

—தாழிசை—

(1) முருகுயிர்க்கு நறுந்தெரியன் மொய்குழலின் மையுண்கட்
பொருகயற்குன் றிருமேனி புதுவெள்ளப் புணரியே.

(2) தேன்மறிக்கும் வெறித்தொங்க லறற்கூந்தற் றிருந்திழைகண்
மான்மறிக்குன் றிருமேனி மலர்முல்லைப் புறவமே.

(3) பிறையளிக்குஞ் சிறுநுதலப் பெண்ணமுதின் பேரமர்க்கட்
சிறையளிக்குன் றிருமேனி தேனளிக்கும் பொதும்பரே.

—தனிச்சொல்—

அதனால்

—சுரிதகம்—

மதுவிரி கோதை மடவறற் கம்ம
புதுவிருந் துண்ண வுண்ணா
அதிசயம் விளைக்குநின் னற்புதக் கூத்தே.

இது, தரவொன்றும் தாழிசை மூன்றும் தனிச்சொல்லும் சுரிதகமுமாய் வருதலின் **நேரிசை யொத்தாழிசைக் கலிப்பா.** இதனுட் பிறையளிக்குஞ் சிறு நுதலப் பெண்ணமுதின் பேரமர்க்கண் என இரண்டாஞ்சீரும் ஈற்றுச்சீரும் முரணத் தொடுத்துப் **பின்முரண்** வந்தவாறு காண்க. இதனானே, **தரவு மூன்றடிச் சிறுமை யுடைத்தெனவும், தாழிசை இரண்டடிச் சிறுமை யுடைத்** தெனவும் உணர்க. 57

---

**57. நேரிசை யொத்தாழிசைக் கலிப்பா**

*' தரவொன்று தாழிசை மூன்று தனிச்சொற் சுரிதகமாய்*
*நிரலொன்றின் நேரிசை யொத்தா ழிசைக்கலி.'* —காரிகை 30

முன் ஒரு தரவு வந்து, அதன்பின் மூன்று தாழிசை வந்து, அதன்பின் ஒரு தனிச்சொல் வந்து, அதன்பின் ஆசிரியப்பாவானும், வெண்பாவானும் ஒரு சுரிதக உறுப்புப்பெற்று வருவது நேரிசை யொத்தாழிசைக் கலிப்பா. —காரிகை 30இன் உரைப்பகுதி

## அம்போதரங்க ஒத்தாழிசைக் கலிப்பா

—தரவு—

58 பேதைமீர் பேதைமீர்
பூமன்னு திசைமுகனும் புயல்வண்ணப் பண்ணவனும்
காமன்னு புரந்தரனுங் கடவுளரும் புடைநெருங்க
இருகோட்டுக் கிடைந்தவிடு கிடையவர்பல் லாண்டிசைப்ப
ஒருகோட்டு மழகளிறு மிளங்கோவு முடன்போத
அம்பொன்மணி மதிற்றில்லை நடராச னணிமறுகில்
செம்பொன்மணிப் பொலந்திண்டேர்த் திருவுலாப் போதுங்கால்.

—தாழிசை—

(1) பாரித்த பேரண்டஞ் சிறுபண்டி கொளப்பெய்து
வாரித்தண் புனற்றுஞ்சு மாலுக்கு மால்செய்வீர்
வேரித்தண் குழலார்கை வளைகொள்ள விழைந்தேயோ
பூரித்து வீங்குவதும் புயமென்பார் சிலமாதர்.

---

செய்யுள் எண் 57இன் அடிக்குறிப்புத் தொடர்ச்சி

பின்முரண்

'மற்றொருசார்
கருதிற் கடையே கடையிணை பின்கடைக் கூழையுமென்
றிரணத் தொடைக்கு மொழிவ ரிடைப்புண ரென்பதுவே.' —காரிகை 40

பின்முரண் ஆவது, இரண்டாம் சீர்க்கண்ணும், நான்காம் சீர்க்கண்ணும் மறுதலைப் படத் தொடுப்பது. —காரிகை 40இன் உரைப்பகுதி

தரவு மூன்றடிச் சிறுமை

'சுருங்கிற்று மூன்றடி யேனைத் தரவு' —காரிகை 42

அம்போதரங்கவொத்தாழிசைக் கலிப்பாவும், வண்ணகவொத்தாழிசைக் கலிப்பாவும் ஒழித்து அல்லாத கலிப்பாவிற்குத் தரவு மூன்று அடியே சிறுமை,

—காரிகை 42இன் உரைப்பகுதி

தாழிசை இரண்டடிச் சிறுமை

'தாழிசைப்பாச்
சுருங்கிற் றிரண்டடி யோக்கம் இரட்டி' —காரிகை 42

பொதுவகையால் தாழிசை சொல்லிப் போந்தாராயினும், தாழிசைகட்கு இரண்டு அடி சிறுமை, நான்கு அடி பெருமை, இடை மூன்று அடியாலும் வருவது.

—காரிகை 42இன் உரைப்பகுதி

(2) சொன்மாலை தொடுத்தணிந்த தொண்டர்க்குத் துணைவராய்
நன்மாலைக் குழலியர்பா னள்ளிருளிற் செலவல்லீர்
பன்மாத ருயிர்கொள்ளல் பழியன்றே பகைகொள்ளும்
வின்மார னுயிருண்ட விழிக்கென்பார் சிலமாதர்.

(3) அங்கமலன் முடைத்தலையே பலிக்கலனா வையமிடும்
மங்கையர்க ணலங்கவர்வான் பலிக்குழலு மாதவத்தீர்
தங்கலர்தங் கியமும்மைப் புரமன்றே தலையன்பின்
நங்கையர்தம் புரமுமது நகைக்கென்பார் சிலமாதர்.

—ஈரடி அம்போதரங்கம்—

அருங்கலை கவர்ந்துநீ ரளிக்கப் பெற்றநும்
இருங்கலை யினிதெமக் கென்ப ரோர்சிலர்.
நன்னிறங் கவர்ந்துநீர் நல்கப் பெற்றநும்
பொன்னிற மினிதெனப் புகல்வ ரோர்சிலர்.

—நாற்சீர் ஓரடி அம்போதரங்கம்—

தேரினை நோக்கியே திரிவர் சிற்சிலர்
ஏரினை நோக்கியே யெழுவர் சிற்சிலர்
தாரினை நோக்கியே தளர்வர் சிற்சிலர்
மாரினை நோக்கியே மருள்வர் சிற்சிலர்.

—முச்சீரோரடி அம்போதரங்கம்—

நலனழிந்து நிற்பார் சிலர்.
நாணுறந்து நிற்பார் சிலர்.
கலனழிந்து நிற்பார் சிலர்.
கண்கலுழ்ந்து நிற்பார் சிலர்.

—இருசீர் ஓரடி அம்போதரங்கம்—

பாடு வார்சிலர்.
ஆடு வார்சிலர்.
பரவு வார்சிலர்.
விரவு வார்சிலர்.

வாடு வார்சிலர்.
ஓடு வார்சிலர்.
மகிழு வார்சிலர்.
புகழு வார்சிலர்.

—தனிச்சொல்—

ஆங்கொருசார்

—சுரிதகம்—

முதிரா விளமுலை மழலையந் தீஞ்சொல்
மங்கை மற்றிவ ணங்குலக் கொழுந்து
கணங்குழை யவரொடும் வணங்கின ணிற்பச்
சோர்ந்தது மேகலை நெகிழ்ந்த தோள்வளை
சாந்தமுங் கரிந்தது தரளந் தீந்தன
இவ்வா றாயின எரிவளை செவ்விதின்
ஆம்பற் பூவின் முல்லையு முகைத்தில
இளையோள் சாலவு மம்ம
முதியோள் போலுங் காம நோய்க்கே.

இது தாழிசை தனிச்சொற்கிடையே நால்வகை அம்போதரங்கமும் பெற்று வருதலின் **அம்போதரங்க ஒத்தாழிசைக் கலிப்பா.** இதன் முதற்கண் பேதைமீர் பேதையீர் என **அடி கூனாய்** வந்தவாறு காண்க. 58

---

## 58. அம்போதரங்க ஒத்தாழிசைக் கலிப்பா

' நீர்த்திரைபோல்
மரபொன்று நேரடி முச்சீர் குறணடு வேமடுப்பின்
அரவொன்று மல்கு லதம்போ தரங்கவொத் தாழிசையே.' —காரிகை 30

கரைசாரக் கரைசார ஒருகாலைக்கொருகால் சுருங்கி வரும் நீர்த்தரங்கம் போல, நாற்சீரடியும், முச்சீரடியும், இருசீரடியும் ஆகிய அசையடிகளைத் தாழிசைக்கும், தனிச் சொற்கும் நடுவே தொடுத்துத் தரவு, தாழிசை, அம்போதரங்கம், தனிச்சொல், சுரிதகம் என்னும் ஐந்து உறுப்பு உடைத்தாய் வருவது அம்போதரங்க வொத்தாழிசைக் கலிப்பா.

—காரிகை 30இன் உரைப்பகுதி

### அடி கூனாய் வரல்

கொச்சகக் கலியுள் ஓர் அடி முழுதும் கூனாய் வரப்பெறும்; அவை சிறப்பில எனக் கொள்க.

--காரிகை 43இன் உரைப்பகுதி

## வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பா

—தரவு—

59 தொல்லுலகம் படுசுடிகைச் சுடர்மணி விளக்கேந்தும்
பல்பொறிய படவரவு மடுபுலியும் பணிசெய்ய
அந்தரதுந் துமிமுழங்க வமரர்மலர் மழைசிந்த
இந்திரனு மலரவனுங் கரியவனு மேத்தெடுப்பச்
சூடகத் தளிர்ச்செங்கைத் துணைவிதுணைக் கண்களிப்ப
ஆடகத் திருமன்றத் தனவரத நடஞ்செய்வோய்.

—தாழிசை—

(1) முன்மலையுங் கொலைமடங்க வீருரியு மும்மதத்த
வன்மலையின் கடமலையின் முடையுடலின் வன்றோலும்
பொன்மலையின் வெண்டுகிலுங் கருமுகிலும் போர்த்தென்ன
வின்மலையும் புயமலையின் புறமலைய விசித்தனையே.

(2) கடநாக மெட்டும்விடங் கானாக மோரெட்டும்
தடநாக மவையெட்டுந் தரித்துளபூந் துகிலொன்றும்
உடனாக வடல்புரியுங் கொடுவரியி னுடுப்பொன்றும்
அடனாக வரவல்குற் கணிகலையா யசைத்தனையே.

(3) வருநீலப் புயன்மலர மலரிதழிக் கண்ணியையும்
அருநீல முயற்களங்கம் அகன்றமதிக் கண்ணியையும்
கருநீலக் கண்ணியுமை செங்கைவரு கங்கையெனும்
திருநீலக் கண்ணியையுஞ் செஞ்சடைமேற் செறித்தனையே.

—அராகம்—

(1) கறைவிட முகவெரி கனல்விழி யொடுமிளிர்
பிறையெயி றொடுமிடல் பெறுபக டொடுமடல்
எறுழ்வலி யொடுமுரு மிடியென வருமொரு
மறலிய துயிர்கொள மலர்தரு கழலிணை.

(2) உலகமொ டுயிர்களு முலைதர வலம்வரும்
மலர்மகள் கொழுநனு மகபதி முதலிய
புலவரு மடிகளொர் புகலென முறையிட
அலைகடல் விடமுண மருதுசெய் தருளிணை.

(3) விசையிலெம் மிறைவியும் வெருவர விரசத
அசலம தசைதூர வடல்பூரி தசமுக
நிசிசரன் மணிமுடி நெறுநெறு நெறுவென
வசையில்பொன் மலரடி மணிவிர னிறுவினை.

(4) இலவிதழ் மதிநுத லிரதியோ டிரதம
துலைவற நடவிடு மொருவனும் வெருவர
அலைகட னெடுமுர சதிர்தர வெதிர்வரு
சிலைமத னனையடல் செயுநுதல் விழியினை.

—ஈரடி அம்போதரங்கம்—

அருவமு முருவமு மாகி நின்றுமவ்
வருவமு முருவமு மகன்று நின்றனை.
சொல்லொடும் பொருள்களாய்த் தோன்றி நின்றுமச்
சொல்லையும் பொருளையுந் துறந்து நின்றனை.

—ஓரடி அம்போதரங்கம்—

அந்நலம் விழைந்தவர்க் கறமு மாயினை.
பொன்னலம் விழைந்தவர் பொருளு மாயினை.
இன்னலம் விழைந்தவர்க் கின்ப மாயினை.
மெய்ந்நலம் விழைந்தவர் வீடு மாயினை.

—முச்சீரோரடி அம்போதரங்கம்—

முத்தொழிலின் வினைமுதல் நீ.
மூவர்க்கு முழுமுதல் நீ.
எத்தொழிலு மிறந்தோய் நீ.
இறவாத தொழிலினை நீ.
இருவிசும்பின் மேயோய் நீ.
எழில்மலரின் மிசையோய் நீ.
அரவணையிற் றுயின்றோய் நீ.
ஆலின்கீழ் அமர்ந்தோய் நீ.

—இருசீர் ஓரடி அம்போதரங்கம்—

| | | | |
|---|---|---|---|
| பெரியை நீ. | சிறியை நீ. | பெண்ணு நீ. | ஆணு நீ. |
| அரியை நீ. | எளியை நீ. | அறமு நீ. | மறமு நீ. |
| விண்ணு நீ. | மண்ணு நீ. | வித்து நீ. | விளைவு நீ. |
| பண்ணு நீ. | பயனு நீ. | பகையு நீ. | உறவு நீ. |

—தனிச்சொல்—

எனவாங்கு

—சுரிதகம்—

கற்பனை கழன்றநின் பொற்கழ லிறைஞ்சுதும்
வெண்மதிக் கடவுண் மீமிசைத் தவழ்தரத்
தண்முகிற் குலங்க டாழ்வுறப் படிதலிற்
செங்கா லன்னமும் வெண்மருப் பேனமும்
கீழ்மே றுருவ வரரழற் பிழம்பாய்
நின்றநின் றன்மையை யுணர்த்தும்
பொன்றிகழ் புலியூர் மன்றுகிழ வோனே.

இது தாழிசை அம்போதரங்கட்கிடையே அராகவுறுப்புப் பெற்றுக் கலி யுறுப்பு ஆறும் குறைவின்றி வந்தமையான் **வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பா.** இவ்வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பாவிற்கும், அம்போதரங்க ஒத்தாழிசைக் கலிப்பாவிற்கும் சிறுமை பெருமையின்றி ஆறடித்தரவே வந்தவாறுங் காண்க. 59

**ஒத்தாழிசைக் கலிப்பா முற்றும்.**

---

## 59. வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பா

'அசையடி முன்ன ரராகம்வந் தெல்லா வுறுப்புமுண்டேல்
வசையறு வண்ணக வொத்தா ழிசைக்கலி' —காரிகை 31

அம்போதரங்க உறுப்பிற்கும் தாழிசைக்கும் நடுவே அராக உறுப்புப்பெற்று, தரவு, தாழிசை, அராகம், அம்போதரங்கம், தனிச்சொல், சுரிதகம் என்னும் ஆறு உறுப்பினையும் உடைத்தாய் வரும் எனின், அது வண்ணக வொத்தாழிசைக் கலிப்பா எனப்படும்.

—காரிகை 31இன் உரைப்பகுதி

**வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பாவிற்கும்**
**அம்போதரங்க ஒத்தாழிசைக் கலிப்பாவிற்கும்**
**சிறுமை பெருமையின்றி ஆறடித் தரவு**

'இருமூன் றடியே
தரங்கக்கும் வண்ணகக் குந்தர வாவது' —காரிகை 42

அம்போதரங்க வொத்தாழிசைக் கலிப்பாவிற்கும், வண்ணகவொத்தாழிசைக் கலிப்பாவிற்கும் பெருக்கம் சுருக்கம் இல்லை; ஆறு அடியே தரவு ஆவது.

—காரிகை 42இன் உரைப்பகுதி

## வெண்கலிப்பா

60 சேல்செய்த மதர்வேற்கட் சிலைசெய்த சுடிகைநுதல்
மால்செய்த குழற்கோதை மகிழ்செய்ய நடஞ்செய்யும்
தருணவிளம் பிறைக்கண்ணித் தாழ்சடையெம் பெருமானின்
கருணைபொழி திருநோக்கிற் கனியாத கன்னெஞ்சம்
வாமஞ்சான் மணிக்கொங்கைக் கொசிந்தொல்கு மருங்குலவர்
காமஞ்சால் கடைநோக்கிற் கரைந்துருகா நிற்குமால்
அவ்வண்ண மாறிநிற்ப தகமென்றா லகமகம்விட்
டெவ்வண்ண மாறிநிற்ப தின்று.

இது கலித்தளை தட்டுத் துள்ளலோசைத்தாய் வெண்பாவேபோல் முடிந்தமையான் **வெண்கலிப்பா.** 60

61 அற்புத மணிமன்றில் அடிகணின் றடியுன்னார்
மைக்கடல் விடமென்னும் வடவைத்தீ யெழவஞ்சி
நொஎன வடிவீழ்ந்தார்க் குதவிலர் நாணார்கொல்
கைத்தல வடையாத்தூர் வரதத்தர் கைசெய்யாச்
சித்திர மன்ன சிலர்.

இது பிறதளை விரவி வந்த **வெண்கலிப்பா.** இதனுள்ளே நொ எனக் குற்றெழுத்து விட்டிசைத்தவழித் தனியே நின்று முதற்கண் நேரசையாயிற்று. அவ்விட்டிசை வல்லொற்றோடு ஒத்து எதுகையாய் நடத்தலின் இது **விட்டிசை வல்லொற்றெதுகை.** 61

---

**60. வெண்கலிப்பா**

**' வான்றளை தட்**
**டிசைதன தாகியும் வெண்பா வியைந்துமின் பான்மொழியாய்**
**விசையறு சிந்த டியாலிறு மாய்விடின் வெண்கலியே '** —காரிகை 31

**கலித்தளை தட்டு, கலியோசை தழுவியும், வெண்டளைதட்டு, வெள்ளோசை தழுவியும் வந்து, ஈற்றடி முச்சீரான் இறும் எனின், அது வெண்கலிப்பா என்றும், கலிவெண்பா என்றும் வழங்கப்படும்.** —காரிகை 31இன் உரைப்பகுதி

**61. விட்டிசை வல்லொற்றெதுகை**

**' நிரக்கும் எதுகை ' என்று சிறப்பித்தவதனால், விட்டிசை வல்லொற்றெதுகை என்றும், விட்டிசைமோனை என்றும் வேண்டுவாரும் உளர் எனக்கொள்க.**

**............**

**வல்லொற்று அடுத்தாற்போல விட்டிசைத்த குற்றெழுத்தினோடு புணர்ந்தமையால் விட்டிசை வல்லொற்றெதுகை.**

**—காரிகை 41இன் உரைப்பகுதி**

## கலிவெண்பா

62 தொடலைக் குறுந்தொடித் தோகாய்நம் பாவை
படலைச் சிறுமுச்சி யுச்சிப் பசுங்கிள்ளை
பேதைக் குழும்பொதுடு நென்னற் பொழுதின்கண்
வீதிக்கே நின்று விளையாட் டயருங்கால்
அஞ்சனக் கண்ணாளுந் தாமு மணிதில்லைச்
செஞ்சடைக் கூத்தனார் வெள்விடைமேற் றோன்றலும்
உண்ணெக் குருக வெதிர்ப்பட் டுடையானைக்
கண்ணிற் பிணித்து மனத்திற் கொடுபுக்
கிறைவளை சிந்த வணிதுகில் சோரப்
பிறரறியா வண்ணம் புணர்ந்தும் புணராள்போல்
மையுண்கண் ணீர்சோரச் சோர்தலும் வார்குழலார்
கைகோத் தெடுத்துக் கடிமனை கொண்டுய்ப்பப்
பைந்தண் குளிரி படுத்துக் கிடத்தலும்
செந்தீப் பிழம்பிற் கிடத்திச் செருச்செய்வ
தந்தோ கொடிதுகொடி தென்செய்தீ ரன்னைமீர்
பொன்னஞ் சிலையே சிலைபாப் புரமெய்தான்
தண்ணென் கடுக்கை கொணர்ந்தாரோ தம்மினென
மின்றந்த நுண்ணிடையா யெங்கோன் விரைத்தொங்கல்
தன்றந்தை தாளெறிந்தாற் கன்றித் தராரென்றேற்
கன்றே பகைநோக் களித்தாண்மற் றம்ம
சிறியாள் பெரும்பித் தறிந்திருந்துஞ் செவ்வி
அறியா துரைத்தேனந்து.

இது செப்பலோசைத்தாய் ஒரு பொருணுதலி அவ்வாறு வந்தமையால் கலிவெண்பா. 62

**வெண்கலி முற்றும்.**

---

**62. கலிவெண்பா**

*60 ஆம் செய்யுளின் இலக்கண அடிக்குறிப்பே இதற்கும் உரியதாகும்.*

*............ இது வெண்டளை தட்டு, வெள்ளோசை தழுவி, ஒரு பொருண்மேல் வந்தமையால், கலிவெண்பா.* —*காரிகை 31இன் உரைப்பகுதி*

## கொச்சகம்

### தரவு கொச்சகம்

63 அடிகொண்ட குனிப்பன்றே யரிபிரமர் முதலானோர்
முடிகொண்ட தலைவணக்கின் குனிப்பெல்லா முறைமுறைபோய்க்
கடிகொண்ட பொழிற்றில்லை நடராசன் கழற்காலிற்
குடிகொண்ட படிபோலு மிடத்தாளிற் குஞ்சிதமே.

இது கலித்தளை தட்டுத் தனிச்சொற் சுரிதகமும் பெறாது தனியே வந்த தரவு கொச்சகம். 63

—தரவு—

64 மல்லாண்ட திரடிண்டோ ணடுமுதலு மணிநாவிற்
சொல்லாண்ட மறைமுதலும் பலராங்குத் தொலைவெய்த
பல்லாண்டு செலச்செல்லா விளையோரும் பனிப்பெய்த
அல்லாண்ட நள்ளிருளில் அழலாடுந் தொழிலினையே.

---

63—68 தரவு கொச்சகம், தரவிணைக் கொச்சகம், சிஃறாழிசைக் கொச்சகம், பஃறாழிசைக் கொச்சகம், மயங்கிசைக் கொச்சகம்.

'தரவே தரவிணை தாழிசை தாமுஞ் சிலபலவாய்
மரபே யியன்று மயங்கியும் வந்தன ...........
......... ......... ......... வான்பெயர் கொச்சகமே.' —காரிகை 32

ஒரு தரவு வந்தும், இரண்டு தரவு வந்தும், தாழிசை சில வந்தும், தாழிசை பல வந்தும், தரவு, தாழிசை, அராகம், அம்போதரங்கம், தனிச்சொல், சுரிதகம் என்னும் ஆறு உறுப்பும் தம்முள் மயங்கியும், வெண்பாவினோடும், ஆசிரியத்தினோடும் மயங்கியும் வருவன எல்லாம் கொச்சகக்கலிப்பா என்று பெயரிட்டு வழங்கப்படும்.

'சொல்லின் முடிவி னப்பொருண் முடித்தல்' என்பது தந்திரவுத்தி ஆகலின், தரவு கொச்சகம் முதலாகிய அவ்வப்பெயரானே வழங்கப்படும். எனக் கொள்க.

ஒரு தரவு வந்தால் தரவுகொச்சகக்கலிப்பா என்றும், தரவு இரண்டாய் வந்தால் தரவிணைக் கொச்சகக் கலிப்பா என்றும், சில தாழிசை வந்தால் சிஃறாழிசைக் கொச்சகக் கலிப்பா என்றும், பல தாழிசை வந்தால் பஃறாழிசைக் கொச்சகக்கலிப்பா என்றும், தம்முள் மயங்கியும் பிறவற்றினோடு மயங்கியும் வருவன எல்லாம் மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா என்றும் வழங்கப்படும்.

தாமும் என்று மிகுத்துச் சொல்லியவதனால், தனிச்சொல்லும், சுரிதகமும் இடையிடை வரப்பெறும், எனக்கொள்க. —காரிகை 32இன் உரைப்பகுதி

—தனிச்சொல்—

அதனால்

—சுரிதகம்—

பல்பே ரூழி செல்லினு மடிகட்
கொல்லையுஞ் செல்லா தாகு மாகலின்
அளவில் கால மலக்கணுற் றுழலுமென்
தளர்வு நோக்காய் போலு நோக்கின்
கருணைசெய் தருளா யல்லை
அருணலம் பழுத்த வாடல்வல் லோயே.

இது தனிச்சொற் சுரிதகம் பெற்றுவந்த தரவுகொச்சகர். 64

## தரவிணைக் கொச்சகம்

—தரவு—

65 (1) குழைதூங்கு கழைமென்றோட் கோமாரி கொலைக்கண்கள்
இழைதூங்கு முலைக்கண்வைத் தேணெய்தா நாணெய்த
உழைதூங்கு மயிலேங்க வுருமுத்தீ யுகநக்கு
மழைதூங்கு பொழிற்றில்லை மணிமன்று ணடஞ்செய்வோய்.

(2) மீனேற்றின் றுவசத்தான் றனிதுஞ்ச விழித்தோய்நின்
ஆனேற்றின் றுவசமோ வடலேற்றி னூர்தியோ
கானேற்ற பைங்கூழின் கவளமாக் கணத்தின்கண்
வானேற்ற பகிரண்டம் வாய்மடுக்க வல்லதே.

—தனிச்சொல்—

எனவாங்கு

—சுரிதகம்—

பைந்துழாய் மவுலிப் பண்ணவ னுவப்ப
அந்தணர் பழிச்சவு மறத்தின் புங்கவன்
முனியான் முனிவன் போலும்
அனைய தன்றே யான்றோர் கடனே.

இது தரவிணைக்கொச்சகம். 65

## சிஃறாழிசைக் கொச்சகம்

—தரவு—

66 மறைதங்கு திருமன்றி னடங்கண்டு மகிழ்பூத்துக்
கறைதங்கு படவரவ மிமையாது கண்விழிப்பக்
குறைதங்கு கலைநிறைவிற் கோளிழைக்குங் கொல்லென்று
நிறைதங்கு தலையுவவு நிரம்பாது நிரப்பெய்தும்
பிறைதங்கு சடைக்கற்றைப் பெரும்பற்றப் புலியூரோய்.

—தனிச்சொல்—

எனவாங்கு

—தாழிசை—

1 வெள்ளெருக்குங் கரும்பாம்பும் பொன்மத்து மிலைச்சியெம
துள்ளிருக்கும் பெருமானின் திருமார்பி னுறவழுத்தும்
கள்ளிருக்குங் குழலுமையாள் முலைச்சுவட்டைக் கடுவொடுங்கும்
முள்ளெயிற்ற கறையரவ முழையென்று நுழையுமால்.

—தனிச்சொல்—

அதா அன்று

—தாழிசை—

2 சிலைக்கோடு பொருமருப்பிற் புகர்முகனின் திருமார்பில்
முலைக்கோடு பொருசுவட்டைக் கண்டுநின் முழவுத்தோள்
மலைக்கோடி விளையாடும் பருவத்து மற்றுத்தன்
கொலைக்கோடு பட்டவெனக் குலைந்துமனங் கலங்குமால்.

—தனிச்சொல்—

அதா அன்று

—தாழிசை—

3 விடமார்ந்த சுடரிலைவேல் விடலைநின் மணிமார்பின்
வடமார்ந்த முலைச்சுவட்டைக் கண்டுதன் மருப்பெந்தை
தடமார்பம் விடர்செய்யச் சமர்செய்தான் கொல்லென்று
கடமாவெங் கவுட்சிறுகட் கயாசுரனை வியக்குமால்.

—தனிச்சொல்—

அதனால்

—சுரிதகம்—

சிலைமுகங் கோட்டுமச் சில்லரித் தடங்கண்
முலைமுகங் கோட்டின ணகுமால்
மலைமுகங் கோட்டுநின் மற்புய மறைந்தே.

இது தரவு ஒன்றும் தாழிசை மூன்றும் இடையிடை தனிச்சொல்லும் பெற்றுச் சுரிதகத்தால் இறுதலின், சிஃறாழிசைக் கொச்சகம். 66

## பஃறாழிசைக் கொச்சகக் கலிப்பா

—தரவு—

67 ஒருநோக்கம் பகல்செய்ய வொருநோக்க மிருள்செய்ய
இருநோக்கிற் றொழில்செய்துந் துயில்செய்து மிளைத்துயிர்கள்
கருநோக்கா வகைகருணைக் கண்ணோக்கஞ் செய்ஞ்ஞானத்
திருநோக்க வருநோக்க மிருநோக்குஞ் செயச்செய்து
மருநோக்கும் பொழிற்றில்லை மணிமன்றுள் நடஞ்செய்வோய்.

—தாழிசை—

1 கடிக்கமலப் பார்வைவைத்துங் கண்ணனார் காணாநின்
அடிக்கமல முடிக்கமல மறியாதே மறிதுமே.

2 முத்தொழிலின் முதற்றொழிலோன் முடியிழந்தான் தலையிழந்த
அத்தொழிலிற் கெனிற்றமியே மறிதொழிற்கும் வல்லமே.

3 இருக்கோல மிட்டுமின்னு முணராதா லெந்தைநின்
திருக்கோல மியாமுணர்ந்து சிந்திக்கக் கடவமே.

4 நான்மறைக்குந் துறைகண்டார் தோளிழந்தார் நாவிழந்திங்
கூன்மறைக்க மறைப்புண்டே முய்த்துணர்வு பெரியமே.

5 தாமடிகண் மறந்துமறித் தலைகொண்டார் கலைவல்ல
மாமடிகள் யாமடிகள் மறவாமை யுடையமே.

6 பலகலையுங் குலமறையும் பயின்றுணர்ந்தும் பயன்கொள்ளா
துலகலையுஞ் சிலகலையு முணராதே முணர்துமே.

—தனிச்சொல்—

அதனால்

—சுரிதகம்—

அம்மநின் றன்மை யெம்மனோ ருணர்தற்
கரிதே யெளிதே யாதல்
பெரிதே கருணை சிறியே மாட்டே.

இது பஃறாழிசைக் கொச்சகக் கலிப்பா. 67

## மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா

—தரவு—

68 1 தூண்முகத்த கரிமுகங்கள் நிரைத்தார்ப்பத் தொடுகடல்வாய்
வான்முகத்த மழைக்குலங்கள் மறிபுனல்வாய் மடுத்தென்னக்
கான்முகத்த மதுகரத்தின் குலமீண்டிக் கடிமலர்வாய்த்
தேன்முகக்கும் பொழிற்றில்லைத் திருச்சிற்றம் பலத்துறைவோய்.

2 புற்புதமுந் தொலைவெய்த நிலையெய்தாப் புலையுடம்பின்
இற்புதவு துறந்திறவா இன்பவீ டெய்தவொரு
நற்பதவு திறந்தன்ன நறும்பொதுவின் அங்கையுடன்
அற்புதவு மானந்த நடம்பயிலும் அறவோய்கேள்.

—தாழிசை—

1 எவ்விடத்தில் எப்பொருளும் ஒருங்குண்ண விருக்குநீ
வெவ்விடத்தை யெடுத்தமுது செய்ததுமோர் வியப்பாமே.

2 எண்பயிலா உலகடங்க ஒருநொடியில் எரித்திடுநீ
விண்பயிலும் எயில்மூன் றும் எரித்ததுமோர் வீரமே.

3 பெருவெள்ளப் பகிரண்டந் தரித்திடுநீ பெயர்த்துமலை
பொருவெள்ளப் புனற்கங்கை தரித்ததுமோர் புகழாமே.

4 மாயையினால் அனைத்துலகு மயக்குநீ மாமுனிவர்
சேயிழையார் சிலர்தம்மை மயக்கியதோர் சிறப்பாமே.

5 மேதக்க புவனங்கள் தொலைத்திடுநீ வெகுண்டாய்போல்
மாதக்கன் பெருவேள்வி தொலைத்ததுமோர் வன்மையே.

6 ஒருருவாய் நிறைந்தநீ யிருவர்க்கன் றுணர்வரிய
பேருருவொன் றுடையையாய் நின்றதுமோர் பெருமையே.

—அராகம்—

1 அறிவினி லறிபவ ரறிவதை யலதொரு
குறியினி லறிவுறு குறியிலனையலை.

2 உளவையி னுளவள வுணர்வதை யலதுரை
அளவையி னளவிடு மளவினையலை.

3 அருவெனி னுருவமு முளையுரு வெனிலரு
வுருவமு முளையவை யுபயமு மலை.

4 இலதெனி லுளதுள தெனிலில திலதுள
தலதெனி னினதுரு வறிபவரெவர்.

—தாழிசை—

1 எத்தொழிலுங் கரணங்கள் இறந்தநினக் கிலையாந்து
மெய்த்தொழில்செய் வதுமடிகேள் விளையாட்டு நிமித்தமே.

2 சீராட்டு நினக்கிலையச் சீராட்டுஞ் சிறுமருங்குற்
பேராட்டி விளையாட்டுன் பெயர்த்தாகி நடந்ததே.

3 மெய்த்துயரம் உயிர்க்கெய்தும் விளையாட்டும் உலகின்ற
அத்திருவுக் கிலையதுவும் அவர்பொருட்டே யாமன்றே.

4 இன்னருளே மன்னுயிர்கட் கெத்தொழிலும் ஈன்றெடுத்த
அன்னைமுனி வதுந்தணயர்க் கருள்புரிதற் கேயன்றே.

5 எவ்வுருவு நின்னுருவு மவளுருவு மென்றன்றே
அவ்வுருவும் பெண்ணுருவும் ஆணுருவு மாயவே.

6 நின்னலா தவளில்லை யவளல்லால் நீயில்லை
என்னினீ யேயவனும் அவளுமா யிருத்தியால்.

—தனிச்சொல்—

அதனால்

—இருசீர் ஓரடி எட்டு அம்போதரங்கம்—

தந்தை நீ. தாயு நீ. தமரு நீ. பிறரு நீ.
சிந்தை நீ. உணர்வு நீ. சீவன் நீ. யாவு நீ.

—தனிச்சொல்—

எனவாங்கு

—சுரிதகம்—

நெஞ்சகங் குழைந்து நெக்குநெக் குருகநின்
குஞ்சித சரண மஞ்சலித் திறைஞ்சுதும்
மும்மலம் பொதிந்த முழுமலக் குரம்பையில்
செம்மாந் திருப்பது தீர்ந்து
மெய்ம்மையிற் பொலிந்த வீடுபெறற் பொருட்டே.

இது மயங்கிசைக் கொச்சகம். 68

கொச்சகக்கலி முடிந்தது.

கலிப்பா முற்றும்.

## கலியினம்

### கலித்தாழிசை

69 செல்லார் பொழிற்றில்லைச் சிற்றம் பலத்தெங்கள்
பொல்லா மணியைப் புகழ்மினோ வம்மின் புலவீர்காள்
முத்தேவர் தேவை முகிழூர்த்தி முன்னான
புத்தேளிர் போலப் புகழ்மினோ வம்மின் புலவீர்காள்.
ஆங்கற் பகக்கன் றளித்தருளுந் தில்லைவணப்
பூங்கற் பகத்தைப் புகழ்மினோ வம்மின் புலவீர்காள்.

இது இரண்டடியாய் ஒருபொருள்மேல் மூன்றடுக்கி ஈற்றடி மிக்கு வந்த **கலித்தாழிசை.** 69

70 இருகூற் றுருவத் திருத்தண் பொழிற்றில்லை
ஒருகூற்றின் கூற்றை உணராய் மடநெஞ்சே
ஒருகூற்றின் கூற்றை உணரா யெனின்மற்றப்
பொருகூற்றந் தோற்றப் புலம்பேல் வாழி மடநெஞ்சே.

இஃது இடைமடக்காய் ஈற்றடி மிக்குவந்த **நான்கடிக் கலித்தாழிசை.** 70

71 காளி யாடக் கனலுமிழ் கண்ணுதல்
மீளி யாடுதல் பாருமே
மீளி யாடல் வியந்தவள் தோற்றெனக்
கூளி பாடிக் குனிப்பதும் பாருமே பாருமே.

இஃது இரண்டாமடி குறைந்து இடைமடக்காய் ஈற்றடி மிக்கு வந்த **நான்கடிக் கலித்தாழிசை.** 71

---

**69—71. கலித்தாழிசை**

*அடிவரை யின்றி யளவொத்து மந்தடி நீண்டிசைப்பிற்*
*கடிதலில் லாக்கலித் தாழிசை யாகும்.* —காரிகை 33

இரண்டு அடியும், பல அடியும் வந்து, ஈற்றடி மிக்கு, ஏனையடி தம்முள் அளவு ஒத்தும், ஒவ்வாதும் வருவது கலித்தாழிசை.

'அளவு ஒத்தும்' என்ற உம்மையால், ஈற்றடி மிக்கு ஏனையடி ஒவ்வாது வரப் பெறும் எனவும் கொள்க. 'கடிதல் இல்லாக் கலித்தாழிசை' என்று சிறப்பித்தவதனால், ஒரு பொருள் மேல் மூன்று அடுக்கி வருவது சிறப்புடைத்து, தனியே வரப்பெறும் ஆயினும், எனக்கொள்க. --காரிகை 33இன் உரைப்பகுதி

### கலித்துறை

72 பானற் கருங்கட் பசுந்தோகை யோகப் பயன்றுய்ப்பவத்
தேனக் கலர்கொன்றை சாருப் பியந்தந்த செயலோர்கிலார்
ஊனக்க ணிதுபிளை யொழுகும் புறக்கண் ணுளக்கண்ண தாம்
ஞானக்க ணேயாத னல்கும் பிரான்தில்லை நடராசரே.

இது நெடிலடி நான்காய் வந்தமையால் கலித்துறை. 72

### கட்டளைக் கலித்துறை

73 செவ்வாய்க் கருங்கட்பைந் தோகைக்கும் வெண்மதிச் சென்னியற்கும்
ஒவ்வாத் திருவுரு வொன்றே யுளதவ் வுருவிணைமற்
றெவ்வாச் சியமென் றெடுத்திசைப் பேமின் னருட்புலியூர்ப்
பைவாய்ப் பொறியர வல்குலெந் தாயென்று பாடுதுமே.

இது நேரசை முதலாகிய **கட்டளைக் கலித்துறை.** இதன் முதலடி முரணடுக்கி வந்தமையால் **வழிமுரண்தொடை.** 73

---

72. **கலித்துறை**

*'கலித்துறையே*
*நெடிலடி நான்காய் நிகழ்வது'* —காரிகை 33

*ஐஞ்சீரடி நான்காய் வருவது கலித்துறை.* —காரிகை 33இன் உரைப்பகுதி

73, 74. **கட்டளைக் கலித்துறை**

நேரசை முதலாகிய காரிகை, ஒற்று ஒழித்து, ஓர் அடிக்கு எழுத்துப் பதினாறும், நிரையசை முதலாகிய காரிகை, ஒற்று ஒழித்து, ஓர் அடிக்கு எழுத்துப் பதினேழும், எனக் கொள்க.

என்னை.

'அடியடி தோறு மைஞ்சீ ராகி
முதற்சீர் நான்கும் வெண்டளை பிழையாக்
கடையொரு சீரும் விளங்கா யாகி
நேர்பதி னாறே நிரைபதி னேழென்
றோதினர் கலித்துறை யோரடிக் கெழுத்தே.'

என்றார் ஆகலின். —காரிகை 1இன் உரைப்பகுதி

**வழிமுரண், வழியெதுகை**

"........இன்னும் 'ஒருக்கப் பெயரான் உரைக்கப்படும்' என்று சிறப்பித்தவதனால், பாவினங்கள் எல்லாத் தொடையானும் வரும் என்றார் ஆயினும், பெரும்பான்மையும் தலையாகு மோனையின் திரிந்தும், தலையாகெதுகையின் திரிந்தும் வாரா எனவும், செந்தொடை ஒழித்து, எல்லாத்தொடைக்கும் இனவெழுத்து வரத் தொடுப்பதூஉம், வழியெதுகை வரத் தொடுப்பதூஉம், வழிமுரண் வரத் தொடுப்பதூஉம் சிறப்புடைத்து எனவும் கொள்க. —காரிகை 41இன் உரைப்பகுதி

74 கரும்புஞ் சுரும்பும் அரும்பும் பொரும்படைக் காமர்வில்வேள்
இரும்புங் கரைந்துரு கச்செய்யு மாலிறும் பூதிதன்றே
விரும்பும் பெரும்புலி யூரெம்பி ரானருள் மேவிலொரு
துரும்பும் படைத்தழிக் கும்மகி லாண்டத் தொகுதியையே.

இது நிரையசை முதலாகிய **கட்டளைக் கலித்துறை.** இதன் முதலடி வழியெதுகை. 74

## கலிவிருத்தம்

75 கூகா வென்று குரைப்பதல் லாற்சமன்
வாவா வென்னில் வரேமென வல்லிரே
தேவே சன்பயில் தில்லையி னெல்லையிற்
சேர்வீ ரேலது செய்யவும் வல்லிரே.

இஃது அளவடி நான்காய் வந்தமையாற் **கலிவிருத்தம்.**

---

**75. கலிவிருத்தம்**

*'நேரடி யீரிரண்டாய்*
*விடினது வாகும் விருத்தம்'* — காரிகை—33

*நாற்சீரடி நான்காய் வருவது கலிவிருத்தம்.* — காரிகை 33இன் உரைப்பகுதி

### நெடிலெதுகை, நெடில்மோனை

**'வருக்கம் நெடில் இனம் வந்தால் எதுகையும் மோனையுமென்**
**றொருக்கப் பெயரால் உரைக்கப்படும்'** —காரிகை 41

**வருக்கவெழுத்தும், நெடிலெழுத்தும், இனவெழுத்தும், எதுகையும் மோனையுமாய் வந்தால், அவை வருக்கவெதுகை, நெடிலெதுகை, இனவெதுகை எனவும், வருக்கமோனை, நெடில்மோனை, இனமோனை எனவும் பெயரிட்டு வழங்கப்படும், ........... இரண்டாம் எழுத்து ஒன்றாதாயினும், இரண்டாம் எழுத்தின் மேல் ஏறிய நெடில் ஒப்புமை நோக்கி, நெடிலெதுகை என்று வழங்கப்படும்.**

**......... முதல் எழுத்து ஒன்றாதாயினும், முதல் எழுத்தின்மேல் ஏறிய நெடில் ஒப்புமை நோக்கி, நெடில்மோனை என்று வழங்கப்படும்.**
பரு. சித—13

இஃது அடிதோறும் இரண்டாமெழுத்து நெட்டெழுத்து வரத் தொடுத்தமையால் **நெடிலெதுகை.** முதலெழுத்து நெட்டெழுத்தே வரத் தொடுத்தமையால் **நெடின்மோனையுமாம்.** மூன்றாமடியும் நான்காமடியும் முதலெழுத்து அனுவெழுத்தாய் வந்தமையின் **அனுமோனை.** 75

கலிப்பாவினம் முற்றிற்று.

## வஞ்சிப்பா

### குறளடி வஞ்சிப்பா

76 மையயமீன்ற மறைக்கிழவனும்
கொய்துழாய்மவுலிக் குணக்கொண்டலும்
தருவார்நீழல் தார்வேந்தனும்
வரன்முறைதாழ்ந்து வாழ்த்திசைப்ப
மைதீருணர்வின் மழமுனிவனும்
மையரவரசும் பணிந்திறைஞ்ச
இமையம்பயந்த இளங்கொடியொடும்
தமனியப்பொதுவில் தாண்டவம்புரி
தில்லைவாணநின் திருவடிக்கீழ்ச்
சொல்லுவதொன்றிது சொலக்கேண்மதி

---

செய்யுள் எண் 75இன் அடிக்குறிப்புத் தொடர்ச்சி

அனுமோனை

இனவெழுத்துப் பெற்று, மோனை முதலாகிய தொடையும், தொடை விகற்பமும்... ......... இனவெழுத்து ஆம் ஆறு ;

தானம் ஒத்த குறிலும் நெடிலும் தம்முள் இனம் ஆம்.
அகர ஆகார ஐகார ஔகாரங்கள் தம்முள் இனம் ஆம்.
இகர ஈகார எகர ஏகாரங்கள் தம்முள் இனம் ஆம்.
உகர ஊகார ஒகர ஓகாரங்கள் தம்முள் இனம் ஆம்.

ஒற்றினுள் ;

சகர தகரங்கள் தம்முள் இனம் ஆம்.
ஞகர நகரங்கள் தம்முள் இனம் ஆம்.
மகர வகரங்கள் தம்முள் இனம் ஆம்.

இவற்றை அனு என்று வழங்குவாரும் உளர்.

கமலலோசனன் கண்படுக்கும்
அமளியை நின் மருங் காதரித்தனை
செங்கேழ் நறுநுதல் திருமகளொடும்
அங்கவன் உறைதரும் ஆழிச் சேக்கையைப்
புலிக்கால் முனிவரன் புதல்வனுக்கு
நலத்தகு கருணையின் நயந்தளித்தனை, அவன்

அதனால்

பாயலும் அமளியும் இன்றி மன்றநின்
வாயிலின் நெடுநாள் வைகினனைய
அத்திரு மனையவற் களித்திநின்
மெய்த்தொழி லன்றே விடு நல்குவதே.

இது குறளடி வஞ்சிப்பா. இதன் அடி முதற்கண்ணே பொதுச்சீர் பதினாறும் வந்தன. 'தார்வேந்தனும்' எனவும், 'குணக்கொண்டலும்' எனவும், 'மறைக்கிழவனும்' எனவும், 'தாண்டவம்புரி' எனவும் வஞ்சிச்சீர் நான்கும் வந்தன. இதனுள்ளே 'அங்கவன் உறைதரும் ஆழிச் சேக்கையை' எனவும் ஆசிரியவடி அருகி வந்தது. அவன் என வஞ்சியீற்றின்கண் அசைகூனாய் வந்தது. 76

---

## 76, 77 குறளடிவஞ்சிப்பா, சிந்தடி வஞ்சிப்பா

'தனிச்சொல் வந்து
மறைதலில் வாரத்தி னாலிறும் வஞ்சி.' —காரிகை 34

குறளடி வஞ்சிப்பாவும், சிந்தடி வஞ்சிப்பாவும் தனிச்சொல் பெற்று, ஆசிரியச் சுரிதகத்தால் இறும். —காரிகை 34இன் உரைப்பகுதி

'நிரையான் இறுப
............ வகுத்த வஞ்சிக்குரிச்சீர்' —காரிகை 6

நிரையசை இறுதி ஆகிய மூவசைச்சீர் நான்கும் வஞ்சியுரிச்சீர் எனப்படும். —காரிகை 6இன் உரைப்பகுதி

.........இக்குறளடி வஞ்சிப்பாவினுள் நாலசைச்சீர் பதினாறும் அடிதோறும் முதற்கண்ணே வந்தவாறு கண்டுகொள்க. —காரிகை 9இன் உரைப்பகுதி

'வஞ்சிக்கு மூன்றடி இழிபு' —காரிகை 14

வஞ்சிப்பாவிற்கு மூன்று அடியே சிறுமை. —காரிகை 14இன் உரைப்பகுதி

'வஞ்சியென்னும்
ஒண்பா அடிகுறள் சிந்தென் றுரைப்ப ஒலிமுறையே
......... .........

## சிந்தடி வஞ்சிப்பா

77 கடித்தாமரைக் கண்ணன்விழிக் கமலந்தர
அடித்தாமரைச் சுடர்ப்பருதி யருந்தருளின

அதனால்

புதுமலர்ப் பொழிற்றில்லை வாண
உதவியின் வரைத்தோ வடிகள்கைம் மாறே.

இது சிந்தடி வஞ்சிப்பா. 77

வஞ்சிப்பா முற்றும்.

---

செய்யுள் எண் 76, 77 இன் அடிக்குறிப்புத் தொடர்ச்சி

நண்பா அமைந்த நலமிகு தூங்கல்.' —காரிகை 21

வஞ்சிப்பா இருசீரடியானும் முச்சீரடியானும் வரப்பெறும் என்று சொல்லுவர் புலவர்.

வஞ்சிப்பா தூங்கலோசையான் வரும். —காரிகை 21இன் உரைப்பகுதி

### வஞ்சிப்பாவினுள் ஆசிரிய அடி பயிலல்

'வஞ்சி மருங்கின் எஞ் சா அகவல்
......... நண்ணும்' —காரிகை 39

வஞ்சிப்பாவினுள் ஆசிரியவடியும் கலியடியும் விரவி வரப்பெறும்.

எஞ்சா அகவல் என்று சிறப்பித்தவதனால், வஞ்சியுள் ஆசிரியவடி பயின்று வரும், கலியடியும் வெள்ளடியும் அருகி அன்றி வாரா எனக்கொள்க.

—காரிகை 39இன் உரைப்பகுதி

### வஞ்சியீற்றின் கண் அசை கூனாய் வரல்

'பொருளோ டடிமுதல் நிற்பது கூன் அதுவே பொருந்தி
இருள்சேர் விலாவஞ்சி ஈற்றினும் நிற்கும்' —காரிகை 43

அடிமுதற்கண் பாவினது பொருளைத்தழுவித் தனியே நிற்பது கூன் எனப்படும், அக்கூன் வஞ்சிப்பாவினது அடியின் இறுதிக்கண்ணும் நிற்கப்பெறும், ஈற்றினும் என்ற உம்மையால், வஞ்சிப்பாவின் அடி நடுவிலும் கூன் வரப்பெறும், எனக்கொள்க. இருள் சேர்விலா வஞ்சி என்று சிறப்பித்தவதனால், வஞ்சியடியின் நடுவும், இறுதியும் அசை கூனாய் வருவது சிறப்புடைத்து, சீர் கூனாய் வரினும் உகர இறுதியாகிய நேரீற்று இயற்சீராய் அல்லது வாரா, எனக்கொள்க.

அசைச்சீர் எல்லாப் பாவினுள்ளும் அருகி அல்லது கூனாய் வாராது எனக்கொள்க. எனவே, வெண்பா, ஆசிரியம், கலி என்னும் இவற்றின் இடையும், இறுதியும் கூன் வரப் பெறாது, எனக்கொள்க. —காரிகை 43இன் உரைப்பகுதி

## வஞ்சியினம்

### வஞ்சித்தாழிசை

78 1 பிணியென்று பெயராமே
தணிவின்று தவஞ்செய்வீர்
அணிமன்ற லுமைபாகன்
மணிமன்று பணியீரே.

2 என்னென்று பெயராமே
கன்னின்று தவஞ்செய்வீர்
நன்மன்ற லுமைபாகன்
பொன்மன்று பணியீரே.

3 அரிதென்று பெயராமே
வரைநின்று தவஞ்செய்வீர்
அருமன்றி லுமைபாகன்
திருமன்று பணியீரே.

இது குறளடி நான்காய் ஒருபொருள்மேல் மூன்றடுக்கி வந்தமையான் வஞ்சித்தாழிசை. 78

### வஞ்சித்துறை

79 பொன்செய்ம் மன்றில்வாழ்
கொன்செய் கோலத்தான்
மின்செய் தாடொழார்
என்செய் கிற்பரே.

இது குறளடி நான்காய் வந்தமையால் வஞ்சித்துறை. 79

---

**78. வஞ்சித்தாழிசை**

'குறளடி நான்கின மூன்றொரு தாழிசை' —காரிகை 34

இருசீரடி நான்காய் மூன்று செய்யுள் ஒருபொருள்மேல் அடுக்கி வருவன வஞ்சித் தாழிசையாம். —காரிகை 34இன் உரைப்பகுதி

**79. வஞ்சித்துறை**

'வஞ்சித்
துறையொரு வாது தனிவரு மாய்விடின்' —காரிகை 34

இரு சீரடி நான்காய் ஒருபொருள்மேல் ஒன்றாய்வருவது வஞ்சித்துறை —காரிகை 34இன் உரைப்பகுதி

## வஞ்சிவிருத்தம்

80 ஒன்றி னம்பர லோகமே
ஒன்றி னம்பர லோகமே
சென்று மேவருந் தில்லையே
சென்று மேவருந் தில்லையே.

இது சிந்தடி நான்காய் வந்தமையால் வஞ்சிவிருத்தம்.

வஞ்சிப்பாவினம் முற்றும்.

## மருட்பா

### புறநிலை வாழ்த்து மருட்பா

81 அரசியல் கோடா தரனடியார்ப் பேணும்
முரசியல் தானைவேல் மன்னர்—பரசோன்
கழலிணை பொதுவில்காப் பாக
வழிவழி சிறந்து வாழியர் பெரிதே.

இது முன்னர் வெண்பாவும் பின்னர் அகவலும் புறநிலை வாழ்த்தாய் வருதலின் புறநிலை வாழ்த்து மருட்பா. வெள்ளடியும் ஆசிரியவடியும் சமமாகலின் இது சமனிலை. 81

---

**80.** வஞ்சி விருத்தம்

'சிந்தடி நான்(கு)
அறைதரு காலை ......... விருத்தம்' —காரிகை 34

முச்சீரடி நான்காய் வருவது வஞ்சிவிருத்தம். —காரிகை 34இன் உரைப்பகுதி

**81—84 மருட்பா, புறநிலை வாழ்த்து மருட்பா, கைக்கிளை மருட்பா, வாயுறை வாழ்த்து மருட்பா, செவியறிவுறூஉ மருட்பா.**

பண்பார் புறநிலை பாங்குடைக் கைக்கிளை வாயுறைவாழ்த்
தொண்பாச் செவியறி வென்றிப் பொருண்மிசை யூனமில்லா
வெண்பா முதல்வந் தகவல்பின் னாக விளையுமென்றால்
.................. ...மருட் பாவென்னும் வையகமே. —காரிகை 35

புறநிலை வாழ்த்தும், கைக்கிளையும், வாயுறை வாழ்த்தும், செவியறிவுறூஉம்

## கைக்கிளை மருட்பா

82 பருந்தளிக்கு முத்தலைவேற் பண்ணவற்கே யல்ல
விருந்தளிக்கும் விண்ணோர் பிறர்க்கும்—திருந்த
வலனுயர் சிறப்பின் மன்ற வாணனக்
குலமுனி புதல்வனுக் கீந்த
அலைகட லாகுமிவ் வாயிழை நோக்கே.

இதுவும் அவ்வாறே கைக்கிளைப் பொருள்மேல் வருதலின் கைக்கிளை மருட்பா. வெள்ளடி குறைந்து ஆசிரியவடி மிகுதலின் இது வியனிலை. 82

## வாயுறை வாழ்த்து மருட்பா

83 வம்மின் நமரங்காள் மன்றுடையான் வார்கழல்கண்(டு)
உய்ம்மின் உறுதி பிறிதில்லை—மெய்ம்மொழிமற்
றென்மொழி பிழையா தாகும்
பின்மொழி நுமக்குப் பெரும்பயன் தருமே.

இது வாயுறை வாழ்த்து மருட்பா. 83

---

*செய்யுள் எண் 81—84இன் அடிக்குறிப்புத் தொடர்ச்சி*

என்னும் நான்கு பொருள்மேலும் வெண்பா முதலாக, ஆசிரியம் ஈறாக வரும் எனின், அதனை மருட்பா என்று வழங்குவர் புலவர்.

—காரிகை 35இன் உரைப்பகுதி

**81, 82 சமனிலை, வியனிலை**

பாங்குடைக் கைக்கிளை என்று சிறப்பித்தவதனால்.. .....

வெண்பாவடியும், ஆசிரியவடியும் ஒத்துவருவன சமனிலை மருட்பா என்றும், ஒவ்வாதன வியனிலை மருட்பா என்றும் வழங்கப்படும் என்றும் கொள்க.

—காரிகை 35இன் உரைப்பகுதி

## செவியறிவுறூஉ மருட்பா

84 வாழ்த்துமின் தில்லை நினைமின் மணிமன்றம்
தாழ்த்துமின் சென்னி தலைவற்கு—வீழ்த்த
புறநெறி யாற்றா தறநெறி போற்றி
நெறிநின் றொழுகுதிர் மன்ற
துறையறி மாந்தர்க்குச் சூழ்கட னிதுவே.

இது செவியறிவுறூஉ மருட்பா. 84

மருட்பா முற்றும்.

சிதம்பரச் செய்யுட்கோவை முற்றும்.

குமரன் துணை.

முத்துக்குமார சுவாமி தேசிகன் பாதார விந்தமே கெதி.

# அருஞ்சொற் குறிப்புரை

[எண்—பாடல் எண்]

**1.** பூங்கொன்றைக் கண்ணியான்—அழகிய கொன்றைமலர் மாலையைத் தரித்த சிவபெருமான். ஆங்கொன்றைக் கண்ணியவர்—ஆங்கு ஒன்றைக் கண்ணியவர். ஒன்று—வீடுபேறு. கண்ணியவர்—கருதிபவர். பொன் மன்று—தில்லைப் பொன்னம்பலம். இறைஞ்சிடுக—வணங்கிடுக.

**2.** மாதவன்—பெரிய தவத்தை உடையோன். உலகு—உலகத்திலுள்ள சான்றோர். தாள்காணார்—சிவபெருமானுடைய திருவடியைக் காணாத (அடி முடி தேடியதில்) திருமால். நாணுக்கொள—வெட்கங்கொள்ளுமாறு.

**3.** கண்ணுதல்—நெற்றிக்கண்ணையுடைய சிவபெருமான். வெல் கூற்றின் தோற்றம் கொளல்—பிறரை வெல்லும் எமனின் வடிவத்தைக் காண்பது,

**4.** கண்ணி—அடையாள மாலை. மாலை—திருமுடியிற் சுற்றப்பட்ட மாலை. ஆரம்—மாலை. திருவரை—திரு அரை—அரை—இடுப்பு. பொரு புயம்—போர் செய்தலில் வல்ல புயம். கங்கணம்—கடகம்.

**5.** கறை—நஞ்சு. திங்கள்—(இங்கே) பிறை. இறைவி—உமாதேவி. நறுநுதல்—நெற்றி. கைமான்—சிவபெருமானது கையிலுள்ள மான். காற் புலி—காலாற் புலியாகிய வியாக்கிரபாதர். அம்மான் விழிமானைக் கண்டு—அந்த மான்போன்ற உமாதேவியின் மான்விழியைக்கண்டு.

**6.** வணங்கு—வளைந்த. சிறுமருங்குல்—சிறிய இடை. பேரமர்க் கண்—பெரிய செவியுடன் போர் புரிகின்ற கண். மாதரணங்கு—உமாதேவி. நிணங்காலு முத்தலைவேல்—மாமிசுமொழுகும் சூலம். இணங்காது—பொருந் தாது.

**7.** வள்ளல்—சிவபெருமான். கபாலம்—பிரமனது தலையோடு. காணூஉ—கண்டு. புரத்தை—உடம்பை. இரும்புண்டரீகபுரத்து—பெரிய சிதம்பரத்தில். அரும்புண்டரீகத்து அயன்—அரியதாமரை மலர்மேல் எழுந்தருளியுள்ள பிரமன்.

**8.** கூற்றங் குமைத்த குரை கழற்கால்—எமனை உதைத்த சிவபெருமானின் திருவடி. தோற்றம்—பிறவி. ஏற்றினான்—இடப வாகனத்தை யுடையான்.

9. திரைகள்—அலைகள். யாக்கை—உடல். நமரங்காள்—நம்மவர்களே!

10. திருமன்றம் — பொன்னம்பலம்.

11. பூந்தண் பசுந்துழாய்ப் போது—அழகிய குளிர்ச்சி பொருந்திய பசிய துளசி மலர். நறா—தேன். தேவன்—திருமால். தேவி—உமாதேவி. காந்தன்—கணவன். காமுறார்—விரும்பமாட்டார்கள். பாந்தள் முடிச்சூடும் பூ—ஆதிசேடன் திருமுடியில் தாங்கியுள்ள பூமி(யில் பிறத்தலை).

12. புனலமுவம்—நீர்ப்பரப்பு. உடைந்து—மலர்ந்து. ஓர் தாள் ஊன்றி—ஒரு தண்டை ஊன்றி (ஒற்றைக் காலில் நின்று.) வனசங்காள்—தாமரை மலர்களே!. செய்தவநீர் — நீர்செய்தவம் (நீங்கள் செய்யும் தவம்.) பொருவிடையோன — போர் செய்கின்ற இடபத்தையுடைய சிவன். தெய்வப் புலியூரை ஒப்பாள் — தெய்வத்தன்மை வாய்ந்த தில்லையைப் போலும் பொலிவினை உடையாள்.

13. வேதம் துறைசெய்தான் — வேதத்தை வகைப்படுத்திய வியாசர். மெய்துணியான் கைதுணிந்தான்—உண்மைப்பொருளை அறியாதவனாய்க் கை வெட்டப்பட்டான். பேதுற்றும் வெஃகேம் பிற — மற்றைத் தெய்வங்களை மயங்கியும் விரும்பமாட்டேம்.

14. செம்மல்—சிவபெருமான். எம்பெருமாட்டி—உமாதேவி.

15. ஆடகச் செம்பொன் — பொன்னில் ஒருவகை. பாடகம்—மகளிர் காலில் அணியும் ஓர் அணிகலன். சிறடி—சிறிய அடி. பாகத்தான்—உமாதேவியை ஒருபாகமாகக் கொண்ட சிவபெருமான். சூடகம்—கை வளை. கேள்வன்—கணவன். கூற்று—எமன்.

16. பேதுற்றார்—மயக்கமடைந்தோர். போதம் படரும்—சிவஞானம் பரவும். போது அம்பு அடரும்—மலரம்பு பாயும். (சிலேடை).

17. காமர் உயிர் செகுக்கும் கண்—மன்மதனுடைய உயிரை அழிக்கும் நெற்றிக்கண். மாதர் நலனழிக்குங் கண்—பெண்கள் நலனைக் கெடுக்கின்ற இடத்திருக்கண்ணாகிய சந்திரன். மாதருக்கு இன்னா இரவொழிக்குங் கண்—பெண்களுக்குத் துன்பந்தரும் இரவை அகற்றும் வலத் திருக்கண்ணாகிய சூரியன். சிவபெருமானின் முக்கண் இயல்பு கூறப்பட்டது.

18. செக்கர்—சிவப்பு. முக்கண் ஒருவன்—சிவபெருமான். இருசுடர்—சூரிய சந்திரர்.

19. வெல்கொடியும் ஆனேறு — சிவபெருமானது வெற்றிக்கொடியும் இடபக்கொடி. கண்டம்—கழுத்து.

20. கருந்தாது கொல்லும்—இரும்பை அடிக்கின்ற. கருங்கை—வலிய கை. வல்விலங்கு—வலிய கால் தளை. திருந்தாதார்—பகைவர். தூங்க—செயலொடுங்கி நிற்க. களிதூங்கி—மகிழ்ச்சிகொண்டு.

21. மதன்—மன்மதன். ஒன்னார்—பகைவர். பொன்னெயில் தீமடுத்தது—திரிபுரம் எரித்தது. பூமிசைபோன்—பிரமதேவன். கூர் உகிர்—கூரிய நகம். அடித்தலம்—பாதம். ஏற்றான்—இடபவாகனத்தையுடைய சிவன். பரசு—மழு. பினாகம்—வில். சேப்ப—சிவக்க. என்—எதற்காக.

22. மறிபுனல்—மேலுங் கீழுமாக அலைகள் மடங்கும் நீர். ஊன்—உடல். அளியோங்கள் செல்வம்—எளியஎங்களது செல்வம். புலன்—அறிவு. மாநாடகம்—திருநடனம்.

23. வண்டு, சுரும்பு, ஞிமிறு—வண்டின் வகைகள். இதழி நறுங் கண்ணி—கொன்றைமலர் மாலை. எண்டோள் முக்கண்ணான்—சிவபெருமான். அண்டர்கள்—தேவர்கள். மறலி—எமன். கொடிறு உடைக்கும்—கன்னத்தை உடைக்கும். உருகீர்கொல்லாம்—மனமுருகமாட்டீர்களோ!

24. கங்கை—கங்காதேவி. கண்மலர் சாத்த—கண்பார்வை செலுத்த. கருங்குவளை செங்குவளை—குவளை மலர் வகைகள். பசப்பு—பசலை.

25. கம்பம்—கட்டுத்தறி. கரடம்—யானை மதம். களிற்றின் கபாய்—யானைத் தோலாகிய பெருஞ்சட்டை. அம்பை—அம்பிகை, சிவகாமி அம்மை.

26. கூற்றம் குமைக்க வருமுன்—எமன் நம்மை வருத்த வருமுன்.

27. உம்பர்பெருமான்—தேவதேவன், சிவன். சடிலம்—சடை.

28. மழுவலத்தன்—மழுப்படையை வலத்திருக்காத்திலே ஏந்திய சிவபெருமான். தார் வேட்ட—மாலையை விரும்பிய. மான்—மான் போன்ற தலைவி.

29. அம்பொன்மேரு—அம்பொன் மேருமலைபோன்ற சிவபெருமான்.

30. கம்பை மா நதி—காஞ்சிபுரத்திலுள்ள கம்பாநதி. சிறுகன்னி—காமாட்சியம்மை. உம்பர்கோன்விடை—சிவபெருமானின் இடபம்.

31. கன்னி—உமாதேவி.

32. பிடி—பெண்யானை. களிறு—ஆண்யானை. முக்கட்களிறு—சிவபெருமான். கன்று—விநாயகர்.

33. எம் அன்னை—உமாதேவி.

சிவபெருமானுக்கு உமாதேவியார் போகசத்தியாயிருத்தலின் மனைவியெனவும், சத்தி சிவத்தை உதிப்பித்தலின் தாயெனவும், சிவஞ் சத்தி என்னும் வேறுபாட்டில் முன்னர்ச் சிவமும் பின்னர்ச் சத்தியுமாய் உதித்தலின் தங்கையெனவும், சிவத்தினின்றும் சத்தி உதித்தலின் மகளெனவும் கூறப்படுவார்.

34. அம்பேர் உண் கண்ணார்க்கு—அம்பையொத்த மையுண்ட விழிகளையுடைய பெண்களுக்கு. ஏறு—இடபம். வாள்நேர்—வாளை ஒத்த. தோள் ஆர்—வருத்துதலைச் செய்யும்.

35. பரசிருக்குந் தமிழ்—தேவாரம். பரசு—பராவுதல். பரசு—மழுவாயுதம். நமனார்—எமன்.

36. பவத்தொடர்பு—பிறவித்தொடர்பு. படர்தரும்—வந்து சேரும்.

37. கூற்றிருக்கும் அடலாழிக் குரிசில்—திருமால். குழற்கோதை—உமாதேவி.

38. உருஅலன்—உருவம் இல்லாதவன். அருஅலன்—அருவம் இல்லாதவன். பரவை—பரவை நாச்சியார். இருவருக்கும்—பிரமதேவருக்கும் திருமாலுக்கும். பாவலன்—சுந்தரமூர்த்தி நாயனார்.

39. அங்கட் கமலத் தவர்கமல மேயீரும்—அழகிய இடத்தையுடைய நீரில் மலர்கின்ற தாமரை மலரில் விரும்பி உறைகின்ற பிரமதேவரும், வெங்கட் சுடிகை விடவரவின் மேயீரும்—கொடிய கண்களையும் உச்சி மணியையும் விடத்தையுமுடைய பாம்பின்மேல் யோகநித்திரை புரியும் திருமாலும். மும்மூர்த்திகளாகவும் சிவபெருமானே விளங்குகிறார் என்பது பாடலின் கருத்து.

40. சமன்—யமன். அஞ்சல்—அஞ்சற்க எனும் சொல். மஞ்சு இவர் இஞ்சி—மேகம் ஏறித் தவழ்கின்ற மதில். நஞ்சம் அயின்றார்—நஞ்சையுண்டு தேவர்களைக் காத்த சிவபெருமான்.

41. பச்சிளங்கொடி—சிவகாமியம்மை. செக்கர் வார்சடைக் கற்பகத் தரு—சிவபெருமான்.

42. கோடரங்கள்—குரங்குகள். முசு—ஒருவகைக் குரங்கு. வெரீஇ—பயந்து. தழீஇ—தழுவி. தலைஇ—பெய்து.

**43.** தண்ணென்—குளிர்ச்சி அமைந்த. கடுக்கை—கொன்றைமலர். கண்ணீர்—கள் நீர்—தேனாகிய நீர். கலுழ்தர—சிந்த. சிவபெருமான் வெண் மதியாகிய வேறொரு மாலையைச் சூடுவதால் கொன்றை கண்ணீர் சிந்தியது எனும் பொருளும் உள்ளமை காண்க. வெண்மதிக் கண்ணி சூடும்—வெண்மதி யாகிய மாலையைச் சூடும். கண்ணுதற்கடவுள்—நுதலில்(நெற்றியில்)கண்ணை யுடைய சிவபெருமான். பொது—அம்பலம், சபை. விண்மிசைப் போகிய வீடு—சொர்க்க பதவிக்கும் மேலான முத்திப்பேறு.

**44.** மாயிரு விசும்பு—மிகப் பெரிய ஆகாயம். தூ—தூய. பாயிருள் சிக்கும்—பரந்த இருளை அகற்றும். பனிமதிக் கண்ணி—குளிர்ந்த பிறைமாலை. மின்செய் கொண்மூ—மின்னலை வெளிப்படுத்தும் மேகம். வெள்ளி வீழ் வீழ்ப்ப—வெள்ளிவிழுதை வீழ்த்துவது போல் மழைபொழிய. புலியூர்மன்று—தில்லைப் பொன்னம்பலம். மிழற்ற—ஓசையெழுப்ப. பரம நாடகம்—மேலான திருநடனம். இருவரைக் காட்டும்—பதஞ்சலி, வியாக்கிரபாதர் ஆகிய இருவருக்கும் காட்டும். ஐம்முகம்—ஐந்து முகங்களையுடைய சிவபெருமான். கருமிடறு—விடந் தங்கியதால் கறுத்த கண்டம்.

**45.** சிவகங்கை—சிதம்பரத்திலுள்ள பத்துத் தீர்த்தங்களுள் (புனித நீர் நிலை) சிறந்ததாகிய சிவகங்கை தீர்த்தம். புலியூர்—சிதம்பரம். அம்பலக் கூத்தன்—பொன்னம்பலத்தில் நடனமாடும் சிவபெருமான்.

**46.** சத்தம்—ஒலி; இங்கே திருவைந்தெழுத்தின் (பஞ்சாட்சரத்தின்) ஒலி. அத்தம்—அர்த்தம்—பொருள். அனந்தன் கண்கள்—ஆதிசேடனது கண்கள்; இங்கே பாம்புருவாகிய பதஞ்சலியாரின் கண்கள். கண்களே காதுகளாகி ஒலியுருவை அறியும் என்க.

**47.** சிற்றம்பலம்—ஞானசபை. நடிக்கும்—நடனமாடும். திங்கள்—பிறை. புனல்மங்கை—கங்கை. வாணுதல்—ஒளிபொருந்திய நெற்றி.

பேரம்பலம்—பெரிய சபை. நித்திலம்—முத்து. ஒக்குமால்—ஒத்திருக்கும்.

சிற்றம்பலம், பேரம்பலம், பொன்னம்பலம் ஆகியன சிவபெருமான் நடம்புரியும், சிதம்பரத்திலுள்ள வெவ்வேறு அம்பலங்கள்.

**48.** கங்குல்மேகம்—இருண்ட மேகம். தலைக்கலன்—தலையில் அணியும் அணி (பிறை). ஆகம் பகுந்தளித்த—உடம்பினில் பாதியை இறைவன் உமாதேவிக்குப் பகிர்ந்தளித்த (அர்த்தநாரீசுவரன்). மாகம்—வானம்.

**49.** மாயிரு ஞாலம்—மிகப்பெரிய உலகம். நாயகன்—சிவபெருமான். பொன்னுலகை நல்கிற்று—தேவலோகத்தைப் பாதுகாத்தது. (தேவர்களுக்கு உயிர் அளித்தது.) கறாதேல்—ஆலகால விடத்தை உண்டு கறுப்பு நிறத்தை அடையாதிருப்பின். அமரர் சேயிழை மாதருக்கு—தெய்வ மகளிருக்கு

**50.** உன்னா முனம்—நினைத்தற்கு முன்பே. மின் ஆம் என—மின்னலாகுமென்று கூறும்படி. நிலையில் யாக்கை—நிலையற்ற உடம்பு. கிழம் மூதிர் அமையத்து—கிழப்பருவம் முற்றிய சமயத்தில். ஐ வளி பித்து எனும்—சிலேட்டுமம் வாதம் பித்தம் என்று சொல்லப்படும். கடலில் திரையென—கடலின் அலைபோல. உடலில் திரை—உடலில் உண்டாகும் தோற்சுருக்கம். கலியாநின்றன—பெருகுகின்றன. அயில் முக்குடுமிப் படை—கூர்மையான திரிசூலம் (கூற்றுவனின் திரிசூலப்படை). எயிறு அலைத்து—பற்களைக் கடித்து. அழல் விழித்து—நெருப்புத் தோன்ற விழித்து. உயிர் உண—உயிர்களைக் கொல்ல. திரியாநின்றது (கூற்றம்)—திரிந்துகொண்டிருக்கின்றான் (கூற்றுவன்.) விண்டாங்ககலுபு—ஆங்கு விண்டு அகலுபு—அவ்விடத்திலிருந்தும் பிரிந்து நீங்கி. மின்பொலி—மின்னல் பொலியும். குஞ்சித கமலம்—வளைந்த திருவடி. விண்மிசை உலகு—சுவர்க்க பதவியின் மேலதாகிய வீடுபேறு.

**51.** புத்தேள்—சிவபெருமான். தலைகள்—பிரமதேவர், திருமால் ஆகியோரின் தலைகள். அங்கட் கமலம்—அழகிய இடமகன்ற தாமரை மலர். அயனும் மாலும்—பிரம்மனும் திருமாலும்.

**52.** கனம்—மேகம். பைங்காவில்—பசுமையான சோலையில். கமுகு—பாக்கு மரம். தரளம்—கமுகின் பாளை. பவளம்—கமுகின் பழம். புனம்—முல்லை நிலம். கொன்றை பொன் சொரிதர—கொன்றை மரம் பொன் போன்ற பூக்களைச் சிந்த. ஓர் ஆனந்த மாக்கடல்—சிவபெருமான். அனம்—அன்னம்—உமாதேவியார், ஏழ் பொழிற்கும்—ஏழு உலகங்களுக்கும்; ஏழு சோலைகளுக்கும். ஓர் பலம்—ஒருபயன், ஒரு பழம்.

**53.** கோமுனிவர்—தலைமைபெற்ற முனிவர்கள். முதுமறைப் பனுவல்—பழைமையாகிய வேதநூல். பரப்பிரமம்—மேலான கடவுள். நடம் நவிற்று புலியூரன்—திருநடனம் செய்கின்ற நடராசப்பெருமான். சடிலம்—சடை. கோடு—கொம்பு. எடுப்ப—எடுக்கும்பொருட்டு. மத மாமுகன்—விநாயகர். முகக்கை—தும்பிக்கை. தூமதி—தூய நிலா. பணிப் பகை—பாம்பாகிய பகைவன். வர நதிப் புக—கங்கை நதியில் புகுந்தோட.

**54.** அருக்கன்—சூரியன். வளி—வாயு, காற்று. யமானன்—இயமானன். எண்வகை உறுப்பின் வடிவு—அட்ட மூர்த்தம். ஒருவன்—

சிவபெருமான். ஒருத்தி—உமாதேவி, என்கோ—என்று சொல்வேனோ!. சொல்கேன்—சொல்லுவேன்.

55. குலாவரும்—விளங்குகின்ற. அணங்கு அனார்—அணங்கு அன்ன பெண்கள். முயக்கு—தழுவுதல். களம்—கள்ளம். முனம்—முன்னம். கேண்மின்—கேளுங்கள். துளங்கு—அசைகின்ற. தழங்க—ஒலிப்ப. சோதியான்—சோதி(ஒளி) வடிவானவன். அணி பூதியான்—திருநீற்றை அணிந்தவன். உமைபாதியான்—உமாதேவியைத் தம் உடலின் பாதியிடத்தில் கொண்ட சிவபெருமான். சேவடி—சிவபெருமானின் திருவடி. யமன் விடுத்த பாசமும் அடுத்த பாசமும் — எமனால் விடப்பெற்ற பாசக்கயிற்றையும் தொடர்ந்துவரும் பாசபந்தங்களையும்.

56. கணிச்சி—மழுவாயுதம். கட்கடைப்படைக்கு இளைத்த—கடைக்கண்ணாகிய படைக்கலத்திற்கு வலியிழந்த. முத்தலைப்படை—திரிசூலம். எம் அத்தர்—எம் தலைவராகிய சிவபெருமான். முக்கண நக்கர்—சிவபெருமான். நித்திலம்—முத்து. வேள்—மன்மதன். அத்திரம்—அஸ்திரம்—மலரம்பு.

57. கொன்செய்த—பெருமையாகச் செய்யப்பெற்ற. கலை—மேகலை. மருங்குல்—இடை. பெருந்தேவி—சிவகாமவல்லியம்மை. குளிர்ப்ப—குளிரும்படியாக.

முருகுயிர்க்கும்—வாசனை வீசும். நறுந்தெரியல்—நல்ல மாலை. பொருகயல்—(கண்ணாகிய) போர் செய்கின்ற கயல் மீனுக்கு. புதுவெள்ளப் புணரி—புதிய நீர் வெள்ளத்தையுடைய கடல்.

தேன்மறிக்கும் வெறித்தொங்கல்—தேன் வழிந்து ஒழுகும் நறுமண மாலை. அறற்கூந்தல்—கருமணலை ஒத்த கூந்தல். மான் மறி—மான்கன்று (மான் கன்றின் கண்). புறவம்—காடு, முல்லை நிலம்.

பிறையளிக்கும்—பிறை போன்ற. பேரமர்க்கண் சிறையளி — பெரிய போர்செய்யும் கண்ணாகிய சிறகுகளையுடைய வண்டு. பொதும்பர்—சோலை.

மதுவிரி கோதை மடவரல்—தேன் திகழும் மாலையணிந்த கூந்தலையுடைய உமாதேவி. கூத்து—நடனம்.

58. **தரவு** பேதைமீர்—பேதைப் பருவமுடைய பெண்களே! பூமன்னு திசைமுகன்—தாமரைப் பூவில் வீற்றிருக்கும் பிரமன். புயல்வண்ணப் பண்ணவன்—மேகம் போன்ற நிறத்தையுடைய திருமால். கா மன்னு புரந்தரன்—கற்பகச் சோலைகளையுடைய இந்திரன். புடை—பக்கம். இருகோட்டுக்கு—இரு மலைக்குவடுபோன்ற தனங்களுக்கு. இடுகு இடையவர்—சிறுத்த இடையினையுடைய பெண்கள். ஒருகோட்டு மழகளிறு—ஒற்றைக் கொம்பினையுடைய

விநாயகப்பெருமான். இளங்கோ—இளைய புதல்வனாகிய முருகப்பெருமான். உடன்போத—உடன் வர. மறுகு—வீதி.

**தாழிசை** பாரித்த—பரவிய. சிறுபண்டி—சிறிய வயிறு. வாரி—கடல். மால்—திருமால். மால்—மயக்கம். வேரி—தேன். சொன்மாலை தொடுத்தணிந்த தொண்டர்க்குத் துணைவராய் — சுந்தரமூர்த்தி நாயனார்க்குத் தோழராய். நன்மாலைக் குழலியர்—பரவை நாச்சியார். வின்மாரன்—கரும்பு வில்லையுடைய மன்மதன்.

அங்கமலன்—பிரமதேவன். முடை—புலால் நாற்றம். பலிக்கலன்—பிச்சை ஏற்கும் பாத்திரம். ஐயம—பிச்சை. மங்கையர்கள்—தாருகாவனத்து முனிவருடைய மனைவியர். தங்கலர்—பகைவர். மும்மைப்புரம்—திரிபுரம். தலையன்பின்—சிறந்த அன்பினையுடைய. நங்கையர்தம் புரம்—பெண்களின் உடம்புகள்.

**அம்போதரங்கம்** கலை—ஆடை. இருங்கலை—திகம்பரம் (நிருவாணம்). பொன்னிறம்—பசலைநிறம். ஏர்—அழகு. மார்—மார்பு. நலன்—அழகு, கற்பு. நாண்—வெட்கம். கலன்—அணிகலன், ஆபரணம். கண்கலுழ்ந்து—கண்ணீர்விட்டு.

**சுரிதகம்** கணங்குழையவர்—திரண்ட குழையைக் காதில் அணிந்த பெண்கள். சாந்தம்—சந்தனம். தரளம்—முத்து மாலை.

59- **தரவு** படு—பொருந்தும் சுடிகை—உச்சி. பல் பொறிய படஅரவு—பலவாகிய புள்ளிகள் நிறைந்த படத்தினையுடைய ஆதிசேடன். அடு புலியும்—கொல்லும்புலியும் (வியாக்கிரபாதர்). மலரவன்—பிரமன். கரியவன்—திருமால். சூடகம்—கைவளை. துணைவி—சிவகாமவல்லி. ஆடகத் திருமன்றம்—பொன்னம்பலம். அனவரதம்—எப்பொழுதும்.

**தாழிசை** முன்மலையும்—எதிர்நின்று போர் செய்யும். மடங்கல் ஈருரி—சிங்கத்தின் தோல். கடமலை—யானை. வில்மலையும்—வில்லை அணிந்த. விசித்தனை—கட்டினை.

கடநாகம் எட்டும்—மத நீரையுடைய திசை யானைகள் எட்டும். கால்நாகம்—விடத்தைக் கக்கும் பாம்பு. தடநாகம்—பரந்த மலைகள். பூந்துகில்—திக்காகிய ஆடை. கொடுவரி—புலி. உடுப்பு—ஆடை. அணிகலை—அழகிய ஆடை.

புயல்—மேகம். இதழிக் கண்ணி—கொன்றை மலர் மாலை. முயற் களங்கம்—சந்திரனிலிருக்கும் கருப்பு நிறம். செறித்தனை—அணிந்தாய்.

**அராகம்** உக—சிந்த. பிறை எயிறு—பிறையை ஒத்த பற்கள் பகடு—எருமைக்கடா. அடல் எறுழ் வலியொடும்—கொல்லத்தக்க வலிமையோடும். மறலி—யமன்.

உலைதர—அழிய. மலர்மகள் கொழுநன்—திருமால். மகபதி முதலிய புலவரும்—இந்திரன் முதலான தேவரும். அடிகள்—கடவுள்.

விசையில்—இராவணன் கைலைமலையைத் தூக்கிய வேகத்தினால். எம் இறைவி—உமாதேவி. வெருவர—அஞ்ச. இரசத அசலமது அசைதர—வெள்ளிமலை (கைலை மலை) அசைய. தசமுக நிசிசரன்—இராவணன். நெறுநெறு நெறுவென—நெறுநெறுவென்று நொறுங்க. வசையில்—குற்றமில்லாத. மணிவிரல்—பெருவிரல். நிறுவினை—ஊன்றினாய்.

இலவு இதழ்—முருக்கம் பூப்போன்ற உதடு. நடவிடும்—செலுத்தும், ஒருவன்—வசந்தன். வெருவர—அஞ்ச. சிலை மதனன்—கரும்பு வில்லையுடைய மன்மதன்.

**அம்போதரங்கம்** அந்நலம்—அறத்தின் நன்மை. இன்னலம்—இல் நலம்—இல்வாழ்வின் நன்மை. மெய்ந்நலம்—உண்மையான இன்பம். விடு—முத்திப்பேறு. முத்தொழிலின் வினைமுதல்—படைத்தல், காத்தல். அழித்தலென்னும் மூன்று தொழில்களையும் செய்யும் கர்த்தா. மூவர்க்கும் முழுமுதல்—முழுமுதற் கடவுள். இருவிசும்பின் மேயோய்—பெரிய விண்ணுலகிலுள்ள இந்திரன். மலரின் மிசையோய்—பிரமதேவன். அரவணையில் துயின்றோய்—திருமால். ஆலின் கீழ் அமர்ந்தோய்—கல்லாலின் கீழ் அமர்ந்த தட்சிணாமூர்த்தி.

கறபனை கழன்ற—புனைந்துரைக்கு அப்பாற்பட்ட. செங்கால் அன்னம்—பிரமன். வெங்கருப்பு ஏனம்—வராக அவதாரம் எடுத்த திருமால். ஏனம்—பன்றி. புலியூர் மன்று கிழவோன்—தில்லையம்பலத்திற்குரிய கடவுள்.

60. சேல் செய்த—சேல் மீனை ஒத்த. சிலை செய்த—வில்லை ஒத்த. சுடிகைநுதல்—சுட்டியணிந்த நெற்றி. மால் செய்த—மேகத்தை ஒத்த. தருண இளம் பிறை—மிக்க இளம்பிறை. தருணம்—இளமை.

வாயஞ்சால்—அழகுநிறைந்த. குழற்கோதை—உமாதேவி. திருநோக்கில்—அழகிய பார்வையில். அகம் அகம்விட்டு—மனமானது அகந்தையை விட்டொழித்து.

**61.** அடி உன்னார்—திருவடிகளை நினையாராய். மைக்கடல் விடமென்னும் வடவைத்தீ—கரிய கடலில் தோன்றிய நஞ்சென்று சொல்லத்தக்க வடவாமுகாக்கினி. நொ என—துன்பமென்று முறையிட்டு. கைத்தல அபயத்தர் வரதத்தர்—கையை அபயங்கொடுக்கும் தன்மையிலும் வரங்கொடுக்கும் தன்மையிலும் வைத்துள்ளவர்.

**62.** தொடலைக் குறுந்தொடி—மாலைபோலத் தொடர்ந்த சிறுவளையினை யுடையாள். தோகாய்—தோகையையுடைய மயில் போன்ற சாயல் உடையவளே! படலை—தழை விரவித் தொடுத்த மாலை. பேதைக் குழாம்—பேதை மகளிர் கூட்டம். நென்னற் பொழுது—நேற்றைய (அந்திப்) பொழுது. அஞ்சனம்—மை. அஞ்சனக் கண்ணாள்—உமாதேவியார். செஞ்சடைக் கூத்தனார்—சிவபெருமான். வெள்விடைமேல் சேறலும்—வெள்ளை இடபத்தின்மேல் உலாச்செல்லுதலும். உள்நெக்குருக—மனம்நெகிழ்ந்துருக. இறை—முன்கைச் சந்து பிறரறியா வண்ணம் புணர்ந்தும் என்றது உள்ளப்புணர்ச்சியை. குளிரி—ஒருவகை நீர்ப்பூண்டு. பொன்னஞ்சிலை—மேருமலை. சிலை—வில். புரமெய்தான்—திரிபுரமெரித்தான். கடுக்கை—கொன்றைமாலை. தன்றந்தை தாளெறிந்தான்—சண்டீசர். சிறியாள் பெரும்பித்து—சிறியாளது பெரிய மயக்கம். செவ்வி—சமயம்.

63. குனிப்பு—வளைவு. கடி—நறுமணம். குஞ்சிதம்—வளைவு. தாள்—பாதம்.

**64.** துழாய்முதல்—திருமால். துழாய்—துளசி. மறைமுதல்—பிரமதேவர். பனிப்பெய்த—நடுக்கமடைய. அல் ஆண்ட—கருமை மிகுந்த. அழல் ஆடும்—சுடலைத் தீயில் நடனமாடுதல். ஊழி—யுகம். முல்லையும்—சிறிது பொழுதும். அலக்கண்—துன்பம்.

**65.** குழைதூங்கு—குண்டலங்கள் தொங்கும். கழை—மூங்கில். கோமாரி—கௌமாரி—காளி. உருமுத்தீ—இடி. மழை—மேகம்.

மீனேற்றின் துவசத்தான்—மீனக்கொடியுடைய மன்மதன். தனி துஞ்ச—தனியே இறக்கும்படி. ஆனேற்றின் துவசம்—இடபக்கொடி. கான்—காடு. பைங்கூழின் கவளமா—பசுமையான பயிராகிய உணவாக.

பைந்துழாய் மவுலிப் பண்ணவன்—திருமால். பழிச்ச—வாழ்த்த. அறத்தின் புங்கவன்—கொடியாக உள்ள தருமதேவதை. முனியான்—சினங் கொள்ள மாட்டான்.

66. **தரவு** படவரவம்—பதஞ்சலி. தலையுவவு நிரம்பாது—பூர்ணிமைக்குரிய முழு உருவத்தையும் பெறாமல். நிரப்பு—குறைபாடு, வறுமை. (கலை குறைதலாகிய வறுமை)

**தாழிசை** பொன்மத்து—ஒருவகை ஊமத்த மலர். மிலைச்சி—சூடி. கள்—தேன். உமையாள்—உமாதேவி. கடு—நஞ்சு. முள் எயிற்ற—முள் போன்ற பற்களையுடைய. முழை—வளை.

சிலைக்கோடு—வில்வளைவு. பொரும்—போர் செய்யும். மருப்பு—கொம்பு. புகர்—புள்ளி. புகர்முகன்—விநாயகர்.

முழவுத்தோள்மலைக் கோடு—மத்தளத்தை ஒத்த தோள்களாகிய மலைச் சிகரம். கொலைக்கோடு—கொல்லுந் தொழிலையுடைய கூரிய தந்தம்.

அதாஅன்று—அதுவுமன்றி.

ஆர்ந்த—நிறைந்த. வேல் விடலை—வேலாயுதத்தைத் தாங்கிய முருகப் பெருமான். வடம் ஆர்ந்த—முத்துமாலைகள் நிறைந்துள்ள. விடர்—புண்பட்ட பள்ளம்.

கயாசுரன்—கஜமுகாசுரன். கடம்ஆர் வெங்கவுள் சிறுகண்—மதநீர் நிறைந்த கொடிய கன்னங்களும் சிறிய கண்களும்.

சிலைமுகம்—வில்லையொத்த புருவம். தடங்கண்—அகன்ற கண்களையுடைய உமாதேவி.

67. **தரவு** ஒரு நோக்கம் பகல் செய்ய—வலத்திருக்கண்ணாகிய சூரியன் பகலை உண்டாக்க. ஒரு நோக்கம் இருள் செய்ய—இடத் திருக் கண்ணாகிய சந்திரன் இருளை உண்டாக்க. கருநோக்கா வகை—கருவடையாதவாறு. ஞானத்திரு—ஞானமகள்.

**தாழிசை** கடிக்கமலப்பார்வை—மணம் பொருந்திய தாமரை மலர் போன்ற கண்களின் பார்வை. முடிக்க மலம் அறியாதேம்—மலம் முடிக்க

அறியாதேம். அடிக்கமலம்—பாதங்களாகிய தாமரை. முதற்றோழிலோன்—பிரமதேவன். இருக்கு ஓலம் இட்டும்—வேதம் முறையிட்டு முழங்கியும். நான்மறைக்குந் துறைகண்டார்—வியாச முனிவர். தோள்—(இங்கே) கை. மறித்தலை—ஆட்டின் தலை. மாமடிகள்—மாமனார்—தக்கன். உலகு—உயர்ந்தோர்.

68. **தரவு** தூல்முகத்த—கருக்கொண்ட. சுரிமுகங்கள்—சங்குகள். நிரைத்து—கூடி, வரிசையாக இருந்து. மழைக்குலங்கள்—மேகக்கூட்டங்கள். கான்முகத்த மதுகரத்தின் குலம்—காட்டிலுள்ள வண்டின் கூட்டம். கடி—நறுமணம். திருச்சிற்றம்பலம்—சிதம்பரத்திலுள்ள அழகிய சிற்சபை.

புற்புதம்—நீர்க்குமிழி. புலையுடம்பு—இழிவான உடம்பு. உடம்பின் இல் புதவு திறந்து—உடம்பாகிய வீட்டின் வாயிலைத் திறந்துகொண்டு. இன்பவீடு—முத்தி; மோட்ச வீடு. புதவு—கதவு. நறும்பொதுவில்—நல்ல பொன்னம்பலத்தில். நங்கை—உமாதேவி. அற்பு உதவும்—அன்பைத் தருகின்ற. அறவோய்—தருமவடிவையுடையவரே!

**தாழிசை** வியப்பு ஆமே—வியப்பு ஆகாது என்றபடி. உலகடங்க எரித்தல்—சர்வ சங்காரம் செய்தல். எயில் மூன்று—மூன்று புரங்கள்.

முனிவர் சேயிழையார்—தாருகாவனத்து முனிவருடைய மனைவியர்.

இருவர்க்கு அன்று—அரி, அயன் இருவருக்கும் அக்காலத்தில்.

**அராகம்** ஒரு குறியினில்—ஓர் அடையாளத்தால். குறியினை அலை—உருவத்தை உடையாயல்லை.

உளவயின்—உள்ள இடத்தில்; உள்ளத்தினிடத்தில். உரை அளவையின்—சொல்லளவினால்.

அவை உபயமும்—உருவமும் அருவமுமாகிய அவ்விரண்டும்.

**தாழிசை** கரணங்கள்—மனம், வாக்கு, காயம் என்பன. ஐந்து மெய்த்தொழில்—சிருட்டி, திதி, சங்காரம், திரோபவம், அனுக்கிரகம் என்பன.

சீர் ஆட்டு—சிறப்புடைய நடனம். சிறு மருங்குல்—சிறிய இடை. பேராட்டி—சிவகாமவல்லி.

மெய்த்துயரம்—உடம்பாலாகிய துயரம்; பிறவிப் பிணி.

**அம்போதரங்கம்** தமர்—உறவினர்.

**சுரிதகம்** குஞ்சித சரணம்—வளைந்த பாதம். மும்மலம்—ஆணவம், மாயை, கன்மம். மலக்குரம்பை—அழுக்கு நிறைந்த உடம்பு. வீடு—முத்தி.

69. பொல்லாமணி—துளையிடாத மாணிக்கம் போன்றவர். வம்மின்—வாருங்கள். புலவீர்காள்—புலவர்களே! மூத்தேவர் தேவை—பிரமன் விஷ்ணு, ருத்திரன் ஆகிய மூன்று தேவர்களுக்கும் தலைவனை. முகிலூர்தி முன்னான—மேக வாகனனாகிய இந்திரன் முதலான. புத்தேளிர்—தேவர்கள். ஆங் கற்பகக் கன்று—அழகிய கற்பக விநாயகர். தில்லைவனப் பூங்கற்பகம்—சிதம்பரத்தில் வீற்றிருக்கும் சிவபெருமான்.

70. இரு கூற்று உருவத்து—ஆணும் பெண்ணுமாகிய இரு பகுதிகளாகிய திருவுருவம் (கூற்று—கூறு) இருந்தண் பொழில்—பெரிய குளிர்ந்த சோலை. கூத்து—நடனம். கூற்றம்—எமன். மட நெஞ்சு—அறியாமையுள்ள மனம்.

71. கண்ணுதல் மீளி—நடராசப் பெருமான். கூளி—பேய்கள். குனிப்பது—ஆடுவது.

72. பானல்—குவளை மலர். பசுந்தோகை—பச்சை மயில் போன்ற உமாதேவி. சாருப்பியம்—சாருபத்தின் தன்மை. ஓர்திலார்—உணரமாட்டார்.

73. செவ்வாய்க் கருங்கட் பைந்தோகை—உமாதேவி. வெண்மதிச் சென்னியன்—சிவபெருமான். ஒவ்வாத் திருவுரு—பெண்ணும் ஆணுமாக இருத்தலின் ஒவ்வாத் திருவுரு எனக் குறிப்பிடப்பெற்றது. வாச்சியம்—பொருள். பைவாய்ப் பொறியரவல்குலெந்தாய்—அரவின் படம் போன்ற அல்குலை உடைய எந்தாயே என்றும், அரவை யணிந்த அல்குலையுடைய எம் தந்தையே என்றும் இரு பொருள்படச் சிலேடையாக அமைந்தமை காண்க.

**74.** கரும்பு—மன்மதனின் வில். சுரும்பு—வண்டு, இங்கு மன்மதன் வில்லின் நாண். அரும்பு—மன்மதனின் மலர் அம்பு. வேள்—மன்மதன். இரும்பு—இரும்பு போன்ற மனம். இறும்பூது—வியப்பு. பெரும்புலியூர் எம்பிரான்—தில்லை நடராசப் பெருமான்.

**75.** கூகா வென்று குரைப்பதல்லால்—யமன் வரும்போது அச்சமுற்றுக் கூகாவென்று கதறுவதல்லாமல்.

**76.** வையமீன்ற மறைக்கிழவன்—உலகத்தைப் படைத்த, வேதத்திற்கு உரிமையுடைய பிரமதேவர். கொய்துழாய் மவுலிக் குணக்கொண்டல்—துளசிமாலை தரித்த திருமால். தருவார் நீழல் தார்வேந்தன்—கற்பக மரத்தின் நிழலில் வசிக்கும் இந்திரன். மை தீர்—குற்றம் தீர்ந்த. மழ முனிவன்—உபமன்னியு முனிவராகிய குழந்தையையுடைய வியாக்கிரபாதர் பையர வரசு—பதஞ்சலி முனிவர். இமயம் பயந்த இளங்கொடி—பார்வதி தேவி. தமனியப் பொது—பொன்னம்பலம். கமலலோசனன்—தாமரைக் கண்ணனாகிய திருமால். அமளி—படுக்கையாகிய ஆதிசேடன். இங்கு ஆதிசேடனின் அவதாரமாகிய பதஞ்சலி முனிவரைக் குறித்தது. செங்கேழ்—செம்மை நிறம். அவன்—திருமால். ஆழிச்சேக்கை—திருப்பாற்கடலாகிய உறைவிடம், புலிக்கால் முனிவரன் புதல்வன்—புலியின் பாதம் போன்ற பாதங்களையுடைய வியாக்கிரபாத முனிவரது புதல்வராகிய உபமன்யு முனிவர். பாயலும் அமளியும்—படுக்கையும் கட்டிலும். 'நின் வாயிலின் வைகினன் என்றது தில்லைத் திருக்கோயிலின் முன்றிலில் கோவிந்தராசப் பெருமாள் எழுந்தருளியிருப்பதை நினைந்தது' என்று குறித்துள்ளார் தமிழ்த்தாத்தா உ. வே. சா. அத்திருமனை—அவ்வழகிய இருப்பிடமான திருப்பாற்கடலை. வீடுநல்குதல்—முத்தி வழங்குதல்; இல்லம் வழங்குதல்.

**77.** தாமரைக் கண்ணன்—திருமால். விழிக்கமலம் தர—திருமால் தனது விழியாகிய தாமரை மலரைச் சாத்த. அடித்தாமரைச் சுடர்ப்பரிதி அருளியமை—தாமரை மலர் போன்ற பாதப் பெருவிரலால் நிலத்தைக்கீறி ஒளி வீசும் சக்கராயுதத்தைச் சிவபெருமான் திருமாலுக்கு வழங்கியமை. தில்லை வாணன்—தில்லை நடராசப் பெருமான்.

உதவியின் வரைத்தோ—திருக்குறட் சொல்லாட்சி இப்பாடலில் இடம் பெற்றுள்ளமை நோக்கத்தக்கது.

குறள்: 'உதவி வரைத்தன்(று) உதவி உதவி
செயப்பட்டார் சால்பின் வரைத்து' (105)

78. பிணியென்று பெயராமே—நோய்க்கு இடமாகுமென்று அஞ்சி அகலாமல். மணிமன்று—தில்லைப் பொன்னம்பலம். என்னென்று பெயராமே—இது என்ன என்று சொல்லி அகன்று விடாமல். கன்னின்று—கல் நின்று. கல்—மலை. அரிதென்று பெயராமே—செய்தற்கு அருமை யாதும் என்று விட்டு விலகாமல். வரை—மலை. மணிமன்று, பொன் மன்று, திருமன்று என மன்றம் சிறப்பித்துக் கூறப்பட்டமை காண்க.

79. கொன்செய் கோலத்தான்—பெருமை, அழகு தருகின்ற வடிவத்தை உடையவன். மின்செய் தாள்தொழார்—ஒளிதரும் திருவடியை வணங்காதவர்கள். என்செய்கிற்பர்—என்ன செய்வார்கள்.

80. சென்றுமேவரும் தில்லை—யாவரும் சென்று அடைதற்கு அரிய தில்லைத்தலம். சென்றுமே வருந்து இல்லை—சென்று வருந்துதல் இல்லை. பரலோகமே ஒன்றினம்—எல்லாவற்றிற்கும் மேலதாகிய முத்தியுலகினை அடைந்தேம். இனம் பரலோகம் ஒன்று—இன்னும் வேறு உலகம் ஒன்றிலே.

தில்லை சென்று வணங்கிய அளவிலேயே முத்தி பெறலாம் என்பது பாடற் கருத்து.

81. அரசியல் கோடாது—அரசாட்சி செய்யும் நெறியில் சிறிதும் மாறுபடாது. அரனடியார்ப் பேணும்—சிவனடியார்களைப் பாதுகாக்கும். முரசியல் தானைவேல்—முரசையும் படையையும் வேலினையும். பரசோன்—மழுவாயுதத்தையுடைய சிவபெருமான். பொதுவில் காப்பு—தனிச்சிறப்பான காப்பு.

82. முத்தலைவேல்—திரிசூலம். பண்ணவன்—சிவபெருமான். விண்ணோர்—தேவர். வலன்—வல்லமை. மன்றவாணன்—சபையில் வதிபவன். அக்குல முனிபுதல்வன்—அந்த வியாக்கிரபாதரின் பிள்ளையான உபமன்யு முனிவர். அலைகடல்—பாற்கடல். நோக்கு—பார்வை.

83. வம்மின்—வாருங்கள். நமரங்காள்—நம்மவர்களே! உய்ம்மின்—உய்வடையுங்கள்; நற்கதி அடையுங்கள். உறுதி—பற்றுக்கோடு. பின் வழி—பிற்காலத்தில்.

84. சென்னி—தலை. மன்ற—உறுதியாக. துன்ற அறி மாந்தர்—நல்ல வழிகளை அறிந்த மனிதர்.

# பாடவேறுபாடுகள்

## செய்யுள்களின் பாடவேறுபாடுகள்

| பாடல் எண் | அடி, சீர் எண் | பாடம் (உ. வே. சா. பதிப்பு) | நூலகச்சுவடி |
|---|---|---|---|
| 2 | 2 | தாள்காணா ணாணுக் கொன | தாள்காணார் நாணுக் கொன |
| 6 | 2 : 2, 3 | புரிவ தறமாற் | புரிவதற மானாற் |
| 7 | 2 : 3 | காணாப் | காணாஉப் |
| 18 | 2 : 2, 3 | ஒருவற்கு நின்னோ...... | ஒருவர்க்கு நும்மோ |
| | 3 : 2, 3 | விழித்தலால் உய்ந்தே | விழித்தலான் உய்ந்தே |
| 23 | 1 : 3 | ஞிமிறுங் | மிஞிறுங் |
| | 2 : 1, 2 | தண்டே னிறைக்கு | தண்டே னுரைக்கு |
| | 3 : 3 | னிமயம் | னிமையம் |
| 27 | 2 : 1 | தன்பொற் | தம்பொற் |
| 28 | 2 : 4 | முழுவலத்த | மழுவலத்த |
| 33 | 2 : 1, 2 | அணைகநாட கற்கெம் | அணைகநாட கர்க்கெம் |
| 34 (3) | 2:1, 2 | ஆளாகு வாண்டான் | ஆளாகி யாண்டான் |
| 40 | 1 : 1, 2 | வெஞ்சம ணஞ்ச | வெஞ்சமன் வஞ்ச |
| 42 | 1 : 3, 4 | புனமயி லகவ | புனைமயி லகவ |
| | 8 : 3 | மணிமன் றுள் | மணிமன் றின் |
| 44 | 7 : 1, 2 | எரிநிறத் தைம்முகத் | எரிநிறத் தைமுகத் |
| | 9 : 2, 3 | மருந்து மொருவழிக் | மருந்து மோர்வழிக் |
| | 12 : 4 | கணியின் | கணியினக் |
| 47 (3) | 2:1, 2 | மின்னுஞ் சடைக்கு | பின்னுஞ் சடைக்கு |

| பாடல் எண் | அடி, சீர் எண் | பாடம்: உ. வே. சா. பதிப்பு | பாடம்: நூலகச்சுவடி |
|---|---|---|---|
| 48 | 1 : 4 | வான்மதிபோல் | வான்மதிபோல் |
| | 2 : 5, 6 | விளங்குந் தோற்றம் | விளங்கு தோற்றம் |
| 49 | 4 : 2 | மாதருக்குச் | மாதர்க்குச் |
| 54 | 3 : 1 | ஒருவனுக்கு | ஒருவருக்கு |
| 56 | 4 : 4 | யிற்கணித்தி | யிற்கணிக்க |
| 57 | 1 : 4 | மதர்வேர்கண் | மதர்வேற்கண் |
| 58 | தாழிசை (2) | | |
| | 4 : 1, 2 | வின்மார னுயிர்கொண்ட | வின்மார னுயிருண்ட |
| | சுரிதகம் | | |
| | 4 : 3, 4 | நெகிழ்ந்தன தோள்வளை | நெகிழ்ந்த தோள்வளை |
| | 5 : 3, 4 | தரளமுந் தீந்தன | தரளந் தீந்தன |
| 59 | தரவு | | |
| | 3 : 1, 2 | அந்தரதுந் துபிமுழங்க | அந்தரதுந் துமிமுழங்க |
| | தாழிசை (1) | | |
| | 2 : 1 | வன்மலையுங் | வன்மலையின் |
| | 3 : 2 | வெண்முகிலுங் | வெண்டுகிலுங் |
| | அராகம் (2) | | |
| | 4 : 2, 3 | விடமுன மமுதுசெய் | விடமுடன் அமுதுசெய் |
| | (3) 1 : 1 | விசையிலே | விசையிலெம் |
| | (4) 3 : 4 | வெதிர்தரு | வெதிர்வரு |
| | ஈரடி அம்போதரங்கம் | | |
| | 3 : 1, 2 | சொல்லொடு பொருளுமாய்த் | சொல்லொடும் பொருள்களாய்த் |
| | ஓரடி அம்போதரங்கம் | | |
| | 3 : 2,3,4 | விழைந்தவர்க் கின்பு மாயினை | விழைந்தவர்க் கின்ப மாயினை |

| பாடல் எண் | அடி, சீர் எண் | உ. வே. சா. பதிப்பு பாடம் | நூலகச் சுவடி |
|---|---|---|---|
| 61 | 4 : 2 | வபயத்தர் | வபையத்தர் |
| 62 | 3 : 2 | குழாத்தொடு | குழும்பொதுடு |
| | 6 : 3, 4 | வெள்விடைமேற் சேறலும் | வெள்விடைமேற் றோன்றலும் |
| | 19 : 4 | தரானென்றேற் | தராரென்றேற் |
| 64 | தரவு | | |
| | 1 : 2, 3 | திரடிண்டோட் டுழாய் முதலு | திரடிண்டோ ணடுமுதலு |
| 65 | தரவு | | |
| | 2 : 2, 3 | முலைக்கண்வைத் தேபெய்தா | முலைக்கண்வைத் தேணெய்தா |
| | 3 : 2 | குயிலேங்க | மயிலேங்க |
| 66 | தரவு | | |
| | 3 : 2 | கலைநிறையிற் | கலைநிறைவிற் |
| | தாழிசை (3) 1 : 4 | மணிமார்பில் | மணிமார்பின் |
| | (3) 4 : 1 | கடமார்வெங் | கடமாவெங் |
| 67 | தரவு | | |
| | 3 : 4 | செயுஞானத் | செய்ஞ்ஞானத் |
| | தாழிசை | | |
| | 2 : 3,4 | முடியிழந்தான் றனையிகழ்ந்த | முடியிழந்தான் றலையிழந்த |
| 68 | தரவு (2) | | |
| | 2 : 2 | திறந்திறவா | துறந்திறவா |
| | தாழிசை (2) | | |
| | 2 : 4 | வீறாமே | வீரமே |
| | அராகம் (2) | | |
| | 1 : 1 | உளவயி | உளவையி |
| | (3) 1 : 4 | வெனினரு | வெனிலரு |

| பாடல் எண் | அடி, சீர் எண் | பாடம் உ. வே. சா. பதிப்பு | நூலகச் சுவடி |
|---|---|---|---|
| | 2 : 3 | யுபயமுமலை | யுபையமுமலை |
| | (4) 1:2,3 | னுள துள தெனினில | லுள துள தெனிமில |
| | தாழிசை (6) | | |
| | 1 : 3 | யவளலால் | யவளல்லால் |
| 70 | 2 : 2 | கூத்தை | கூற்றை |
| | 3 : 2 | கூத்தை | கூற்றை |
| | 4 : 1 | பொருங்கூற்றந் | பொருகூற்றந் |
| 75 | 2 : 1, 2 | வென்னின் வரேமென | வென்னில் வரேமென |
| 76 | 19 : 3,4 | வைகின னணையொடும் | வைகின னைய |
| 77 | 2 : 2 | சுடர்ப்பரிதி | சுடர்ப்பருதி |
| 78 | (1) 2 : 1 | துணிநின்று | தணிவின்று |
| | (3) 3 : 1 | உருமன்ற | அருமன்றி |
| 79 | 1 : 1,2 | பொன்செய் மன்றில்வாழ் | பொன்செய்ம் மன்றில்வாழ் |
| 82 | 1 : 3,4 | பண்ணவற்கே யன்றி | பண்ணவற்கே யல்ல |
| 83 | 4 : 1,2 | பின்வழி நுமக்குப் | பின்மொழி நுமக்குப் |

# உரை - பாடவேறுபாடுகள்

| பாடல் எண். | உ. வே. சா. பதிப்பு | நூலகச்சுவடி |
|---|---|---|
| 1 | ...இது மலரென்னும் வாய்பாட்டான் முடிந்த ஒரு விகற்பக் குறள் வெண்பா. | ...இது மலரென்னும் வாய்பாட்டான் முடிந்தது. |
| 2 | ...மோனை முதலிய தொடையும்... | ...மோனை முதலாகிய தொடையும்... |
| | ...போலாது தொடுத்தமையால்... | ...போலாது தொடுத்தலின்... |
| 3 | ...அனுவெழுத்தால் இணை மோனையமைத்து... | ...அனுவெழுத்தினான் இணைமோனைபெற்று... |
| | ...தொடுத்தமையால்... | ...தொடுத்தலின்... |
| 4 | ...தொடுத்தமையால் அடியியைபு. | ...தொடுத்தமையான் அடியியைபுத் தொடை. |
| 5 | ...தொடுத்தமையால் அடி எதுகை. | ...தொடுத்தமையான் அடியெதுகைத்தொடை |
| | ...தொடுத்தமையால் இடையாகெதுகையுமாம். | ...தொடுத்தமையான் இடையாகெதுகையுமாம். |
| 6 | ...தொடுத்தமையால் இடைப் புணர் முரண். | ...தொடுத்தமையின் இடைப்புணர்முரண்தொடை. |
| 7 | ...ஒரூஉமோனை. | ...ஒரூஉமோனைத்தொடை. |
| 8 | ...நடத்தலால்... | ...நடத்தலான்... |
| 10 | ...தொடுத்தமையால் அடிமோனை. | ...தொடுத்தமையான் அடிமோனைத்தொடை. |
| | ...கடைமுரணுமாம். | ...கடைமுரண்டொடையுமாம். |

| பாடல் எண் | உ. வே. சா. பதிப்பு | நூலகச் சுவடி |
|---|---|---|
| 11 | ...மேற்கதுவாய்மோனை. | ...மேற்கதுவாய் மோனைத்தொடை. |
| | ...ஒற்றடுத்துநின்றும், தண் எனக் குற்றெழுத்து ஒற்றடுத்து நின்றும்... | ...ஒற்றடுத்தும், தண் எனக் குற்றெழுத்து ஒற்றடுத்தும் .. |
| 12 | தமிழ்வழக்கால்... | தமிழ்வழக்கான்... |
| | ...தொடுத்தமையால் இணைமோனை. | ...தொடுத்தமையான் இணைமோனைத் தொடை. |
| | ...வந்தமையால் இரண்டடியெதுகை யென்க. | ...வந்தமையான் இரண்டடி யெதுகை யென்க. |
| 13 | ...கடையிணைமுரண். | ...கடையிணை முரண்டொடை. |
| | இதனுள்ளே ஆ என நெட்டெழுத்தும், தி எனக் குற்றெழுத்தும், ஆ என உயிரெழுத்தும், ஓஒ என அளபெடையெழுத்தும், வெஃகேம் என ஆய்தவெழுத்தும், உணர்த்தியாம் எனக் குற்றியலிகரமும், அன்பு எனக் குற்றியலுகரமும், துறை என ஐகாரக் குறுக்கமும், வல்லெழுத்து மெல்லெழுத்து இடையெழுத்துக் களும், மெய்யும் உயிர்மெய்யுமாகிய அசைக்கு உறுப்பாமெழுத்துப் பதின்மூன்றுங் காண்க. | இதனுள்ளே தி எனக் குற்றெழுத்தும், ஆ என நெட்டெழுத்தும், ஓஒ என அளபெடையெழுத்தும், ஆ என உயிரெழுத்தும், வெஃகேம் என ஆய்தவெழுத்தும், உணர்ந்தியாம் எனக் குற்றியலிகரமும், அன்பு எனக் குற்றியலுகரமும், துறை என ஐகாரக்குறுக்கமும் ஆக அசைக்கு உறுப்பாமெழுத்துப் பதின்மூன்றுங் காண்க. |
| | ...பெறாதெனத் | பெறாவெனத் |
| | ...நின்றவாறு காண்க. | நின்றவாறுங் காண்க. |
| 14 | ...மூன்றாமெழுத்தொன்றெதுகை. | ...மூன்றாமெழுத்தெதுகை. |
| 15 | இதனுட் செம்பொ எனத் | இதனுள்ளே செம்பொன் எனத் |
| | ...ஆடகச்... | ...ஆடக... |
| 16 | ...வந்தமையால்... | ...வந்தமையான்... |

| பாடல் எண் | உ. வே. சா. பதிப்பு | நூலகச் சுவடி |
| --- | --- | --- |
| 17 | இஃது அடிதோறும் ஒரூஉத் தொடையமைய முதல் மூன்றடிகளினும் தனிச் சொற்பெற்றுப் பலவிகற்பத்தான் வந்த இன்னிசை வெண்பா. | இது அடிதோறும் ஒரூஉத்தொடை பெற்றுப் பலவிகற்பத்தான் வந்த இன்னிசை வெண்பா. |
| 18 | ...இஃது | ...இது... |
| | ...இதன் முதலடி... | ...இது முதலடி... |
| 19 | ...பொழிப்பு முரண். | ...பொழிப்பு முரண்தொடை. |
| | ...தொடுத்தமையால் கூழைமோனை. | ...தொடுத்தமையான் கூழை மோனை. |
| | ...தொடுத்தமையால் இனவெதுகை. | ...தொடுத்தமையான் இன வெதுகை. |
| 21 | ...மூன்றாஞ்சீரும் இரண்டாமெழுத்து ஒன்றத்... | ...மூன்றாஞ்சீரும் ஒன்றத்... |
| | ...தொடுத்தமையால் ஒரூஉவெதுகை. | ...தொடுத்தமையான் ஒரூஉ வெதுகை |
| 22 | இஃது ஒருவிகற்பத்து... | இது ஒருவிகற்பத்து |
| | ...தொடுத்தமையால் ஒரூஉவியைபு. | ...தொடுத்தமையான் ஒரூஉ வியைபு. |
| 23 | ...தொடுத்தமையால் இணையியைபு. | ...தொடுத்தமையான் இணையியைபு |
| | ...தொடுத்தமையால் இணையெதுகை. | ...தொடுத்தமையான் இணை யெதுகை. |
| | ...தொடுத்தமையால் ஒரூஉமுரண். | ...தொடுத்தமையான் ஒரூஉமுரண். |
| 24 | ஒரு விகற்பத்தால் வந்தமையால் ஒரு விகற்ப... | ஒருவிகற்பத்தான் வந்தமையான் ஒருவிகற்ப... |

| பாடல் எண் | உ. வே. சா. பதிப்பு | நூலகச்சுவடி |
|---|---|---|
| 25 | ...வந்தமையால் இருவிகற்ப ... | ...வந்தமையான் இருவிகற்ப ... |
| 26 | ...தொடுத்தமையால் இரட்டைத் தொடை. | ...தொடுத்தமையான் இரட்டைத் தொடை. |
| 27 | ...விகற்பத்தால் வந்த... | ...விகற்பத்தான் வந்த... |
| | இதன் முதலடியின் இறுதியெழுத்து இரண்டாமடிக்கு முதலாகவும், அவ்வடியின் இறுதிச்சீர் மூன்றாமடிக்கு முதலாகவும் தொடுத்தமையால் அந்தாதித்தொடை. | இது வோரடியின் இறுதியெழுத்துஞ் சீரும் மற்றையடிக்கு முதலாகத் தொடுத்தமையான் அந்தாதித் தொடை. |
| 28 | ...தொடுத்தமையால் உயிரெதுகை. | ...தொடுத்தமையான் உயிரெதுகை. |
| | இதன் முதலடி இறுதிச் சீரொழிந்து ஏனை முச்சீரும் முரணத் தொடுத்தமையால் கூழைமுரண். | * இப்பகுதி இல்லை. |
| 30 | இஃது அடியிரண்டாய்ச... | இது அடியிரண்டாய்ச்... |
| 31 | இஃது ஒழுகியவோசையும்... | இது ஒழுகியவோசையும்... |
| 33 | ...முடிந்தமையால் வெள்ளொத்தாழிசை. | ...முடிந்தமையான் வெள்ளொத்தாழிசை. |
| 34 | இதில் ஆளாக வாண்டானென முதலிருசீரும் முரணத் தொடுத்தமையால் இணைமுரண். | * இப்பகுதி இல்லை. |
| 37 | ...வந்தமையால் ஏழடி... | ...வந்தமையான் ஏழடி... |
| 38 | ...ஈற்றடி ஒருசீர் குறைந்து... | ...ஈற்றடி சிறிது குறைந்து... |
| 39 | ...இஃது அடிதோறும்... | ...இது அடிதோறும்... |
| | ...மூன்றடியால் வந்தமையால்... | ...மூன்றடியான் வந்தமையால்... |

| பாடல் எண். | உ. வே. சா. பதிப்பு | நூலகச்சுவடி |
|---|---|---|
| 41 | ...ஏனையவடி... | ...ஏனையடி... |
| | ...தொடுத்தமையால் அடிமுரண்.<br>இதனுள் பொதிந்த... | ...தொடுத்தமையான் அடிமுரண்<br>டொடை. இதனுள்ளே<br>பொதிந்த... |
| 42 | ...அளபெடுத்தமையால் | ...அளபெடுத்தமையான் |
| | அடியளபெடை. இதனுள்... | அடியளபெடைத்தொடை.<br>இதனுள்ளே... |
| 43 | ...தொடுத்தமையால்<br>இணைக்குறளாசிரியம்.<br>இவ்வகவலுள்... | ...தொடுத்தமையான் இணைக்<br>குறளாசிரியம். இவ்வகவலுள்ளே... |
| 44 | ...இதனுள்... | ...இதனுள்ளே... |
| | ...எரிநிறத் தைம்புகத்... | ...எரிநிறத் தைமுகத்... |
| | ...முரணத் தொடுத்தமையால்... | ...முரணத் தொடுத்துக்... |
| 46 | ...வந்தமையால் ஆசிரியத்... | ...வந்தமையான் ஆசிரியத்... |
| 50 | பதினான்கு சீராய் | பதினாற் சீராய் |
| 52&<br>53& | ...கழிநெடிலடியால்<br>வந்த... | ...கழிநெடிலடியான்<br>வந்த... |
| 54 | கழிநெடிலடியால் வந்த... | ...கழிநெடிலடியான் வந்த... |
| 55 | கழிநெடிலடியாய் வந்த... | ...கழிநெடிலடியான் வந்த... |
| 58 | இது தாழிசைக்கும் தனிச்சொற்கும்<br>இடையே... | இது தாழிசை<br>தனிச்சொற்கிடையே... |
| 59 | இது தாழிசைக்கும் அம்போதரங்<br>கத்திற்கும் இடையே<br>...வந்தமையால் வண்ணக... | இது தாழிசை<br>அம்போதரங்கட்கிடையே<br>...வந்தமையான் வண்ணக... |

| | | |
|---|---|---|
| 60 | ...முடிந்தமையால் வெண்கலிப்பா. | ...முடிந்தமையான் வெண்கலிப்பா. |
| 61 | ...இதனுள் நொ எனக் | ...இதனுள்ளே நொ எனக் |
| 63 | ...தனிச்சொல்லும்... | ...தனிச்சொற்... |
| 64 | இது தனிச்சொல்லும் சுரிதகமும் பெற்றுவந்த | இது தனிச்சொற் சுரிதகம் பெற்றுவந்த |
| 69 | இஃது இரண்டடியாய் | இது இரண்டடியாய் |
| 73 | வந்தமையால் வழிமுரண். | வந்தமையான் வழிமுரண்தொடை. |
| 76 | ...இதன் அடிதோறும் முதற் கண்ணே... | ...இதன் அடி முதற்கண்ணே... |
| 78 | ...வந்தமையால் வஞ்சித்தாழிசை. | வந்தமையான் வஞ்சித்தாழிசை. |

# உ. வே. சா. தம் பதிப்பில் காட்டிய செய்யுட்களின் பாடவேறுபாடுகள்

| பாடல் எண் | அடி, சீர், எண் | பாடம் |
|---|---|---|
| 6 | 1 : 4, 2 : 1 | மாதர்க் கணங்கு |
| 7 | 2 : 3 | கானூஉ |
| 27 | 2 : 1, 2 | தம்பொற் புயம்வேட்டேம் |
| 41 | 3 : 3, 4 | கற்பகத் தருவே |
| 44 | 9 : 2, 3 | மருந்தும் ஓர்வழிக் |
| 53 | 3 : 6, 7 | முகக்கை தொடவத் |
| 64 | 1 : 2, 3 | திரடிண்டோள் நடுமுதலு |
| 65 | 3 : 2 | குயினேங்க |
| 67 | தரவு | செய்ஞ்ஞானத் திருநோக்க |
| | 3 : 4 4 : 1, 2 | வருநோக்கம் |
| | தாழிசை 2 : 4 | தலையிழந்த |
| 68 | தரவு 2. 2 : 1, 2 | இற்புதவு துறந்திறவா |
| 72 | 1 : 3, 4 | பசுந்தோகை யேமெய்ப் |
| 73 | 3 : 2, 3 | சியத்தி னெடுத்திசைப் |

## இந்நூலின் உரையில் இடம்பெற்றுள்ள

# யாப்பிலக்கணக் கலைச்சொற்களின் அகரநிரல்

[எண்: பக்க எண்]


### அ

அகவல் 25, 54

அசை 51

அசைக்கு உறுப்பாமெழுத்துப் பதின்மூன்று 9

அசை கூனாய் வரல் 51

அடி 3, 4, 6, 7, 8, 10, 11, 19 20, 23, 24, 25, 26, 35 ... ... 50, 51

அடி கூனாய் வரல் 35

அடிமறி மண்டில ஆசிரியம் 27

அடிமுரண் தொடை 24

அடிமோனைத் தொடை 6

அடியளபெடைத் தொடை 25

அடியியைபுத் தொடை 3

அடியெதுகைத் தொடை 4

அந்தாதித் தொடை 18

அம்போதரங்க ஒத்தாழிசைக் கலிப்பா 35, 38

அம்போதரங்கம் 35, 37, 38

அராகம் 36, 45

அராகவுறுப்பு 38

அளபெடுத்தமை 25

அளபெடைத் தொடை 25

அளபெடையெழுத்து 9

அளவடி 25, 49

அறுசீர் 22, 23, 30

அறுசீர்க் கழிநெடிலடி 30

அனுமோனை 50

அனுவெழுத்து 3, 50

### ஆ

ஆசிடை—யிடுதல் 5

ஆசிரியத் தளை 24

ஆசிரியத் தாழிசை 27, 28

ஆசிரியத் துறை 28, 29, 30

ஆசிரியம் 24, 25, 26, 27

ஆசிரியம் மூன்றடிச் சிறுமை 24

ஆசிரிய வடி 51, 54, 55

ஆசிரியவடி அருகிவரல் 51

ஆசிரிய விருத்தம் 25, 30, 31

ஆசிரிய வுரிச்சீர் நான்கு 10

ஆய்த வெழுத்து 9

ஆறடித் தரவு 38

ஆறடிப் பஃறொடை வெண்பா 14

### இ

இடைப்புணர் முரண்தொடை 5

இடைமடக்காய் ஈற்றடி மிக்குவந்த நான்கடிக் கலித்தாழிசை 47

இடைமடக்கு 29, 30, 47

இடையாகெதுகை 4

இடையிட்டுத் தொடுத்தமை 25

இடையிடை குறைந்து இடைமடக்காய்
வந்த ஆசிரியத்துறை 30
இடையிடை குறைந்துவந்த
ஆசிரியத்துறை 29
இணைக்குறளாசிரியம் 25
இணைமோனை 3
இணைமோனைத் தொடை 8
இணையளபெடை
முதலாகிய விகற்பம் ஏழு 25
இணையியைபு 16
இணையெதுகை 16
இயற்சீர் 3, 5, 12, 15, 21
இயற்சீர் வெண்டளை 1, 21
இயற்றளை வெள்ளடி 26
இயற்றளை வெள்ளடியும்
வஞ்சியடியும் மயங்கிவரல் 26
இயைபு 15, 16
இயைபுத்தொடை 3
இரட்டைத்தொடை 18
இரண்டடியெதுகை 8
இரண்டாசிடை 6
இரண்டாமடி 9, 10
இரண்டாமடி குறைந்து இடை
மடக்காய் ஈற்றடி மிக்குவந்த
நான்கடிக் கலித்தாழிசை 47
இரண்டாமெழுத்து 4, 11, 14, 19
23...50
இரண்டாமெழுத்து நெட்டெழுத்து
வரல் 50
இரண்டு விகற்பத்தான் வந்த
இன்னிசைச் சிந்தியல்
வெண்பா 18
இரண்டு விகற்பத்தான் வந்த
இன்னிசை வெண்பா 11
இருகுறணேரிசை வெண்பா 3, 4
இருசீர் ஓரடி அம்போதரங்கம் 34, 37
இருசீர் ஓரடி எட்டு அம்போதரங்கம் 46
இருவிகற்பக் குறள்வெண்பா 2
இருவிகற்பத்து இருகுறணேரிசை
வெண்பா 4
இருவிகற்பத்து ஈராசிடை நேரிசை
வெண்பா 6
இருவிகற்பத்து ஓராசிடை நேரிசை
வெண்பா 5
இருவிகற்ப நேரிசைச் சிந்தியல்
வெண்பா 17
இரு விகற்பம் 2, 4, 5, 6, 8, 17
இன்னிசைச் சிந்தியல் வெண்பா
18, 19
இன்னிசை வெண்பா 6, 8, 10, 11
இனவெதுகை 13

ஈ

ஈரடி அம்போதரங்கம் 34, 37
ஈற்றடி 20, 23, 25
ஈற்றடி மிக்குவந்த கலித்தாழிசை 47
ஈற்றடிமிக்குவந்த நான்கடிக்
கலித்தாழிசை 47
ஈற்றயலடி 24, 28
ஈற்றயலடி குறைந்து வந்த
ஆசிரியத்துறை 28

ஈற்றயற்சீர் 11, 12, 14
ஈற்றுச்சீர் 3, 5, 6, 9

உ

உயிர் 19
உயிரெதுகை 19
உயிரெழுத்து 9

எ

எண்சீர்க் கழிநெடிலடி 31
எதுகை 1, 10, 14, 16, 23, 39
49, 50
எதுகைத் தொடை 4
எழுசீர்க் கழிநெடிலடி 31
எழுத்து 7, 9

ஏ

ஏழடிப் பஃறொடை வெண்பா 15, 16
ஏழடி வேற்றொலி வெண்டுறை 23
ஏனைத்தொடை 3, 8
ஏனைத்தொடை ஏழும் விகற்பம் இருபத்தெட்டும் 25
ஏனையடி 22, 24

ஐ

ஐகாரக் குறுக்கம் 9
ஐகாரம் 9
ஐந்தடிப் பஃறொடை வெண்பா 12, 13

ஒ

ஒத்தாழிசைக் கலிப்பா 32, 35, 38
ஒருபொருள்மேல் மூன்றடுக்கி ஈற்றடி மிக்குவந்த கலித்தாழிசை 47
ஒருபொருள்மேல் மூன்றடுக்கிவந்த ஆசிரியத் தாழிசை 28
ஒருபொருள்மேல் மூன்றடுக்கிவந்த வெள்ளொத்தாழிசை 21
ஒருவிகற்பத்து ஆறடிப் பஃறொடை வெண்பா 14
ஒருவிகற்பத்து இருகுறள் நேரிசை வெண்பா 3
ஒருவிகற்பத்து இன்னிசைச் சிந்தியல் வெண்பா 18
ஒருவிகற்பத்து இன்னிசை வெண்பா 6
ஒருவிகற்பத்து ஈராசிடை நேரிசை வெண்பா 6
ஒருவிகற்பத்து ஏழடிப் பஃறொடை வெண்பா 15
ஒருவிகற்பத்து ஐந்தடிப் பஃறொடை வெண்பா 12
ஒருவிகற்பத்து ஓராசிடை நேரிசை வெண்பா 5
ஒருவிகற்ப நேரிசைச் சிந்தியல் வெண்பா 17
ஒரு விகற்பம் 3, 5, 6, 12, 14, 17, 18
ஒரூஉத்தொடை 11
ஒரூஉமுரண் 16

ஒரூஉமோனைத்தொடை 5
ஒரூஉ வியைபு 15
ஒரூஉவெதுகை 14
ஒழுகிசைச் செப்பலோசை 1
ஒழுகியவோசை 19, 20
ஒற்று 7
ஒன்பதின் சீர்க் கழிநெடிலடி 31

ஓ

ஓசை 19, 20, 23
ஓரசைச்சீர் இரண்டு 7
ஓரடி அம்போதரங்கம் 37
ஓராசிடை 5
ஓரெதுகை 8
ஓரொலி வெண்டுறை 23
ஓரோசைத்து 23

க

கட்டளைக் கலித்துறை 48, 49
கடைக்கூழை முரண் 26
கடைமுரண்தொடை 6
கடையிணை முரண்தொடை 9
கருவிளங்காய் 8, 9
கருவிளம் 10
கலித்தளை 39, 41
கலித்தாழிசை 47
கலித்துறை 48
கலிப்பா 32, 35, 38, 44
கலியுறுப்பு ஆறு 38
கலிவிருத்தம் 49



கலிவெண்பா 40
கழிநெடிலடி 25, 30, 31
கனிச்சீர் 9
கனிச்சீர் வெள்ளையின் விரவி
வரலாகாமை 9

கா

காசென்னும் வாய்பாட்டுக்
குற்றியலுகர இயற்சீர் 3
காசென்னும் வாய்பாட்டு முற்றுகர
இயற்சீர் 15

கீ

கீழ்க்கதுவாய் முரண் 12
கீழ்க்கதுவாய் மோனை 11
கீழ்க்கதுவாயியைபு 15
கீழ்க்கதுவாயெதுகை 14

கு

குற்றியலிகரம் 9
குற்றியலிகரம் அலகு பெறாது 9
குற்றியலுகர இயற்சீர் 3
குற்றியலுகரம் 9
குற்றுகர இயற்சீர் 12
குற்றெழுத்து 7, 9, 39
குறள் 3, 5
குறள்வெண்செந்துறை 19, 20
குறள்வெண்டாழிசை 20
குறள் வெண்பா 2, 20

குறள்வெண்பாவினம் 20
குறளடி 25, 53, 51
குறளடி முதல் நான்கும் 25
குறளடி வஞ்சிப்பா 51
குறில் 7

கூ

கூவிளங்காய் 8
கூவிளம் 10
கூழைமுரண் 26
கூழைமோனை 13
கூழையியைபு 15
கூழையெதுகை 16
கூன் 35, 51

கை

கைக்கிளை மருட்பா 55

கொ

கொச்சகம் 41, 42, 44, 46

ச

சமனிலை 54

சி

சிஃறாழிசைக் கொச்சகம் 44
சிந்தடி 25, 52, 54
சிந்தடி வஞ்சிப்பா 52
சிந்தியல் வெண்பா 17, 18, 19, 21

சீ

சீர் 1, 6, 7, 8, 9, 13, 20

சு

சுரிதகம் 32, 35, 38, 41, 42, 44, 46

செ

செந்தொடை 2
செப்பலோசை 1, 20, 40
செப்பலோசை சிதைந்துவரல் 20
செவியறிவுறூஉ மருட்பா 56

த

தமிழ்வழக்கு 8
தரவிணைக்கொச்சகம் 42

தரவு 32, 36, 38, 41, 44, 45

தரவு கொச்சகம் 41, 42

தரவு மூன்றடிச் சிறுமை 32

தலையாகெதுகை 1

தளை 24, 39

தனிச்சீர் 9

தனிச்சொல் 3, 5, 6, 10, 11, 17, 18
23, 24, 32, 35, 37, 41, 42, 44, 46

தனிச்சொற் சுரிதகம் பெற்றுவந்த
தரவுகொச்சகம் 42

தனியே வந்த தரவு கொச்சகம் 41

தா

தாழிசை 27, 28, 32, 35, 36, 38, 44,
45, 46, 47, 53

தாழிசை இரண்டடிச்சிறுமை 32

து

துள்ளலோசை 39

துறை 19, 28, 29, 30, 48,
49, 53

தே

தேமா 10

தேமாங்காய் 8

தொ

தொடை 2, 3, 4, 5, 8, 13, 18, 24, 25

தொடை விகற்பம் 2, 3

ந

நடுவிருசீர் 5

நா

நால்வகை அம்போதரங்கம் 35

நாளென்னும் வாய்பாடு 7

நாற்சீர் ஓரடி அம்போதரங்கம் 34

நான்கடி 6

நான்கடிக் கலித்தாழிசை 47

நான்கடி வெண்டுறை 22

நான்கடி வெளிவிருத்தம் 24

நி

நிரையசை 21, 49

நிரையசைச்சீர் 8

நிரையசை நான்கு 7

நிரையசை முதலாகிய கட்டளைக்
கலித்துறை 49

நிரையொன்றாசிரியத்தளை 24

நிலைமண்டில ஆசிரியம் 26

நெ

நெட்டெழுத்து 7, 9, 50

நெடில் 7

நெடிலடி 25, 48

நெடிலெதுகை 50

நெடின் மோனை 50

நே

நேரசை 39, 48

நேரசைச்சீர் 7, 21

நேரசை நான்கு 7

நேரசை முதலாகிய கட்டளைக் கலித்துறை 48

நேரடி 26

நேரிசை ஆசிரியம் 24

நேரிசை ஒத்தாழிசைக் கலிப்பா 32

நேரிசைச் சிந்தியல் வெண்பா 17

நேரிசை வெண்பா 3, 4, 5, 6

நேரொன்றாசிரியத் தளை 24

ப

பஃறாழிசைக் கொச்சகக் கலிப்பா 44

பஃறொடை வெண்பா 12, 13, 14, 15

பதின்சீர்க் கழிநெடிலடி 31

பலவிகற்பத்தான் வந்த இன்னிசை வெண்பா 11

பலவிகற்பத்து ஆறடிப் பஃறொடை வெண்பா 14

பலவிகற்பத்து இன்னிசைச் சிந்தியல் வெண்பா 19

பலவிகற்பத்து இன்னிசை வெண்பா 8, 10

பலவிகற்பத்து ஏழடிப் பஃறொடை வெண்பா 16

பலவிகற்பத்து ஐந்தடிப் பஃறொடை வெண்பா 13

பலவிகற்பம் 8, 14

பி

பிறதளை 16, 39

பிறப்பெனும் வாய்பாட்டுக் குற்றுகர இயற்சீர் 12

பிறப்பெனும் வாய்பாட்டு முற்றுகர இயற்சீர் 5

பின்முரண் 32

பு

புளிமா 10

புளிமாங்காய் 8

புறநிலை வாழ்த்து மருட்பா 54

பொ

பொதுச்சீர் பதினாறு 51
பொழிப்பியைபு 16
பொழிப்பு முரண்தொடை 13
பொழிப்பு மோனை 10
பொழிப்பெதுகை 14

ம

மயங்கிசைக் கொச்சகம் 46
மருட்செந்தொடை 3
மருட்பா 54, 55, 56
மலரென்னும் வாய்பாடு 1

மா

மாஞ்சீர் 21

மு

முச்சீரோரடி அம்போதரங்கம் 34, 37
முதலடி 8, 12, 22, 23
முதலிடை கடையடிகள் 27
முதலெழுத்து 5, 6, 7, 8, 11
முதற்குறள் 5, 6
முதற்சீர் 5, 8
முதற்றொடை 4, 8, 19
முரண் 12, 13, 16, 23, 24, 26, 32, 48
முரண்தொடை 5, 6, 9, 13, 48
முற்றியைபு 15
முற்றுகர இயற்சீர் 5, 15
முற்றுமுரண் 23
முற்று மோனை 17
முற்றெதுகை 23

மூ

மூன்றடி வெண்டுறை 22
மூன்றடி வெளிவிருத்தம் 23
மூன்றாமடி 7, 11
மூன்றாமெழுத்து 10
மூன்றாமெழுத்தெதுகை 10
மூன்று விகற்பத்தான் வந்த
இன்னிசை வெண்பா 10

மெ

மெல்லினம் 13

மே

மேற்கதுவாய் முரண் 12
மேற்கதுவாய் மோனைத் தொடை 7
மேற்கதுவாயியைபு 15
மேற்கதுவாயெதுகை 14

மோ

மோனை 2, 3, 7, 10, 11, 13, 50
மோனைத் தொடை 5, 6, 7, 8

வ

வகையுளி 1
வஞ்சிச்சீர் நான்கு 51

வஞ்சித்தாழிசை 53
வஞ்சித்துறை 53
வஞ்சிப்பா 51, 52
வஞ்சியடி 26
வஞ்சியீற்றின்கண் அசை கூனாய் வரல் 51
வஞ்சிவிருத்தம் 54
வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பா 38
வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பா விற்கும் அம்போதரங்க ஒத்தாழிசைக் கலிப்பாவிற்கும் சிறுமை பெருமையின்றி ஆறடித்தரவு 38
வருக்கவெதுகை 11
வல்லொற்று 39
வல்லொற்றெதுகை 39
வழிமுரண்டொடை 48
வழியெதுகை 49

வா

வாய்பாடு 1, 3, 5, 7, 12 15
வாயுறை வாழ்த்து மருட்பா 55

வி

விகற்பம் 25
விட்டிசை 39
விட்டிசைத்தல் 39
விட்டிசை வல்லொற்றெதுகை 39
வியனிலை 55
விருத்தம் 23, 24, 30, 31, 49, 54
விழுமிய பொருள் 19, 20

வெ

வெண்கலிப்பா 39
வெண்சீர் நான்கு 8
வெண்சீர் வெண்டளை 1
வெண்டளை 1
வெண்டுறை 22, 23
வெண்பா 2, 3, 4, 5, 6, 7, 8, 10, 11 12, 13, 14, 15, 16, 17, 18, 19, 20 21, 39, 40, 54
வெண்பா இரண்டடிச் சிறுமை 1
வெள்ளடி 26, 54, 55
வெள்ளை 9
வெள்ளொத்தாழிசை 21
வெளிவிருத்தம் 23, 24

வே

வேற்றொலி வெண்டுறை 23
வேறோரெதுகை 8
வேறோரோசைத்து 23

# செய்யுள் முதற்குறிப்பு அகரநிரல்

[எண்: பக்க எண்]


அ

அங்கட் கமலத் 23
அங்கமலன் 34
அடிகொண்ட 41
அந்நலம் 37
அம்பேறுண் 21
அம்மநின் 44
அரசியல் 54
அரிதென்று 53
அருங்கலை 34
அருவமு 37
அருவருக்கு 31
அருவெளி 45
அறனன்று 2
அறிவினி 45
அற்புத மணிமன்றில் 39

ஆ

ஆங்கற் பகக்கன் 47
ஆடகச் செம்பொன் 10
ஆதி முதலுணர்ந்தியா 9

இ

இருகூற் றுருவத் 47
இருக்கோல 44
இலதெனி 45
இலவிதழ் 37
இன்னருளே 46
பருகசித23

உ

உண்டாங் கெனினு 29
உம்பர் பெருமாற் 18
உருவல 23
உலகமொ 36
உளவையி 45

எ

எண்பயிலா 45
எத்தொழிலும் 46
எவ்விடத்தில் 45
எவ்வுருவு 46
என்னென்று 53

ஒ

ஒரு நோக்கம் 44
ஒன்றி னம்பர 54

ஓ

ஓருருவாய் 45

க

கங்கைக்குக் 17
கடநாக 36
கடிக்கமலப் 44
கடித்தாமரைக் 52
கண்ணுதல் 3

கம்பக் கரடக் 17
கம்பைமாநதி 20
கருந்தாது 14
கருமிடற்றன் 19
கரும்புஞ் 49
கறையரவுக் 4
கறைவிட 36
கற்பனை கழன்றநின் 38
கனகமார் 21
கனம ளித்தபைங் 30

கா

காதல் மகளிர் 11
காமர் உயிர்செகுக்கும் 11
காளி யாடக் 47

கு

குழைதூங்கு 42

கூ

கூகா வென்று 49
கூற்றங் குமைத்த 6
கூற்றிருக்கு 23

கை

கைத்தலத்த 31

கொ

கொன்செய்த 32

கோ

கோமுனி 30
கோளாருண் 21

ச

சத்தமு மாகியச் 27

சி

சிலைக்கோடு 43
சிலைமுகங் 44
சிற்றம் பலத்து 27

சீ

சீராட்டு 46

சூ

சூன்முகத்த 45

செ

செக்கர் சடையிற் 12
செம்பொன் 19
செல்லார் 47
செவ்வாய்க் 48

சே

சேல்செய்த 39

சொ

சொல்லொடும் 37
சொன்மாலை 34

த

தண்ணென் 25
தந்தை நீ 46

தா

தாமடிகண் 44

தி

திங்கட் சடைக்கற்றைப் 29
திருமுடியிற் 3

தீ

தீர்த்த மென்பது 27

தே

தேரினை 34
தேன்மறிக்கும் 32

தொ

தொடலைக் 40
தொல்லுலகம் 36

ந

நலனழிந்து 34
நன்னிறங் 34

நா

நாகம் பொதிசடைமேல் 28
நான்மறைக்குந் 44

நி

நின்னலா 46

நீ

நீரிற் குமிழி 6

நெ

நெஞ்சகங் 46

ப

படர்தரும்வெவ் 22
பரசிருக்குந் 22
பருந்தளிக்கு 55
பலகலையுங் 44
பல்பேருழி 42

பா

பாடு வார்சிலர் 34
பாரித்த 33
பானற் கருங்கட் 48

பி

பிணியென்று 53
பிறையளிக்குஞ் 32
பின்றாழ் நறுங்கூந்தற் 20

பு

புற்புதமுந் 45
புனலமுவம் 8

பூ

பூஉந்தண்ண் 25
பூங்கொன்றைக் 1
பூந்தண் பசுந்துழாய்ப் 7

பெ

பெரியைநீ 37
பெருவெள்ளப் 45

பே

பேதைமீர் 33
பேரம் பலத்து 27

பை

பைந்துழாய் 42

பொ

பொற்றாது 24
பொன்னம் பலத்து 28
பொன்செய்ம் மன்றில்வாழ் 53
பொன்புரிந்த 13
பொன்மன்றம் 10

போ

போற்றுமின் 18

ம

மதுவிரி 32
மல்லாண்ட 41
மறைதங்கு 43

மா

மாயிரு விசும்பில் 26
மாயிரு ஞாலத்து 29
மாயையினால் 45

மீ

மீனேற்றின் 42

மு

முதிரா விளமுலை 35
முத்தேவர் 47
முத்தொழிலின் 37
முத்தொழிலின் முதற்றொழிலோன் 44
முருகுயிர்க்கு 32
முன்புல கீன்ற 20
முன்மலையுங் 36

மெ

மெய்த்துயரம் 46

மே

மேதக்க 45

வ

வணங்கு 5
வண்டுஞ் சுரும்பு 16
வம்மின் நமரங்காள் 55
வரத்திற் 5
வருநீலப் 36
வளங்கு லாவரு 31

வா

வாணோருண் 21
வாழி திருமன்றங் 6
வாழ்த்துமின் தில்லை 56
வானே நிலனே 15

வி

விசையிலெம் 37
விடமார்ந்த 43
வின்மதனை 14

வெ

வெஞ்சமன் 24
வெள்ளெருக்குங் 43

வை

வையமீன்ற 50

# எமது வெளியீடுகள்

| | |
|---|---|
| ஆலம்நபி கதைப்பாட்டு | 15-00 |
| தணிகைக் கலம்பகம் | 25-00 |
| சிவபாரத சரிதம் | 16-00 |
| இராசகோபாலமாலை | 18-00 |
| திருவேட்டைநல்லூர் ஐயனார் பள்ளு | 26-00 |
| குந்தமாலை | 40-00 |
| வெள்ளைப்பிள்ளையார் குறவஞ்சி | 8-00 |
| நாலுமந்திரி கும்மி | 15-00 |
| நாலடியார் உரைவளம் (பாகம்-I) | 90-00 |
| நாலடியார் உரைவளம் (பாகம்-II) | 75-00 |
| தனிப்பாடல் திரட்டு (பாகம்-I) | 30-00 |
| தனிப்பாடல் திரட்டு (பாகம்-II) | 40-00 |
| திருக்குறள் பழைய உரை | 25-00 |
| கணக்கதிகாரம் | 150-00 |
| ஆஸ்தானகோலாகலம் | 80-00 |
| பொன்னர் சங்கர் அம்மானை | 40-00 |
| திருக்குறள் ஜைன உரை | 75-00 |
| வைத்தியநாதஸ்வாமி திருவிளையாடல் | 8-00 |
| நாகை கனகசபைநாதன் உலா | 50-00 |
| மரியாதைராமன் கதைகள் | 22-00 |
| குசலவன் கதை | 15-00 |
| ஞானக்குறவஞ்சி | 20-00 |
| களாபூர்ணோதயம் | 40-00 |
| பரசமயகோளரியார் பிள்ளைத்தமிழ் | 14-00 |
| சுந்தரி அம்மானை | 12-00 |
| குமரேச சதகம் | 65-00 |
| அருகிரி அந்தாதி | 12-00 |
| பதிப்புநெறி முறைகள் | 10-00 |
| புல்லையந்தாதி | 12-00 |
| சோமயாகப் பெருங்காவியம் | 19-00 |
| இலக்கண விளக்கம் - எழுத்ததிகாரம் | 160-00 |
| தொல்காப்பியம் - சொல்லதிகாரம் | 100-00 |

# AN APPEAL

Manuscripts on Palmleaf or Paper of the ancient works of the wise men of the past, are the great treasures, solely inherited by the Nation and it is the moral obligation of persons who possess them to preserve them safely for the future generations of mankind.

Probably you have some of these in your possession or you know friends or neighbours who possess them. You can make a great contribution to the cause of the preservation not only of our National Culture but also to the Culture of Humanity as a whole by arranging to present such manuscripts to the famous T. M. S. S. M. Library, Thanjavur.

The Manuscripts so presented will be accepted and acknowledged with pleasure and gratitude by the authorities of the Library, preserved with meticulous care and made available to successive generations of readers and scholars for study and research. The hitherto unpublished works found among them, will be printed and published in due course, as facilities occur, with the expression of the Library's gratitude for your gift.

The great Scholar King of Tanjore, **Rajah Serfoji,** has attained immortal fame by dedicating enormous time and wealth to the expansion and firm establishment of this world famous **"Sarasvati Mahal Library"**. It is open to you to share the honour of Serfoji, in your own measure by contributing your manuscripts to the great institution built by him.

This great Honour is beckoning to you to accept it. Will you hasten to take it up? The Library waits for your answer.

**DISTRICT COLLECTOR AND DIRECTOR**

**Sarasvati Mahal Library,**

**Thanjavur.**